விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 வைகாசி 13 திங்கட்கிழமை (27.05.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 159

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே



## ரிஷாத், ஹிஸ்புல்லாவுக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு

### விசாரணை நடத்த சி.ஐ.டிக்கு பணிப்பு



(கொழும்பு)

அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா ஆகிய இருவரையும் விசாரணைக்கு உட்படுத்துமாறு குற்றப் புலனாய்வுப்

23ஆம் பக்கம் பார்க்க....




## சர்ச்சைக்குரிய வைத்தியருக்கு எதிராக குவியும் முறைப்பாடு

### நான்காம் மாடியில் வைத்து விசாரணை

(கொழும்ப)

சொத்துக் குவிப்பு விவகாரத்தில் கைதுசெய்யப்பட்ட குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரசவ மற்றும் மகப்பேற்று வைத்தியர் சேகு சிஹாப்தீன் மொஹம்மட்




23ஆம் பக்கம் பார்க்க....

# ரிஷாத், ஹிஸ்புல்லா

# உடன் பதவி விலகுக!

## மறுத்தால் பிரேரணைக்கும் ஆதரவு என ரெலோ கிடுக்குப்பிடி


**(வவுனியா)**

**அமைச்சர் ரிஷாத் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் உடனடியாக பதவி விலகுவதுடன், நீதியான விசாரணைக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என ரெலோ தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.**

அவ்வாறு, அவர்கள் விலக மறுத்தால், அவரை அரசாங்கம் பதவி விலக்க வேண்டும் என்றும், அதையும் மீறி ரிஷாத் பதியுதீன் விடாப்பிடியாக பதவியில் இருப்பாரானால் அவருக்கெதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணையை ஆதரிக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிலுள்ள ரெலோ தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கட்சியின் தலைமைக்குழு கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்

23ஆம் பக்கம் பார்க்க....




## பஞ்சாமிர்தத்தில் கருத்தடையா?

### மூதூரில் அநியாயம்

3ஆம் பக்கம் பார்க்க....

## இன்றும் நாளையும் முக்கிய தகவல்களை வெளியிடுவோம்!



(கண்டி)

இன்றும், நாளையும் விசேட ஊடகவியலாளர் சந்திப்புகளை நடத்தி முக்கியமான பல தகவல்களை வெளியிட எதிர்பார்த்துள்ளோம், அந்த தகவல்களினால் சில சமயம் பதற்றமான சூழல் ஏற்படலாம் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று கண்டியில் நடைபெற்ற பூஜை வழிபாடொன்றின் பின்னர்

23ஆம் பக்கம் பார்க்க....

## இலட்சத்தீவுக்கு தப்பினர் 15 ஐ.எஸ் பயங்கரவாதிகள்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 15 ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் படகு ஒன்றின் மூலம் இலட்சத்தீவை நோக்கிச் சென்றுள்ளனர் என இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



இதன் காரணமாக, இந்தியா

23ஆம் பக்கம் பார்க்க....

## வெடி மருந்து, பணம், தொலைபேசிகள், கத்திகள் நாரஹேன்பிட்டியில் நேற்று சிக்கின

### 100க்கும் மேற்பட்டோரை அள்ளியது பாதுகாப்புத் தரப்பு

(கொழும்பு)

இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து நாரஹேன்பிட்டியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளின் போது, வீடொன்றிலிருந்து இராணுவத்தினர் பயன்படுத்தும் முகமூடிகள் நான்கும் வீட்டில் பயன்படுத்துவதற்குத் தடை செய்யப்பட்ட கத்திகள் பத்தும் மற்றும் இலத்திரனியல் கருவிகள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 15 கிலோ கிராம் வெடி மருந்தும் ஒரு தொகைப் பணம், 29 தொலைபேசி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் இதுவரை 100க்

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஜூன் 21இல் கோத்தா முன்னிலை



(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டவர்களான லலித் மற்றும் குகன் ஆகியோரின் ஆள்கொணர்வு மனு மீது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னெடுக்கப்படும் விசாரணையில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, வரும் ஜூன் 21ஆம் திகதி

23ஆம் பக்கம் பார்க்க....

## ரயில் மோதி கடவையிலிருந்த முதியவர் பலி!

### கிளிநொச்சியில் துயரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இ ர ணை



23ஆம் பக்கம் பார்க்க....

## 1687 மத்ரஸாக்களில் 2161 வெளிநாட்டு போதகர்கள்

### ஐ.எஸ்.தொடர்புள்ளவர்களா என விசாரணை?

(கொழும்பு)

இலங்கையில் காணப்படும் 1687 இஸ்லாமிய மத்ரஸா பாடசாலைகளில் பாட போதனைகள் நடத்துவதற்கு முஸ்லிம் சமய விவகார திணைக்களம் மற்றும் அதன் அமைச்சு என்பவற்றின் அனுமதியின் கீழ் வெளிநாடுகளிலிருந்து இஸ்லாமிய போதகர்கள் 2161 பேர் இந்நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# முல்லைத்தீவு நீராவியடி பிள்ளையார் ஆலயம் சென்ற அடியவர்களுக்கு மீண்டும் அச்சுறுத்தல்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு பழைய செம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தில் நேற்று வழிபாடுகளை மேற்கொள்வதற்காகச் சென்ற உள்ளூர் மக்களுக்கு பொலிஸார் மற்றும் அங்கு அடாத்தாக விகாரை அமைத்துள்ள பிக்குவும் அச்சுறுத்தல் விடுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

நீராவியடி பிள்ளையார் ஆலயம் பல நூற்றாண்டுகளாக பழைய செம்மலை கிராம மக்களால் வழிபட்டு வரப்பட்டது. போருக்குப் பின்னர் ஆலய வளாகத்தில் பௌத்த பிக்கு ஒருவர் குடியேறி குருகந்த ரஜமகா விகாரை எனும் பெயரில் விகாரை ஒன்றை அமைத்து அங்கு பெரியளவிலான புத்தர் சிலை ஒன்றையும் வைத்துள்ளார்.

பிக்குவின் அத்துமீறலையடுத்து கடந்த சில மாதங்களுக்கு முன்னர் அந்தப் பகுதியில் இரு தரப்புகளுக்கும் இடையில் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக இந்த விவகாரம் தொடர்பில் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று இம் மாதம் 6ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

"இரண்டு தரப்பும் அந்தப் பகுதியில் உள்ள ஆலயங்களில் தடையின்றி சுதந்திரமாக வழிபாடுகளை மேற்கொள்ளலாம். நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்துக்கு வழிபாட்டுக்குச் செல்பவர்களுக்குப் பௌத்த பிக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது. இரண்டு தரப்பும் இந்த ஆலயங்களில் அபிவிருத்தி வேலைகளைச் செய்வதாக இருந்தால் உள்ளூர் திணைக்களங்களின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு உரிய அனுமதிகளைப்பெற்று மேற்கொள்ள வேண்டும்.

ஏற்கனவே நீராவியடி பிள்ளையார் ஆலயம் எனப் பெயர் சூட்டப்பட்டிருந்த பெயர்ப் பலகையை நீக்கி பௌத்த பிக்கு கணதேவி தேவாலயம் எனப் பெயர்ப்பலகை நாட்டியிருந்தார்.

அதனை மாற்றி மீண்டும் நீராவியடி பிள்ளையார் ஆலயம் என எழுதி மன்றுக்கு பொலிஸாரை நீதிமன்று அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இந்த உத்தரவை மீறினால் தண்டனைக்கு உட்படுத்தப்படுவீர்கள்" என்று முல்லைத்தீவு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த நிலையில் நேற்றைய தினம் நீராவியடி பிள்ளையார் ஆலயத்தைச் சேர்ந்த நிர்வாகத்தினரும் அடியவர்களும் உரிய உள்ளூர் திணைக்களங்களான வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கரைதுறைபற்று பிரதேச சபை ஆகியவற்றினதும் அனுமதிகளுடன் நீதிமன்றின் தீர்ப்புக்கு உட்பட்டு பிள்ளையார் ஆலயத்தின் இருமருங்கிலும் "நீராவியடி பிள்ளையார் ஆலயம்" எனும்பெயர்ப்பலகையை நாட்ட சென்ற வேளை பௌத்த பிக்குவும் விகாரைக்கு பாதுகாப்புக்கு அமர்த்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தரால் தடுக்கப்பட்டனர்.

மேலும் உடனடியாக பௌத்த பிக்குவால் பொலிஸாருக்கும் சிறப்பு அதிரடிப் படையினருக்கும் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு வருகைதந்த பொலிஸார் பௌத்த பிக்குக்குச் சார்பாகச் செயற்பட்டு ஆலயத்தில் வழிபாட்டுக்காகவும் நீதிமன்றின் உத்தரவை மதித்து பெயர்ப்பலகை நாட்ட வந்த செம்மலை கிராம மக்களை நிலத்தில் அமர்த்தி அனைவரினது பெயர், அடையாள அட்டை இலக்கம் என்பனவற்றையும் பதிந்ததோடு மிக நீண்டநேரம் விசாரணைகளிலும் ஈடுபடுத்தினர்.

மேலும் செய்தி சேகரிப்புக்காகச் சென்ற ஊடகவியலாளரை ஒளிப்படம் எடுக்கவேண்டாம் எனவும் ஊடகவியலாளர் என அடையாளப்படுத்திய பின்பும் பொலிஸார் வேண்டும் என்றே ஊடகவியலாளரின் அடையாள அட்டையை வாங்கி பதிவுகளை மேற்கொண்டதோடு ஒளிப்படம் எடுத்தும் அச்சுறுத்தல் விடுத்திருந்தனர்.

மேலும் பிள்ளையார் ஆலயத்துக்கு நேர் எதிராக உள்ள இராணுவ முகாமுக்கு அருகாக வீதியின் அருகில் புதிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டு அங்கே ஆயுதம் தாங்கிய படையினர் 24 மணிநேரமும் காவலில் அமர்த்தப்பட்டுள்ளனர். பௌத்த மத கொடிகளும் வெசாக் கூடுகளும் வேண்டும் என்று பிள்ளையார் ஆலயத்துக்குள்ளும் கட்டப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. (மு-3-281)

# 3000 படையினர் பெரும் தேடுதல்



(கொழும்பு)

ஆயிரக்கணக்கான இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் நேற்று முன்தினம் சுற்றிவளைப்பு தேடுதல்களில் ஈடுபட்டனர்.

பொலிஸாருடன் 3000 இற்கும் அதிகமான இராணுவத்தினர் இந்த தேடுதல்களில் ஈடுபடுத்தப்பட்டனர்.

கொழும்பு கூட்டு நடவடிக்கை பணியகத்தின் வழிகாட்டலில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நாட்டின் ஏனைய பகுதிகளிலும், இது போன்ற தேடுதல்கள், பிராந்திய பாதுகாப்பு படை தலைமையகங்கள் மட்டத்தில் மேற்கொள்ளப்படும் என்று இராணுவ பதில் பேச்சாளர் மேஜர் ஜெனரல் றொஷான் செனிவிரத்ன தெரிவித்தார். (மு-3)

# தேடுதலில் நிலத்தடி அறை கண்டுபிடிப்பு

(கொழும்பு)

வெலிபென்ன பொலிஸ் பிரிவில் இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து நடத்தியதேடுதலில், வீடொன்றில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நிலத்தடி அறை ஒன்றை கண்டுபிடித்துள்ளனர்.

வெலிபென்ன 4 மைல் கல், குருந்த, சுனாமி கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வீட்டைச் சோதனையிட்ட போது அதில் நிலத்தடி அறை இருப்பது தெரிய வந்துள்ளது.

குறித்த வீட்டின் உரிமையாளர் இதற்கு முன்னர் பல பாதாள உலக குற்றச்செயல்களுக்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவர் எனவும் ஏனைய பாதாள உலகக் குழுக்களுடன் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக இந்த இடத்தில் துப்பாக்கி பிரயோக சம்பவங்களும் நடந்துள்ளதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (மு-3)

# சீர்திருத்தப் பள்ளியில் இருந்து 17 வயதுப் பெண் தப்பிப்பு

## ஆளுநர் செயலகம் நடவடிக்கை

(மருதங்கேணி)

மருதங்கேணி அரச சீர்திருத்தப் பள்ளியில் இருந்து 17 வயதான பெண் பிள்ளை கடந்த வாரம் தப்பிச் சென்றார்.

இந்நிலையில் குறித்த பெண் பிள்ளையின் பெற்றோரால் யாழ். பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டு ஒரு கிழமை கடந்த நிலையிலும் குறித்த பெண்ணைப் பிடிக்க முடியவில்லை.

இச்சம்பவத்தின் பின்னணியில் குறித்த பெண்ணின் காதலன் மற்றும் தாயார் இருப்பதாக பெண்ணின் பெற்றோரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பில் பொலிஸார் அசண்டையீனமாகச் செயற்படுகின்றனரோ என காணாமல் போன பெண்ணின் உறவினர்களால் வலம்புரி பத்திரிகையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இதனை வடமாகாண ஆளுநர் செயலகத்தின் கவனத்திற்குகொண்டு வந்ததையடுத்து நேற்றைய தினம் குறித்த சீர்திருத்தப்பள்ளிக்கு வடமாகாண ஆளுநர் செயலணி சென்றுள்ளது.

குறித்த சீர்திருத்தப்பள்ளியின் பொறுப்பதிகாரிகளுடன் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் இன்று திங்கட்கிழமை குறித்த பெண்ணைத் தேடிக் கண்டறிந்து சீர்திருத்தப்பள்ளியில் ஒப்படைக்கும்படி ஆளுநர் செயலக அதிகாரிகளால் யாழ். பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. (மு-10)

# தலைமன்னாரில் கேரளக் கஞ்சா மீட்பு



(தலைமன்னார்)

தலைமன்னார் - உடப்பு கடற்பரப்பிலிருந்து 70 கிலோ கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினர் நேற்றுக் காலை குறித்த பகுதியில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் இந்த கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

குறித்த கேரளக் கஞ்சா வேறொரு இடத்திற்கு கொண்டு செல்லப்படுவதற்காக வைக்கப்பட்டிருந்தது என கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர். (மு-3)

# ஞானசாரரையும் தமிழ் அரசியல் கைதிகளையும் ஒன்றாக ஒப்பிட முடியாது- ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

ஞானசார தேரரையும் தமிழ் அரசியல் கைதிகளையும் ஒன்றாக ஒப்பிட முடியாது. அத்துடன் நாட்டில் மீண்டும் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள நிலையில் தமிழ் அரசியல் கைதிகளை எந்தக் காரணம் கொண்டும் விடுவிக்க முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்த பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்துள்ளார்.

ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பளித்து விடுதலை செய்ய முடியுமாயின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்களை ஏன் விடுதலை செய்யமுடியாது? என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, சபையில் நடைபெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "ஞானசார தேரர் பயங்கரவாதி அல்லர். அவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவரும் அல்லர். நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டே அவர் மீது முன்வைக்கப்பட்டு சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

நான் எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரைப் பொதுமன்னிப்பில் விடுதலை செய்ததில் தவறேதும் இல்லை.

ஆனால், சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மற்றும் தண்டனை அனுபவித்துவரும் அரசியல் கைதிகள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள். அவர்களுக்குத் தற்போதைய நிலைமையில் பொது மன்னிப்பு வழங்குவது கடினம்.

ஞானசார தேரருக்குப் பொது மன்னிப்பளித்து அவரை விடுவிக்குமாறு பௌத்த மத பீடங்கள், சிவில் அமைப்புகள் உட்பட பல வேறு தரப்புக்களும் என்னிடம் கோரி வந்தன. அதற்கமைய அவருக்கு நான் பொதுமன்னிப்பு வழங்கினேன்.

ஞானசார தேரருடன் அரசியல் கைதிகளை ஒப்பிட வேண்டாம். இவர் செய்த குற்றம் வேறு. அவர்கள் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றம் வேறு. இரண்டையும் ஒப்பிட வேண்டாம்.

தற்போது 200 இற்கு உட்பட்ட அரசியல் கைதிகள்தான் நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் உள்ளனர். ஏனையோர் படிப்படியாக விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சிறைகளில் உள்ள அரசியல் கைதிகளில் குற்றவாளிகளும் உள்ளனர், சந்தேகநபர்களும் உள்ளனர். குற்றவாளிகள் தண்டனையை அனுபவிக்கின்றார்கள். சந்தேகநபர்கள் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. இவர்கள் அனைவரினதும் விடுதலை விவகாரம் தொடர்பில் நாம் உயர்மட்ட பேச்சுக்களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றோம். அவர்களை வைத்து எவரும் அரசியல் செய்ய வேண்டாம்" என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (மு-3)

# இந்துக் கோயிலை இடித்து அழித்து மீன்சந்தை அமைத்தவர் ஹிஸ்புல்லா

## யாழில் யோகேஸ்வரன் எம்.பி காட்டம்

(யாழ்ப்பாணம்)

**1985 ஆம் ஆண்டு இந்து கலாசாரத் திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்ட பிள்ளையார் கோயிலை இப்போது கிழக்கு மாகாண ஆளுநராகவுள்ள ஹிஸ்புல்லா இடித்து அழித்து விட்டு மீன்சந்தை ஒன்றை அமைத்துள்ளார் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் குற்றம் சாட்டினார்.**



யாழில் நேற்று இடம்பெற்ற சங்கிலிய மன்னனின் 400 ஆவது ஆண்டு நினைவு தினத்தில் கலந்து கொண்டபோது ஊடகவியலாளரால் எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன முரண்பாட்டை ஏற்படுத்துவதற்கும் முஸ்லிம் இனவாதத்தை ஊக்குவிப்பதற்கும் ஆளுநர் ஹிஸ்புல்லா பல வழிகளிலும் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகிறார்.

இலங்கையின் அதியுயர் பீடமான பாராளுமன்றத்தில் கடந்த காலத்தில் ஹிஸ்புல்லா ஆற்றிய உரையின் பிரதிபலிப்புக்கு நாட்டில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்பு பட்டதாக அமைகிறது.

மேலும் தனக்குச் சார்பாக நீதிமன்றத் தீர்ப்பைப் பெறுவதற்காக நீதிபதியையே மாற்றியவர் ஹிஸ்புல்லா. அப்படிப்பட்ட ஒருவரை ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன ஆளுநராக நியமித்தமை பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன.

மகிந்த ஆட்சியை எதிர்பார்த்தது காத்திருக்கும் கருணா ,பிள்ளையான் போன்றோருடன் நெருக்காமான உறவைக் கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் துணை ஆயுதக் குழுக்களை உருவாக்குவதிலும் செயற்படுத்துவதிலும் திறமையானவர்.

2009 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் இயக்குகின்ற துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை ஒப்படைக்கும் நிகழ்வில் முஸ்லிம்களும் ஆயுதங்களை ஒப்படைத்தனர். அந் நிகழ்வில் கலந்து கொண்ட ஹிஸ்புல்லா முஸ்லிம்களிடம் ஆயுதம் இருப்பது தனக்குத் தெரியும் என பகிரங்கமாகக் கூறினார்.

இப்படியான நபரை என்ன காரணத்திற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பாதுகாக்கிறார்? இவர்களிடம் விரிவான விசாரணை மேற்கொண்டால் கிழக்கில் அரங்கேறிய பல்வேறு கொலை,கொள்ளைச் சம்பவங்களுக்கு நீதி கிடைக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (இ-10)

---

## அமைச்சர் றிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையால் அரசாங்கத்துக்குப் பாரிய நெருக்கடி

### மகிந்த சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக கூட்டு எதிரணியால் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றிகொள்ள முடியும் என்ற நம்பிக்கை தனக்கு இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணை ஊடாக அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வழி உருவாகும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

அரசாங்கத்திலுள்ள கிறிஸ்தவ அமைச்சர்கள் எவரும் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களிக்க மாட்டார்கள். அவ்வாறு எதிர்த்தால், அவர்களது சமூகத்துக்கு முகம் கொடுக்க முடியாமல் போகும்.

இந்த நிலைமையால் அரசாங்கம் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

நாடு முகம்கொடுத்துள்ள நிலைமையைக் கருத்தில் கொண்டு, இந்த அரசாங்கத்தை கலைத்து விட்டு பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதே மிக முக்கியமான தேவையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

---

## கைது செய்யப்பட்ட குருநாகல் வைத்தியர் குறித்த விசாரணை அறிக்கை இன்று

(குருநாகல்)

குருநாகல் வைத்தியசாலையில் பணியாற்றும் 42 வயதுடைய செய்கு சியாப்தீன் மொஹமட்சாபி என்ற வைத்தியர் தொடர்பில் இன்று இடம்பெறவுள்ள இலங்கை மருத்துவ சபையின் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த வைத்தியர் தொடர்பில் ஆராய்வதற்கான ஒருசிறப்புக் குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இக்குழுவின் ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை சுகாதார அமைச்சுக்கு இன்று வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, செய்கு சியாப்தீன் மொஹமட் சாபி என்ற வைத்தியர் இதுவரை 8 ஆயிரம் சத்திர சிகிச்சை செய்ததாக ஒப்புக் கொண்டதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் நேற்று, முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் குறிப்பிட்டிருந்தார். (இ-7)

---

## தமிழ்ப் பெயரை வைத்து ஆலயத்தில் அரங்கேற்றிய நாடகம் அம்பலம்!

### பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரைகளா? முஸ்லிம் நபரிடம் பொலிஸார் தீவிர விசாரணை

(மூதூர்)

மூதூர் கிளிவெட்டி முத்து மாரியம்மன் ஆலயத்தில் தமிழ்ப் பெயரில் ஆலயக் குருக்களுக்கு உதவியாளராகச் செயற்பட்ட நபர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் மூதூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்தநபர் ஆலயத்துக்கு வரும் பக்தர்களுக்கு வழங்கப்படும் பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரைகளைக் கலந்து கொடுத்தாரா? என்று பக்தர்கள் எழுப்பிய சந்தேகத்தையடுத்து அது தொடர்பில் ஆலய நிர்வாக சபையினரை அழைத்து நேற்று முன்தினம் மூதூர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஏறாவூரைச் சேர்ந்த நபர் ஒருவர், தனது சொந்தப் பெயரை மறைத்து சிவா என்ற தமிழ்ப் பெயரில் கிளிவெட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தின் பூசகருக்கு உதவியாளராக கடந்த 2 வருடங்களாகப் பணியாற்றி வந்தார்.

இவர் பூஜையின் போது பக்தர்களுக்கு வழங்கும் பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரைகளைக் கலந்து கொடுத்து வந்துள்ளதாக பக்தர்கள் சிலர் சந்தேகங்களை எழுப்பினர்.

இந் நிலையில் குறித்த நபர் கடையொன்றில் கையடக்க தொலைபேசிக்கான அட்டைகளை திருடி சேருவில பகுதியில் விற்ற போது கைது செய்யப்பட்டார். இவரை மூதூர் பொலிஸார் விசாரணைக்குட்படுத்திய போது, மேற்படி நபர் தமிழர் அல்லர் என்றும் முஸ்லிம் எனவும் போலியான பெயரில் அங்கு பணிபுரிந்தது வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

அதுமட்டுமன்றி இவரைப் புலனாய்வுப் பிரிவினர் தொடர்ந்து அவதானித்து வந்த நிலையில், இவர் ஏறாவூருக்கு தனது தாயாரின் வீட்டுக்குச் சென்று அங்குள்ள பள்ளிக்கு தொழ சென்ற வேளையில் இவர் முஸ்லிம் நபர் என்பது ஊர்ஜிதமாகியுள்ளது.

இதற்கிடையில் இவர் பற்றிய ஒரு தகவல் முகப்புத்தக நூலில் வெளிவந்த போது தான் தமிழர் தான் முஸ்லிம் அல்ல என மறுத்துரைத்து தன்மீது பொறாமை உள்ளவர்களே இந்த முகநூலை வெளியிட்டுள்ளார்கள் எனத்தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி தனியார் நிறுவனமொன்றில் ஆசிரியராகக் கடமையாற்றி முஸ்லிம் பெண் ஒருவரை திருமணம் முடித்ததற்காகவே தான் ஊரை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இவர் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக மூதூர் பொலிஸார் ஆலய குருக்களையும் பரிபாலன சபையினரையும் நேற்று முன்தினம் சனிக்கிழமை அழைத்து விசாரணைகளை செய்துள்ளனர்.

இதேவேளை கிளிவெட்டி முத்துமாரியம்மன் ஆலயத்தில் குருக்களுக்கு உதவியாளராக குறித்த நபர் சேர்ந்து கடந்த 2 வருடங்களாக இந்த ஆலயத்தில் பணியாற்றி வந்துள்ளதோடு மேற்படி குருக்களிடமிருந்தே குறிக்கப்பட்ட பணத்தை சம்பளமாக பெற்று வந்துள்ளார் எனவும் ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்தனர். இவர் பஞ்சாமிர்தத்தில் கருத்தடை மாத்திரையை கலந்துள்ளமை தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மூதூர் பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கும் சிவா என்று அழைக்கப்படும் குறித்த நபரின் உண்மையான பெயர் புஹாரி முகமது லபீர் கான் என்றும் இவர் ஏறாவூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரென்றும் ஏற்கனவே மூன்று திருமணங்கள் செய்துள்ளார் எனவும் தெரிய வருகிறது.

மூத்த மனைவி ஓட்டமாவடி மீராவோடையைச் சேர்ந்த அபுல் ஹசன் சுபாஹனி என்றும் இரண்டாவது மனைவி மட்டக்களப்பு கரடியனாற்றைச் சேர்ந்த நல்லதம்பி சாந்தியென்ற தமிழ் பெண் என்றும் மூன்றாவதாக திருமணம் செய்தவர் கல்முனையைச் சேர்ந்த ஏ.ஜே.எப்.சனா என்றும் தெரிய வருகிறது.

இவர், வன்புணர்வு மற்றும் ஜீவனாம்சம் வழங்காமை ஆகிய குற்றச்செயல்கள் காரணமாக நீதிமன்ற வழக்குக்கு உட்படுத்தப்பட்டுள்ளாவர் என்றும் இவரது கையடக்க தொலைபேசியை பரிசீலித்த போது ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய சில தகவல்கள் கண்டறியப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# உலகக்கிண்ண பயிற்சிப் போட்டிகள் மழை காரணமாக இரத்து



பங்களாதேஸுடனான நேற்றைய பயிற்சிப் போட்டியில் 51 ஓட்டங்களை விளாசிய தென்னாபிரிக்காவின் அம்லா

இங்கிலாந்தில், வரும் 30ல் ஐ.சி.சி., உலக கோப்பை கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் 'நடப்பு சம்பியன்' அவுஸ்தி ரேலியா, இந்தியா, நியூசிலாந்து உள்ளிட்ட 10 அணிகள் பங்கேற்கின்றன. இத்தொடருக்கு தயாராகும் வகையில் ஒவ்வொரு அணிகளும் பயிற்சி ஆட்டத்தில் விளையாடி வருகின்றன.

பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான பயிற்சி போட்டி கார்டிப் நகரில் நடக்க இருந்தது. ஆனால் கனமழையால் 'நாணயச்சுழற்சி' கூட போடாத நிலையில் போட்டி ரத்து செய்யப்பட்டது. பங்களாதேஷ் அணி, தனது 2வது பயிற்சி ஆட்டத்தில் (இடம்: கார்டிப்) இந்தியாவை நாளை சந்திக்கிறது. பாகிஸ்தான் அணி, தனது முதல் பயிற்சி போட்டியில் ஆப்கானிஸ்தானிடம் வீழ்ந்தது.

**பாதியில் ரத்து**

பிரிஸ்டல் நடந்த பயிற்சி போட்டியில் தென்னாபிரிக்கா, மே.தீவுகள் அணிகள் மோதின. 'நாணயச்சுழற்சியில்' வென்ற மே.தீவுகள் அணியின் தலைவர் ஹோல்டர் களத்தடுப்பை தேர்வு செய் தார்.

தென்னாபிரிக்க அணி 9.3 ஓவர்களில், விக்கெட் இழப் பின்றி 60 ஓட்டங்களை எடுத் திருந்தபோது மழை 'குறுக்கிட போட்டி நீண்ட நேரம் தடைபட்டது. மழை நின்ற பின், தலா 31 ஓவர்கள் கொண்ட போட்டியாக நடத்தப்பட்டது. தோமஸ் பந்தில் தொடர்ச்சியாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த அம்லா, அரைச்சதத்தை பதிவு செய்தார்.

தென்னாபிரிக்க அணி 12.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 95 ஓட்டங்களை எடுத்திருந்த போது மீண்டும் மழை குறுக்கிட்டது. இதனால் போட்டியை நடத்த முடியாத சூழ்நிலை உருவானது. இதனை யடுத்து போட்டியை பாதியில் ரத்து செய்வதாக நடுவர்கள் அறிவித்தனர்.

பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகள் மோத இருந்த உலக கிண்ணத் தொடருக்கான பயிற்சி போட்டி மழையால் ரத்து செய்யப்பட்டது. இதேபோல, தென்னா பிரிக்கா, மே.தீவுகள் அணிகள் மோதிய போட்டி மழையால் பாதியில் கைவிடப் பட்டது.




# இலங்கை அழைப்பு ஜெயவர்த்தன நிராகரிப்பு

உலக கிண்ணத்தில் உதவ இலங்கை அணி விடுத்த அழைப்பை, முன்னாள் வீரர் ஜெயவர்தன நிராகரித்துள்ளார்.



இங்கிலாந்து மண்ணில் இன்னும் சில நாட்களில் (மே 30) உலக கோப்பை கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகிறது. ஒவ்வொரு அணியும் கிண்ணம் வெல்ல களத்தில் குதித்துள்ளன. இதற்கேற்ப, அணி நிர்வாகம் முன்னாள் வீரர்களை உதவிக்கு அழைத்துள்ளது. ஆனால், இலங்கை முன்னாள் கேப்டன் ஜெயவர்தனே, தேசிய அணியின் அழைப்பை நிராகரித்துள்ளார். சமீபத்தில், பிரிமியர் லீக் தொடரில் மும்பை அணிக்கு கிண்ணம் வெல்ல பயிற்சியாளராக இவர் உதவினார்.

இது குறித்து ஜெயவர்தன கூறுகையில்," உலக கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கு உதவ, நிர்வாகம் எனக்கு அழைப்பு விடுத்தது. எந்த மாதிரியான பொறுப்பு தரப்படும் என்றும் தெரியவில்லை. பல பணிகள் இருப்பதால், இதை ஏற்க மறுத்துவிட்டேன். அணியை தேர்வு செய்து முடித்துவிட்டனர். இதற்கு மேல் நான் என்ன கூடுதலாக செய்துவிடப்போகிறேன்.


**வயதான அணி**

கடந்த ஆண்டு முன்னாள் வீரர்கள் சங்ககரா, அரவிந்த் டி சில்வாவுடன் இணைந்து உள்ளூர் போட்டிக்கான மாற்றத்தை உருவாக்கினோம். இதை இலங்கை கிரிக்கெட் சபை நிராகரித்துவிட்டது. எங்களின் எட்டு மாத உழைப்பு வீணாகிப்போனது. முதல் தர போட்டியில் பங்கேற்கும் சில அணிகளில், வீரர்களின் சராசரி வயது 25 ஆக உள்ளது. இது மிகவும் மோசமானது. 'சீனியர்' வீரர்கள் அடுத்த தலைமுறையினரை வழிநடத்த வேண்டும்.

**'நொக் அவுட்' நிலை**

உலக கிண்ணத் தொடரில் ஒவ்வொரு அணியும் மற்ற அணிகளுடன் மோத வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு போட்டியும் 'நொக் அவுட்' போல இருக்கும். குறைந்தபட்சம் 5 லீக் போட்டிகளில் வெல்ல வேண்டும் என இலக்கை நிர்ணயிக்க வேண்டும். இதன் மூலம், அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்யலாம். இலங்கை அணி சாதித்து காட்டும் என நம்புகிறேன்.

இங்கி லாந்து வீரர்களின் 'போரம்' சிறப்பாக உள்ளது. இந்தியா, அவுஸ்திரேலிய அணியில் பந்துவீச்சாளர்கள் அசத்துகின்றனர். பாகிஸ்தான் அணியும் கிண்ணம் வெல்ல வாய்ப்பு அதிகம். இவ்வாறு ஜெயவர்தன கூறினார்.



ஆஸியுடனான போட்டியில கையில் காயமடைந்தஇங்கிலாந்துவீரர்டவ்சன்

# வோர்ன் வாக்கு சுத்தம்

அவுஸ்திரேலிய 'சுழல் மன்னன்' ஷேன் வோர்ன், எதையும் சரியாக கணிப்பார். கடந்த 1999ல் நடந்த உலக கோப்பை தொட ரில் இவர் சொன்னது அப்படியே நடந்தது. இத்தொடரின் மிக முக்கியமான 'சுப்பர் 6' போட்டியில் அவுஸ்திரேலியா, தென்னா பிரிக்க அணிகள் மோதின.



ஷேன் வோர்ன்

இதில் வென்றால் மட்டுமே அரையிறுதிக்கு முன்னேற முடியும் என்பதால் அவுஸ்திரேலிய அணியினர் 'டென்ஷனாக' இருந்தனர்.

போட்டி ஆரம்பமாவதற்கு முன், கடைசி கட்ட ஆலோசனை நடந்தது. அப்போது வோர்ன், "தென்னாபிரிக்காவின் கிப்ஸ் கையில் பந்து தஞ்சம் புகுந்தால், யாரும் அவசரப்பட்டு வெளி யேறாதீர்கள். பந்தை பிடித்ததும், அதைத் தக்க வைக்காமல் மேலே தூக்கி எறிந்து மகிழும் பழக்கம் அவருக்கு உண்டு. அப்படி செய்யும் போது சில நேரங் களில் கைநழுவலாம்," எனக் கூறினார். இதனை சக வீரர்கள் அலட்சியப்படுத்தினர்.

பின், போட்டியின் போது அவுஸ்திரேலிய அணித் தலை வர் ஸ்ரீவ் வோ, பந்தை தூக்கி அடித்தார். அதை அரை குறையாக பிடித்த கிப்ஸ், வழக்கம் போல மேலே தூக்கிப் போட முயன்றார். அதற்குள் கைநழுவ, பந்து கீழே விழுந்தது. இதனையடுத்து தென்னாபிரிக்க அணியினர் சோகத் தில் மூழ்கினர்.

அப்போது கிப்ஸை பார்த்து, "நீங்கள் 'கேட்ச்சை' அல்ல, உலக கிண்ணத்தையே நழுவவிட்டீர்கள்," என, ஸ்ரீவ் வோ சொன்னாராம். அரிய வாய்ப்பை பயன்படுத்திய ஸ்ரீவ் வோ சதம் அடிக்க, அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது. கிப்ஸ் பற்றி முன் கூட்டியே கணித்த வோர்ன், சக வீரர்களின் பாராட்டை பெற்றார்.

**தெரியுமா?**

உலக கிண்ண அரங்கில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றிய சுழற்பந்து வீச்சாளர்கள் பட்டியலில் இலங்கையின் முரளிதரன் முன்னிலை வகிக்கிறார். இவர், 40 போட்டியில், 68 விக்கெட் கைப்பற்றி உள்ளார். அடுத்த மூன்று இடங்களில் முறையே நியூசிலாந்தின் டானியல் வெட்டோரி (36 விக்கெட்), அவுஸ்திரேலியாவின் பிரட் ஹொக் (34). ஷேன் வோர்ன் (32) உள்ளனர்.

# பிரெஞ்ச் ஓபன் பெடரர் வெற்றி



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் சுவிட்சர் லாந்தின் பெடரர் வெற்றி பெற்றார். ஜேர்மனி வீராங்கனை கெர்பர் அதிர்ச்சி தோல்வியடைந்தார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில், நடப்பு ஆண்டின் 2வது கிராண்ட்ஸ்லாம் தொடரான பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் நடக்கிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் சுவிட் சர்லாந்தின் ரோஜர் பெடரர், இத்தாலி யின் லாரென்சோ சோனேகோ மோதினர். ஒரு மணி நேரம், 41 நிமிடம் நீடித்த போட்டி யில் அசத்தலாக ஆடிய பெடரர் 6-2, 6-4, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் ஜப்பானின் கெய் நிஷிகோரி, பிரான்சின் குயின்டின் ஹலிஸ் மோதினர். இதில் நிஷிகோரி 6-2, 6-3, 6-4 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். கிரீஸ் வீரர் ஸ்டெபானஸ் டிசிட்சிபாஸ் 6-2, 6-2, 7-6 என, ஜேர்மனியின் மேக்சிமிலியன் மார்டெரரை தோற்கடித்தார். குரோஷியாவின் மரின் சிலிச் 6-3, 7-5, 6-1 என்ற கணக்கில் இத்தாலியின் தாமஸ் பேபியானோவை வென்றார்.

**கெர்பர் அதிர்ச்சி**

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் ஜேர்மனியின் கெர்பர், ரஷ்யாவின் அனஸ்டாசியா பொடபோவா மோதினர். ஒரு மணி நேரம், 13 நிமிடம் நீடித்த போட்டியில் ஏமாற்றிய கெர்பர் 4-6, 2-6 என்ற நேர் செட் கணக்கில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

மற்றொரு போட்டியில் ஸ்பெயினின் கார்பைன் முகுருஜா, அமெரிக்காவின் ரெய்லர் டவுன்சென்ட் மோதினர். ஒரு மணி நேரம், 59 நிமிடம் நீடித்த போட்டியில் முகுருஜா 5-7, 6-2, 6-2 என்ற கணக்கில் வெற்றி பெற்றார். ரஷ்யாவின் ஸ்வெட்லனா கஸ்னட் சோவா 4-6, 2-6 என, சுலோவோக்கியாவின் கிறிஸ்டினா குகோவாவிடம் வீழ்ந்தார்.

# ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பழிவாங்குவது நியாயமா?

## ஐ.தே.கவிடம் உலமா கட்சி கேள்வி

(கொழும்பு)

அண்மைய தற்கொலை குண்டு வெடிப்புக்கு ஒட்டு மொத்த முஸ்லிம் சமூக மும் காரணம் அல்ல என உறுதிப்படுத்தப்பட்ட பின்பும் பிரதமர் ரணில் தலைமை யிலான ஐக்கிய தேசிய கட்சி ஒட்டுமொத்த முஸ்லிம்க ளையும் பழிவாங்குவது நியாயமா என உலமா கட்சி கேள்வியெழுப்பியுள்ளது.

உலமா கட்சி நேற்று விடு த்துள்ள ஊடக அறிக்கையி லேயே மேற்கண்டவாறு கேள்வி எழுப்பியுள்ளது.

பயங்கரவாதி சஹ்றா னின் பின்னணியில் உள் ளோரையும் ஐ.எஸ்ஸுடன் தொடர்புள்ளோர் என்ற சந் தேகத்தில் உள்ளவர்களை யும் முஸ்லிம்கள் காட்டிக் கொடுத்தும், தற்கொலை செய்துகொண்டோரின் உடல் களை எமது மைய வாடிக ளில் அடக்கம் செய்யவும் மாட்டோம் என அகில இல ங்கை ஜம்மிய்யத்துல் உலமா கூறியும் குருநாகல், நீர் கொழும்பு, கம்பஹா மாவ ட்ட முஸ்லிம்களின் தாக்கி யமை மிகப்பெரிய அநியாய மாகும்.

அத்துடன் நிற்காமல் அரபிக்கல்லூரிகளை அர சுடைமை ஆக்குதல், அரபு மொழியில் தனியார் பெயர் பலகை வைக்க தடைச்சட் டம், முஸ்லிம் விவாக விவா கரத்து சட்டத்தை தடை செய்தல் என்றெல்லாம் முஸ் லிம்களுக்கு இருக்கின்ற கொஞ்ச உரிமையையும் பறிக்கப்போவதாக பிரத மரும் அவர் கட்சியினரும் சொல்வது வெந்த புண் ணில் வேல் பாய்ச்சுவதாக உள்ளது.

குண்டு வெடிப்புக்கு கார ணமானவர்களையும் அத ற்கு காரணமாக அமைந்த திகன, கண்டி கலவரங்கள் போன்றவற்றையும் இல்லா தொழிப்பதற்கு முயற்சி செய் யாமல் நாடாளுமன்ற பிரதி நிதித்துவம் உள்ள அனை த்து முஸ்லிம் கட்சிகளை யும் தன்னுடன் வைத்துக் கொண்டு குண்டு வெடிப்புக் கும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்துக்கும் தொடர்பு இல்லை என்று தெளிவாக தெரிந்தும் ஒட்டுமொத்த முஸ்லிம்களையும் பிரதமர் ரணில்தண்டிப்பது முறையா? நியாயமா? என உலமா கட்சி கேள்வியெழுப்பியு ள்ளது. (இ-7)

ஜனனம் ஒரு வழி மரணம் பல வழி

## மரண அறிவித்தல்

### திருமதி. சாந்தகுமாரி மயில்வாகனம்



பிறப்பு: 31.01.1949 இறப்பு: 25.05.2019

இல. 23, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியை பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தகுமாரி மயில்வாகனம் 25.05. 2019 சனிக்கிழமை அன்று சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென் றவர்களான சின்னத்துரை- சோதிலட்சுமி அவர்களின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ் சென்றவர்களான கந்தையா- கனகம்மா அவர்களின் மூத்த மருமகளும் மயில்வாகனம் அவர்களின் பாசமிகு மனைவி யாரும் சுதமதி (லண்டன்), ஜெயமதி (லண்டன்), மதுமதி (ஆசிரியை - யா/ புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), தயாமதி (ஆசிரியை- கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்), ஜனந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவதாஸ் (லண்டன்), ராஜ்குமார் (லண்டன்), தீபன் திலீசன் (ஆசிரியர் - யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்), குகறாஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - விளையாட்டுத் திணைக் களம், வட மாகாணம்), துஷாரா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் மிதூஷ், விஷிக்கா (லண்டன்), திரிஷன், ஜெனிஷன் (லண்டன்), நிக்ஷானா, நிர்ஷானா, கிரிஷ்காந்த், ஜதீஷா, காஷினி ஆகியோரின் அம்மம்மாவும் மயூரேஷ், தானியா (கனடா) அவர்களின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28.05.2019 செவ்வாய்க்கி ழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

23, பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம் (8942)

தகவல்: குடும்பத்தினர் 021 492 5744

# தவணைப் பரீட்சையை கைவிடவேண்டாம்

## அதிபர்களிடம் கல்வி அமைச்சு கோரிக்கை

(கொழும்பு)

நாட்டிலுள்ள அரச பாட சாலைகளில் எச்சந்தர்ப்பத் திலும் தவணைப் பரீட்சையை கைவிட வேண்டாம் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஆர்.எம். ரத்நா யக்க பாடசாலை அதிபர் களையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக் கொண்டுள்ளார். கடந்த ஏப்ரல் 21 ஆம் திகதி கொழும்பி லும் மட்டக்களப் பிலும் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களை தொடர்ந்து, பாட சா லைகளில் கற்றல் நடவடிக்கைகள் தாம தமாக ஆரம் பிக்கப்பட்டன.

இரண்டாம் தவ ணைக்காக பாடசா லைகளில் கற்றல் நடவடிக்கைகள் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி தொட ங்கப்படவிருந்த போதும், பாதுகாப்பு நிலைமைகளை கவனத்திற்கொண்டு மே 6 ஆம் திகதியே பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த விடயங்க ளைக் கருத்தில் கொண்டு, பாடசா லைகளில் விடுபட்ட பாடத் திட்டங்களை பூர்த்தி செய்வதற் காக விசேட வேலைத் திட்டமொன்றை முன் னெடுக்குமாறு அதி பர்களுக்கு கல்வி அமைச்சு அறிவுறு த்தல் விடுத்துள் ளது. (இ-7)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 28.04.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தவர்

அமரர்

### திருமதி. மகாலட்சுமி விநாயகசுந்தரம்

(ஊமையப்பா அவர்களின் மனைவியார்)

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் 28.05.2019 நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் அதே தினம் பி.ப 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திக்கம். வல்வெட்டித்துறை.
தொடர்புகளுக்கு: 077 026 8484

குடும்பத்தினர்.

**மீனம்:** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேர லாம், தொழிலில் சிறு மாற் றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும்.

**மேடம்:** தொலைபேசி வழியில் சுபச் செய்திகள் வந்து சேரலாம், தொழில் வளர் ச்சி மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** புதிய முயற்சிகள் கைகூ டும், வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், இல் லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப் புண்டு.

**மிதுனம்:** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல் லது, உங்களின் கடின உழைப் பால் மற்றவர்களை வியக்க வைப்பீர்கள், பயணங்க ளால் பலனுண்டு.

**கும்பம்:** ஆதாயம் தரும் வேலையொ ன்றில் ஆர்வம் காட்டுவீர் கள், உடல்நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் ராகு |
| | இராசி பலன் | | |
| சந் | கிரகநிலை | | |
| சனி. கேது | குரு | | |

சந்திராஷ்டமம் ஆயிலியம், மகம்

27.05.2019
வைகாசி 13, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.08 மணிக்கு
அட்டமி முற்பகல் 11.14 மணிவரை
சதயம் பிற்பகல் 4.14 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
அட்டமி - நவமி

வளவன்

**கடகம்:** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது, ஆரோ க்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும், பிர யாண பயமுண்டு.

**மகரம்:** கல்யாணக் கனவுகள் நனவா கலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வாக்கு மேன்மையுண்டு, காணாமல்போன பொரு ளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம்.

**சிம்மம்:** சந்தித்த நண்பர்களால் சந் தோஷம் கிடைக்கும் நாள், கனவு பலிதமுண்டு, தொலை பேசி வழியில் சுப தகவல் கள் வந்து சேரும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**தனுசு:** மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், உடன் பிறப்புக்கள் அனுசர ணையாக நடந்து கொள்வர், குடும்பத்தினர் பெருமைப் படும் வகையில் சில நிகழ்வு கள் நடைபெறும்.


**விருச்சிகம்:** வழிபாட்டில் நம்பிக்கை வைப்பீர்கள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற் சிகள் கைகூடும், பயண ங்களால் பலனுண்டு, பாராட் டும் புகழும், கூடும் நாள்.


**துலாம்:** எதிர்பார்ப்புக்கள் நிறைவே றலாம், வியாபார விருத்தி க்கு வித்திடுவீர்கள், சுபகா ரியச் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக் கும், பிறர் உதவியுண்டு.

**கன்னி:** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிர்பார்த்த சலுகை கள் இயல்பாகவே வந்து சேரலாம், தேக நலன் சீரா கும், பகைவர்கள் விலகுவர், வருமானம் திருப்தி தரும்.

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இந்தியா ஒத்துழைக்க வேண்டும்

## மோடிக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் டக்ளஸ்





(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இலங்கைத்தமிழ் மக்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அண்மையில் நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் உங்களை பிரதமர் வேட்பாளராக முன்னிறுத்தி போட்டியிட்ட பாரதிய ஜனதாக் கட்சி அறுதிப்பெரும்பான்மையாக வெற்றி பெற்று தனித்து ஆட்சி அமைக்கும் பெருமைக்குரிய மகத்தான வெற்றியைப் பெற்றிருக்கின்றீர்கள்.

அந்த மகிழ்ச்சியில் எங்கள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் , ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்தார்.

பாரத தேசத்தின் பிரதமராக நீங்கள் இருந்தபோது கடந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதியால் இலங்கை மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை, இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்தே ஆரம்பிக்க வேண்டும் என்று உரையாற்றியிருந்தார்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வுக்கான ஆரம்பமாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்து ஆரம்பிப்பதே சரியான வழிமுறையாகும் என்பதையே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக வலியுறுத்தி வருகின்றோம்.

இந்த நிலையில் இலங்கைத் தமிழ் மக்களுக்கு பல வழிகளிலும் ஆதரவாக இருக்கும் இந்திய தேசத்தின் பிரதமராக மீண்டும் நீங்கள் வெற்றி பெற்றிருப்பது எமக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் தருகின்றது.

இலங்கையில் தமிழ் மக்கள் அரசியல் உரிமைகள் பெற்று சமத்துவமாக வாழ்வதற்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதிலிருந்து ஆரம்பிக்க வேண்டும் என்ற எமது கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு நீங்கள் பங்களிப்புச் செய்வீர்கள் என்றும் நம்புகின்றேன் என்றும் அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கான தரம்-II, III இற்கான அதிபர் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பதவிகளுக்கு யாழ் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று 10.06. 2019 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி நல்லூர் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும் என வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு 25 ஆம் திகதி சனிக்கிழமை வெளி வந்த வலம்புரிப் பத்திரிகையைப் பார்வையிடவும். (இ-10)

# அரச ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

(சாவகச்சேரி)

வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு இணைந்து நடத்தும் கலை ஆற்றுகைகளை வெளிப்படுத்தும் அரச ஊழியர்களுக்கிடையிலான போட்டித் தொடருக்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி பிரதேச செயலக கலாசார அதிகாரசபையினரால் கோரப்பட்டுள்ளது.

அரச மற்றும் அரசுடன் இணைந்த நிறுவனங்களில் சேவையிலீடுபட்டிருக்கும் படைப்பாளிகளை, இலக்கியம் கலை தொடர்பாக ஊக்கமளிக்கும் மற்றும் அவர்களின் கலை ஆற்றுகைகளை வெளிப்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இப்போட்டித்தொடரில் சிறுகதை, பாடலாக்கம், குறுநாடகம், சிறுவர் ஆக்கம், கவிதை ஆக்கம். ஓவியம் என்பன தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் நடத்தப்படவுள்ளன. பங்குபற்ற விரும்பும் அரச ஊழியர்கள் 2019 ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கையளிக்கலாம் அல்லது செயலாளர், வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, 1 ஆம் மாடி, செத்திரிபாய, பத்தரமுல்லை. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-29)

# வடக்கு மாகாணங்களுக்கு இடையே சொகுசு பேருந்துச் சேவை ஆரம்பிக்க அனுமதிப் பத்திரங்களை வழங்குங்கள்

(யாழ்ப்பாணம்)

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் அனுமதி கிடைக்கப் பெற்றால் சொகுசு பேருந்து சேவையை வடமாகாண மாவட்டங்களிடையே ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான சொகுசு பேருந்துச் சேவைக்குரிய அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் அச் சேவையினை வழங்கத் தயாராக உள்ளதாக வடபிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் தெரிவித்துள்ளது.

முன்னர் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் சேவையில் ஈடுபடாத காலத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினரால் சுமார் அறுநூறு வழியனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இவ் வழியனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையானது இலங்கையிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்ட வழியனுமதிப்பத்திரங்களிலும் பார்க்க பல மடங்கு அதிகமானதாகவிருந்தது.

பின்னர் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் பல சேவையில் ஈடுபடுத்தப்பட்டமையாலும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து பயணிகளின் போக்குவரத்து குறைவடைந்தமையாலும் எமது பேருந்துகளின் சேவையை குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்துத் தனியார் பேருந்துகளும் ஒருநாள் விட்டு ஒருநாள் அதாவது மாதத்தில் பதினைந்து நாட்களே சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

எனினும் பதினைந்து நாட்கள் சேவையில் ஈடுபட்டு ஒரு மாதத்திற்குரிய மாதாந்த சம்பளத்தாள் கட்டணத்தினையும் ஆறுமாத காலம் சேவையில் ஈடுபட்டு ஒரு வருடத்திற்குரிய வழியனுமதிப் பத்திரக் கட்டணத்தினையும் செலுத்தி வருகின்றனர்.

இவ்வாறான நடைமுறை யாழ். மாவட்டத்தைத் தவிர இலங்கையிலுள்ள எந்தவொரு மாவட்டத்திலும் நடைபெறுவதில்லை.

எனவே எமது பேருந்து உரிமையாளர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இரண்டு முக்கிய விடயங்கள் அவசியமாகும். ஒன்று பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பது. தற்போதைய காலகட்டத்தில் பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பது என்பது சவாலானதொன்றாகும். பயணிகள் தமது சௌகரியம் கருதி அதிகளவானோர் இருசக்கர மற்றும் முச்சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. எனவே பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவது கடினமானதாகும்.

இரண்டாவது விடயம் வழியனுமதிப்பத்திரங்களை வேறு பாதைகளுக்குரிய வழியனுமதிப்பத்திரமாக மாற்றுவதாகும். இதன் மூலம் குறித்த பாதைகளில் ஒருநாள் சேவையில் சில பேருந்துகள் குறையும் போது சேவையில் ஈடுபடும் ஏனைய பேருந்துகளுக்கு கூடுதலான ஒரு சுழற்சி கிடைக்கப்பெறும். இதன் மூலம் உரிமையாளர்கள் மற்றும் இச்சேவையின் பொருட்டு பதினைந்து நாட்கள் சேவையில் ஈடுபடும் தொழிலாளர்களினதும் நாளாந்த வருமானம் சிறிதளவு அதிகரிப்பதற்கு வாய்ப்புள்ளது.

இத்தடிப்படையில் நான் யாழ் மாவட்டத்திலிருந்து ஏனைய நான்கு மாவட்டங்களுக்கான வழியனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது யாழ். மாவட்டத்தின் உள்ளூர் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 42 (நாற்பத்திரண்டு) பேருந்துகளின் சேவைகளை இரத்துச் செய்து வடமாகாணத்தின் ஏனைய நான்கு மாவட்டங்களுக்கிடையிலான சேவைக்காக வழங்கியிருந்தோம். அதே போன்றுதான் தற்போது மாவட்டங்களுக்கிடையிலான சொகுசு சேவைக்குரிய அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் பேருந்து வழியனுமதிப்பத்திரத்தினை மாற்றி சொகுசு பேருந்து சேவைக்குரிய வழியனுமதிப்பத்திரங்களை வழங்க முடியும்.

அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் எமது பல பேருந்து உரிமையாளர்கள் சிறப்பான சேவையினை வழங்கும் பொருட்டு தரமான சொகுசு பேருந்துகளை தயார் நிலையில் வைத்துள்ளார்கள் என யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பேருந்து கம்பனிகளின் இணைத்தலைவர் கெங்காதரன் தெரிவித்தார். (இ-5)

# கனகம்புளியடிச் சந்தியில் விபத்துக்களைத் தடுக்க பிரதேச சபை நடவடிக்கை

## உறுப்பினர்கள் கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி-கனகம்புளியடிச் சந்தியில்(ஐந்து சந்தியில்) விபத்துக்களைத் தடுக்க சாவகச்சேரி பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மையில் சாவகச்சேரி பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர்கள் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தனர்.


கனகம்புளியடிச் சந்தியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் சந்தியின் அமைப்பு. சரசாலைப் பகுதியில் இருந்து வருவோர் புத்தூர் பகுதியில் இருந்து வரும் வாகனங்களை அவதானிக்க முடிவதில்லை. அதேபோல் சாவகச்சேரி பகுதியில் இருந்து வருவோர் புத்தூர்ச்சந்திப் பகுதியால் வரும் வாகனங்களை அவதானிக்க முடிவதில்லை.

இதுவே கனகம்புளியடிச் சந்தியில் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெற முக்கிய காரணம். ஆகவே சாவகச்சேரி பிரதேச சபையினர் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் ஊடாக ஐந்து சந்தியில் சுற்றுவட்டம் அல்லது குவிவு வில்லை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். எனத் தெரிவித்தனர்.

புத்தூர்-புத்தூர்ச் சந்தி வீதி, தபால் நிலைய வீதி, பருத்தித்துறை வீதி மற்றும் நுணாவில் வீதி ஆகிய ஐந்து வீதிகள் சங்கமிக்கும் இடமாக கனகம்புளியடிச் சந்தி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# சங்கிலிய மன்னனின் 400 ஆவது நினைவு நாள் நிகழ்வு நல்லூரில்







(யாழ்ப்பாணம்)

போர்த்துக்கேயருக்கு சிம்ம சொப்பனமாக விளங்கிய யாழ்ப்பாண இராசதானியின் இறுதி மன்னனான சங்கிலிய மன்னனின் 400 ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நேற்று நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலிய மன்னனின் சிலையடியில் இடம்பெற்றது.

கொடி, முடி, செங்கோல், இலச்சினை, சட்டம், நாணயம் ஒருங்கே அமையப்பெற்ற யாழ்ப்பாண இராச்சியத்தில் அந்நியப் படைகளுக்கெதிராக வீறு கொண்டெழுந்த மன்னனாக சங்கிலியன் விளங்குகிறான்.

யாழ். பண்ணைக் கடலில் பாய்விரித்தோடிய போர்த்துக்கேயரின் கப்பல்களைத் துரத்தியடித்து வன்னிக் காடுவரை போர் செய்த பெருமையும் சங்கிலியனையே சாரும்.

இந்நிலையில் சங்கிலிய மன்னனின் 400 ஆவது நினைவு நாளை முன்னிட்டு நேற்று நல்லூர் முத்திரைச்சந்தியில் உள்ள சிலைக்கு மலர் தூபி அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நடைபவனியாக யமுனா ஏரிக்குச் சென்று மலர் தூவி நீர் ஊற்றும் வைபவமும் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். இந்தியத் துணைத்தூதர் எஸ்.பாலச்சந்திரன் யாழ். மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன், சிவசேனா அமைப்பின் தலைவர் மறவன் புலவுக எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-10)

# ஜனாதிபதித் தேர்தலை ஒத்திப்போட முயற்சி

## ஒத்துழைக்க வேண்டாம் சட்டமா அதிபருக்கு கடிதம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை இந்த ஆண்டு இறுதியில் நடத்தாமல் மேலும் ஆறு மாத காலத்துக்கு ஒத்திப்போடும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தேசிய நாட்டுப்பற்று இயக்கத் தலைவர் எல்ல ஞானவன்ஸ தேரர் தெரிவித்தார்.

அத்தகைய முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவோ, உயர் நீதிமன்றத்தில் முன்னிலையாகி அதற்கு ஆதரவாக வாதிடவோ வேண்டாம் என புதிய சட்டமா அதிபர் தப்புல டி லிவேராவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் சட்டமா அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் "தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் இந்த வருட இறுதியில் முடிவடைகின்றது என்பதை ஏற்கனவே ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் ஜனாதிபதிக்கு வழங்கிய பரிந்துரையில் தெட்டத் தெளிவாகத் தெரிவித்துள்ளது.

அவ்வாறிருந்தும் தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலத்தை மேலும் நீடிப்பது தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறிவதற்கு அரசமைப்பின் 129ஆம் பிரிவின் கீழ் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படுவதாக அறிகின்றோம்.

அரசமைப்பில் ஏதேனும் விடயத்தில் தெளிவற்ற நிலை இருந்தால் மட்டுமே அது குறித்து உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறிய இந்தப் பிரிவின் கீழான ஆலோசனை நியாயாதிக்கத்தைப் பயன்படுத்தித் தமக்கு வழிகாட்டல் ஆலோசனையை வழங்கும்படி ஜனாதிபதி உயர்நீதிமன்றத்தைக் கோரலாம்.

ஆனால், இந்த விடயத்தில் அரசமைப்பு ஏற்பாடுகள் தெளிவாகவும் வெளிப்படையாகவும் உள்ளன. அவற்றுக்கு ஆலோசனை கேட்க வேண்டிய தேவை இல்லை. ஆகையால், இந்த விடயத்துக்கு ஆலோசனை வழங்கவோ தவறான கருத்துக்களை உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வழங்கவோ வேண்டாம் எனக் கோருகின்றேன்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

பொதுச் சந்தையை குத்தகைக்கு விடும்

# சாவகச்சேரி நகரசபை தீர்மானத்தைக் கண்டித்து வியாபாரிகள் 29-ம் திகதி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்க நகரசபையினர் எடுத்த தீர்மானத்தைக் கண்டித்தும், வேறு சில கோரிக்கைகளை முன்வைத்தும் சாவகச்சேரி சந்தை வியாபாரிகள் நாளை மறுதினம் 29 ஆம் திகதி புதன் கிழமை சந்தையை மூடி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர்.

சந்தை வியாபாரிகளின் இந்த தீர்மானத்திற்கு சாவகச்சேரி வர்த்தக சங்கத்தினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர். சந்தை வியாபாரிகள் முன்வைக்கும் ஏனைய கோரிக்கைகளாக "சாவகச்சேரிப் பொதுச் சந்தையின் அனைத்துப் பக்க கதவுகளும் திறக்கப்பட வேண்டும், வாகனங்களுக்கு உரிய முறையில் பாதுகாப்பு நிலையம் அமைக்க வேண்டும், வியாபாரிகளின் கொட்டகைகளுக்கு இருபக்கமும் கீழ்த்தளம் அமைக்க வேண்டும், மின்சார வசதி ஏற்படுத்தப்பட வேண்டும், மரக்கறிகளை சேமிக்கும் வசதி வாய்ப்பு ஏற்படுத்தப்பட வேண்டும், உழவர் சந்தைக்கான இடம் மாற்றியமைக்கப்பட வேண்டும் மற்றும் சந்தை விடயத்தில் வியாபாரிகளுடன் தலைவர், செயலாளர், சந்தைப் பொறுப்பாளர் மட்டுமே தலையிட வேண்டும் " போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

தமது கோரிக்கைகளை சாவகச்சேரி நகரசபைத் தவிசாளரிடம் தெரிவித்தும் எந்தவிதமான பதிலும் கிடைக்காத பட்சத்திலேயே தாம் இம்முடிவுக்கு வந்துள்ளதாக சந்தை வியாபாரிகள் மேலும் தெரிவித்தனர். எதிர்வரும் 01/07/2019 சாவகச்சேரி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்க நகரசபையினர் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# இலங்கையிலிருந்து இலட்சதீவு நோக்கி 15 ஐ.எஸ். பயங்கரவாதிகள் படகில் பயணம்

## பாதுகாப்பை பலப்படுத்தியது இந்தியா

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 15 ஐ.எஸ். தீவிரவாதிகள் படகு ஒன்றில் இலட்சதீவு நோக்கிப் புறப்பட்டுள்ளதாக, கிடைத்த புலனாய்வு அறிக்கைகளையடுத்து, இந்தியா பாதுகாப்பை பலப்படுத்தியது.

இதற்கமைய கேரள மாநில கரையோரப் பகுதிகளில் பாது காப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக, மாநில பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. கேரள மாநில கரையோர பொலிஸ் நிலையங்கள் மற்றும் கரையோர மாவட்டங்களில் பொலிஸ் துறை தலைவர்களுக்கே, இதுபற்றிய முன்னெச்சரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற எச்சரிக்கைகள் வழக்கமானதே என்ற போதும்., இம்முறை தீவிரவாதிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவலும் இடம் பெற்றுள்ளதால், சந்தேகத்துக்குரிய கப்பல்கள், படகுகளைக் கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையிலிருந்து, கடந்த 23 ஆம் திகதி கிடைத்த புலனாய்வு அறிக்கையைத் தொடர்ந்து, இந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-7)


பாராட்டி வாழ்த்துகின்றோம்





தெ.திருக்குமரன் ஆ.கிருஷோந்

எமது பாடசாலையைச் சேர்ந்த செல்வன்.தெய்வேந்திரம் திருக்குமரன், செல்வன்.ஆனந் கிருஷோந் ஆகியோர் தேசிய மட்ட கணித ஒலிம்பியாட் போட்டியில் ( Category II ) பங்குபற்றி வெற்றி பெற்று தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள சர்வதேச மட்ட கணிதப் போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பினைப் பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துவதுடன் சர்வதேச போட்டியிலும் சாதனையை நிலைநாட்ட வாழ்த்துகின்றோம்.


பாடசாலைச் சமூகம்

கிளி/ கிளிநொச்சி மகா வித்தியாலயம்

(அ-6488)

# இலங்கையர்கள் அனைவருக்கும் இராணுவ சேவை கட்டாயம்

## முன்னாள் அமைச்சர் மிலிந்த வலியுறுத்து



(கொழும்பு)

**இலங்கையர்கள் அனைவருக்கும் இராணுவ சேவை கட்டாயப்படுத்தப்பட வேண்டுமென முன்னாள் அமைச்சர் மிலிந்த மொரகொட தெரிவித்தார். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அடிப்படை ரீதியிலான தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.**

பல்வேறு வழிகளிலான தந்திரோபாயங்கள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் பேதங்களை களைந்து நாட்டின் தலைவர்கள் குறுகிய, இடைக்கால மற்றும் நீண்டகால தீர்வுத் திட்டங்களை உடனடியாக அமுல்படுத்துவதற்கு முன்வர வேண்டுமென அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான ஓர் நடவடிக்கையாகவே கட்டாய இராணுவ சேவை அமைந்துள்ளது.

அநேக நாடுகளில் இவ்வாறு கட்டாய இராணுவ சேவை அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அண்மையில் சில நாடுகளில் பெண்களுக்கும்கட்டாய இராணுவ சேவை அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

18 வயதை பூர்த்தி செய்யும் அனைத்து ஆண்களும் இராணுவம், கடற்படை, விமானப்படை உள்ளிட்ட படைச் சேவைகளில் குறிப்பிட்ட காலத்திற்கு கட்டாயம் உள்ளீர்க்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்தார்.

சமூக நிலைமை, இன, மத பேதமின்றி அனைத்து பிரஜைகளுக்கும் இவ்வாறு இராணுவப் பயிற்சி வழங்கப்பட வேண்டுமென அவர் ஊடகங்களுக்கு வெளியிட்டுள்ள அறிக்கையின் மூலம் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# மறவன்புலவு மக்கள் காற்றாலைக்கு எதிர்ப்பு



தென்மராட்சி மறவன்புலவு பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக்கப்பட்டு வருவதற்கு எதிராக அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று முற்பகல் 10 மணியளவில் மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலயத்துக்கு முன்னாள் ஒன்றுதிரண்ட மக்கள் சுலோகங்களை ஏந்தியவாறு காற்றாலை அமைக்கப்படுகின்ற இடம் வரை ஊர்வலமாகச் சென்றனர்.

இதன்போது அங்கு இலங்கை மின்சார சபையின் காற்றாலை மின் உற்பத்தி பிரிவினரால் மறவன்புலவு தொடக்கம் நாவற்குழி வரையிலான கடற்கரை வீதி புனரமைப்பு பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன.


ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குறித்த பணிகளை இடைநிறுத்தி வாகனங்களையும் இயந்திரங்களையும் அகற்றுமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் குறித்த இடத்திற்கு வந்த சாவகச்சேரி பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடனும் காற்றாலை பொறியியலாளருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதன்போது காற்றாலை அமைப்பதால் தமது இயற்கை வளம் பாதிக்கப்படுகின்றது. மேலும் காற்றாலை அமைக்கின்ற இடங்களில் மரங்கள் தறிக்கப்படுகின்ற போது புதிய மரங்கள் நடப்படுவதில்லை எனவும் காற்றாலை மின் உற்பத்தி தொடர்பாக அப்பகுதி மக்களுக்குரிய தெளிவுபடுத்தல் வழங்கப்படவில்லை எனவும்பிரதேசசபையின் உரிய அனுமதி பெறப்படாமல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றம்சாட்டினர்.

இதன்போது காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் பொறியியலாளர் பொலிஸாருக்கு விளக்கமளிக்கையில் இந்த வேலைத்திட்டம் அரசாங்கத்தின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அனைத்துமட்ட அனுமதிகளும் பெறப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றது எனவும் மக்கள் கோரிக்கை விடுப்பது போல் இயற்கை வளம் பாதிக்கப்படாதவாறு இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தோடு காற்றாலை அமைப்பதற்கு அதனோடு தொடர்புபட்ட அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வழங்கிய அனுமதிக் கடிதங்களையும் பொலிஸாருக்கு காண்பித்தார்.

இரண்டு தரப்புக்களுடனும் கலந்துரையாடிய பொலிஸார் நாளைய தினம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இரண்டு தரப்பினரையும் அழைத்து கலந்துரையாடுவதீ என முடிவெடுத்தனர். இதற்கு அனைவரும்ஒப்புக்கொண்டதையடுத்து போராட்டம்முடிவுறுத்தப்பட்டது. (இ-30-89)

# இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலையை ஏற்றுக்கொண்ட மேயருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதை ஏற்றுக்கொண்ட கனேடிய மேயருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் 1983 இலிருந்து 2009 வரை சிவில் யுத்தம் நடைபெற்றபோது தமிழர் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதை ஏற்றுக் கொண்டதற்காக மேயர் **Patrick Brown** இற்கு எதிராகவே சிங்களவர்களால் கனடாவில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

**Patrick Brown** இனப்படுகொலை இடம்பெற்றதாக ஏற்றுக்கொள்வதை விமர்சித்து பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

'ஒரு தேசிய இனத்தை அல்லது சமய குழுவை முழுதாகவோ அல்லது பகுதியாகவோ அழிப்பதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் தான் இனப்படுகொலை, என்பதன் விளக்கத்தின்படி பார்த்தால், இலங்கையில் அது நடக்கவில்லை' உள்ளிட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர். (இ-7)

# எக்னெலிகொட வழக்கு சி.ஐ.டி. அறிக்கை சட்டமா அதிபரிடம்



(கொழும்பு)

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவு மேற்கொண்டு வந்த விசாரணைகள் நிறைவடைந்துள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் இந்த விசாரணைகள் நிறைவடைந்தன.

இந்த விசாரணைகள் தொடர்பான அறிக்கை கடந்த வெள்ளிக்கிழமை, சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டது என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விசாரணைகளுக்கு இராணுவம் ஒத்துழைக்காத நிலையில், பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தில் இராணுவப் புலனாய்வுத் துறையின் பங்கு தொடர்பான துல்லியமான விபரங்களை இந்த அறிக்கை உள்ளடக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நான்தான் அமைச்சர்

# அமெரிக்காவுடன் எந்தவொரு பாதுகாப்பு உடன்பாடுகளிலும் கையெழுத்திடக்கூடாது

## அரச தரப்புக்கு ஜனாதிபதி உத்தரவு



(கொழும்பு)

**அமெரிக்காவுடன் எந்தவொரு பாதுகாப்பு அல்லது பாதுகாப்புடன் தொடர்புடைய உடன்பாடுகளிலும் கையெழுத்திடக்கூடாது என்று ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டார். பாதுகாப்பு அமைச்சராக தான் பதவியில் இருக்கும் நிலையில், பாதுகாப்புடன் தொடர்புடைய எந்தவொரு உடன்பாட்டைச் செய்துகொள்வதற்கும் தனது அனுமதி தேவை என்று அவர் வலியுறுத்தினார்.**

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சீனாவிலிருந்து கொழும்பு திரும்பிய பின்னர், வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவிடம், இது குறித்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

வோஷிங்டனில் தங்கியிருந்த திலக் மாரப்பன, அமெரிக்கா - இலங்கை இடையிலான சர்ச்சைக்குரிய சோபா உடன்பாட்டின் சில விதிமுறைகள் குறித்த பேச்சுக்களில் ஈடுபட்டிருந்த போதே, ஜனாதிபதி இந்த உத்தரவை வழங்கினார்.

சோபா உடன்பாடு தொடர்பாக, முன்னதாக கொழும்பில் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

அதனைப் பகிரங்கப்படுத்தாமல், துரிதமாக உடன்பாட்டில் கையெழுத்திட அவர்கள் வலியுறுத்தியிருந்தனர். ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும், சில திருத்தங்களுடன் உடன்பாட்டில் கையெழுத்திடுவதற்கு ஆதரவு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## குண்டுத்தாக்குதலைப் பயன்படுத்தி அரசியல் இலாபம் பெற முயற்சி

### மகிந்த அணி மீது ஹாசிம் விசனம்

(கேகாலை)

குண்டு தாக்குதல் சம்பவத்தை பயன்படுத்தி மகிந்த ராஜபக்ஷ உட்பட எதிர்க்கட்சியினர் அரசியல் இலாபம் பெற முயற்சித்து வருவதாக அமைச்சர் கபீர் ஹாசிம் குற்றம் சுமத்தினார்.

கேகாலை மாவனெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கு செல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்களை பாடசாலைக்கு அழைத்துச் சென்றமைக்காக நாடாளுமன்றத்தில் மகிந்த ராஜபக்ஷவுக்கு நன்றி தெரிவித்தேன்.

மகிந்த ராஜபக்ஷ குண்டு தாக்குதல் சம்பவத்தை பயன்படுத்தி கரையேற பார்க்கின்றார். கல்கமுவையில் உள்ள எனது தந்தையின் காணிகளில் இரண்டு பௌத்த விகாரைகள் இருக்கின்றன. இதனை தவிர பௌத்த விகாரைகளுக்கு காணிகளை அன்பளிப்பு செய்துள்ளோம்.

அரநாயக்க அஸ்மடல பிரதேசத்தில் இருக்கும் பொது மயானம் எனது தந்தையின் காணியிலேயே இருக்கின்றது. கல்கமுவை மத்திய மகா வித்தியாலயம் எனது தந்தையின் காணியிலேயே இருக்கின்றது. நாங்கள் இப்படித்தான் சிங்கள மக்களுக்காக வேலை செய்திருக்கின்றோம்.

நான் எனது மாவட்ட மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறேன். சிங்கள மக்களே எனக்கு வாக்களித்துள்ளனர். இன, மதம் பார்த்து வாக்களிக்கவில்லை. வேலை செய்ய முடியும் என்பதால், வாக்களித்தனர். நான் பணியாற்றாவிட்டால், என்னை தோற்கடித்து விடுங்கள்.

நான் தலைவணங்கி வீட்டுக்கு செல்கிறேன். நான் உங்கள் பொது சேவகன், சேவையாற்ற முடியும் வரை சேவையாற்றுவேன். கடந்த நான்கு ஆண்டுகளாக கேகாலை மாவட்ட மக்களுக்காக நான் அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளேன். இன, மத பேதங்களை பார்க்கவில்லை.



பயங்கரவாத தாக்குதலை நடத்தியவர்கள் நான் பின்பற்றும் மதத்தை சார்ந்தவர்கள் அல்ல. இதன் காரணமாகவே அவர்களின் உடல்களை இஸ்லாமிய மயானத்தில் அடக்கம் செய்ய வேண்டாம் என முஸ்லிம் மத குருக்கள் கூறினர் எனவும் அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவித்தார். (இ-7)

## மதத்தலங்களில் சுற்றுநிருபத்துக்கமைய சோதனைகளை முன்னெடுக்கவும்-முஜிபுர்

(கொழும்பு)

மதஸ்தலங்களைச் சோதனை செய்யும் போது, பொலிஸ்மா அதிபரால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்துக்கமைய, சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு, ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் இடம்பெற்ற கம்பெரலிய வேலைத்திட்ட நிகழ்வில் கலந்து கொண்ட போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



## அடுத்த பயங்கரவாதத் தாக்குதல் குறித்து துண்டுப் பிரசுரம் விநியோகித்தவர் கைது

(இரத்தினபுரி)

பயங்கரவாதிகளின் இரண்டாவது தாக்குதல் இலக்கு அடுத்த பொசன் போயா தினத்துக்கு முன்னர் எனவும், அந்த இலக்கு பயங்கரமானதாக இருக்கும் எனவும் தெரிவித்து துண்டுப் பிரசுரம் ஒன்றை இரத்தினபுரி நகரில் விநியோகித்துக் கொண்டிருந்த சிங்கள இனத்தைச் சேர்ந்த 54 வயதுடைய ஒருவர் இரத்தினபுரி பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

இவர் இரத்தினபுரி கெடலியன்பல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

இந்தத் துண்டுப் பிரசுரத்திலுள்ள தகவல்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் விநியோகித்த துண்டுப் பிரசுரத்தில் வெளியிடப்பட்ட தகவல்கள் அவருக்கு கிடைக்கப்பெற்ற விதம் தொடர்பில் பொலிஸார் கவனம் செலுத்தினர்.

சிங்கள இனத்தவரான இவர், இந்தத் தகவல்களைப் பாதுகாப்புப் பிரிவுக்கு வழங்காமல், துண்டுப் பிரசுரம் ஊடாக வெளிப்படுத்தியது, யாரின் தேவையை நிறைவேற்றுவதற்கு என்பது தொடர்பிலும் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. (இ-7)

## செப்புத் தொழிற்சாலை ஊழியர்கள் குறித்த விசாரணை பயங்கரவாதத் தடுப்புப்பிரிவிடம்

### பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் இன்று மீள அழைப்பு

(கொழும்பு)

வெல்லம்பிட்டிய செப்புத் தொழிற்சாலை ஊழியர்கள் 8 பேர் குறித்த விசாரணைகள் பொலிஸ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதற்காக பல குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள குறித்த சந்தேகநபர்களை இன்று திங்கட்கிழமை மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டது.



இந்த 8 சந்தேகநபர்கள் அடங்கலாக 9 பேரை பிணையில் விடுவிப்பதற்கு, கொழும்பு மேலதிக நீதவான் நீதிமன்றம் கடந்த 6ஆம் திகதி உத்தரவு பிறப்பித்திருந்தது.

பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதால் சந்தேகநபர் ஒருவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதலுக்கான குண்டுகள் தயாரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வெல்லம்பிட்டிய செப்புத்தொழிற்சாலை படையினரின் சுற்றிவளைப்பில் முற்றுகையிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து குறித்த தொழிற்சாலையின் ஊழியர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## முல்லை.புத்துவெட்டுவான் முதிரைச்சோலைப் பகுதியில்

# ஏக்கர் கணக்கில் அழிக்கப்படும் காடுகள்

## தடுத்து நிறுத்துமாறு பல்வேறு தரப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

**முல்லைத்தீவு புத்துவெட்டுவான் முதிரைச் சோலைப்பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் நிலங்களில் காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் அகழ்வு தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக பல்வேறு தரப்புக்களும் குற்றம் சாட்டியுள்ளனர்.**



முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புத்துவெட்டுவான் கொக்காவில் காட்டுப் பகுதியில் பெருமளவான கிரவல் அகழ்வு தொடர்ந்து இடம்பெற்று வருவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்தப் பிரதேசத்தில் இருக்கின்ற முதிரைச் சோலை பகுதியில் பல ஆயிரம் ஏக்கர் நிலத்தில் காடுகள் அழிக்கப்பட்டு கிரவல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் இந்தப்பிரதேசத்தில் காணப்பட்ட பெறுமதியான மரங்களும் அழிக்கப்பட்டன.

குறிப்பிட்டகாலம் நிறுத்தப்பட்டிருந்த கிரவல் அகழ்வுகள் அண்மைய நாட்களாக மீண்டும் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றன. இதனால் பல மில்லியன் ரூபாசெலவில் புனரமைக்கப்பட்ட கொக்காவில் ஐயன்கன் குளம் வீதி சேதமடைந்து வருவதாகவும் பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (9-315)

## வீதி விபத்து; சாரதி காயம்



வவுனியா கந்தசுவாமி ஆலய வீதியில் நேற்றுக்காலை ஆட்டோவொன்று விபத்துக்குள்ளானதில் சாரதி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா மணிக்கூட்டு பகுதியில் இருந்து சூசைப்பிள்ளையார்குளம் நோக்கி கந்தசுவாமி கோவில் வீதியூடாக பயணித்த ஆட்டோ கட்டுப்பாட்டையிழந்து வீதியின் அருகேயுள்ள மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் ஆட்டோச் சாரதி காயமடைந்த நிலையில் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். விபத்து தொடர்பான விசாரணைகளை வவுனியா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (9-250)

## வாழ்வாதார உதவி தொடர்பில் முன்னாள் போராளிகளுடன் கலந்துரையாடல்

வாழ்வாதார உபகரண பொருட்கள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட முன்னாள் போராளிகளுடனான கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

கலந்துரையாடலின் போது கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் பழனியாண்டி நந்தகுமார் மற்றும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் விஸ்வநாதன் வித்தியானந்தன் ஆகியோர் இணைந்திருந்து வாழ்வாதார நிதி ஒதுக்கீட்டின் பயன்பாடுகள், தொடர்பாடல்கள் மற்றும் உற்பத்திகளின் கேள்விகள், சந்தை வாய்ப்புக்கள் குறித்து கலந்துரையாடினர்.

முன்னாள் போராளிகளில் 20 பேர் வாழ்வாதார பயனாளிகளாக இரண்டாம் கட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (9)

# அரசின் ஆளுமையற்ற தன்மையை மூடி மறைக்கவே அவசரகாலச்சட்டம்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி. குற்றச்சாட்டு



அரசாங்கம் தனது தவறுகளையும் கையாலாகாத்தனத்தையும் அரசியல் ஆளுமையற்ற தன்மையையும் மூடி மறைப்பதற்காக அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகித்து மக்களை அச்சுறுத்தி வருகிறது என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அவசரகால சட்டம் தொடர்பில் ஊடகவியலாளரால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் அளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கயில்,

இந்த நாடு ஒரு போதும் ஜனநாயக சூழலில் அமைதியான முறையில் இயங்கத் தகுதியற்றதோ என்ற சந்தேகத்தையே அண்மைய அவசரகால சட்டம் எழுப்பியுள்ளது. ஜே.ஆரின் ஆட்சியிலிருந்து மகிந்தவின் ஆட்சிக்காலம் வரை அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்தது. பின்னர் அதன் முக்கிய சரத்துக்கள் சில பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் இணைக்கப்பட்டு அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டது.

அதுவரை மாதந்தோறும் அவசரகாலச் சட்டத்தின் மீது நாடாளுமன்றத்தில் சம்பிரதாயத்திற்காக வாக்கெடுப்பு நடப்பதும் அது வெற்றியடைவதும் கடந்தகால வரலாறு. உங்களால் முடிந்தால், இந்த அவசரகாலச் சட்டத்தையும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நீக்கிப் பாருங்கள் உங்களால் ஒரு நாள் கூட ஆட்சி செய்ய முடியாது என்று கூறியிருந்தேன். அந்த அளவிற்கு இந்த நாட்டின் உயர் பதவியில் இருப்பவர்கள் ஆளுமை அற்றவர்கள். அதனை நிரூபிப்பது போலவே இன்றைய அரசாங்கத்தின் செயற்பாடு அமைந்துள்ளது.

இன்றைய அரசாங்கம் தனது தவறுகளையும் கையாலாகாத்தனத்தையும் அரசியல் ஆளுமையற்ற தன்மையையும் மூடி மறைப்பதற்காக அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகித்து மக்களை அச்சுறுத்தி வருகிறது என மேலும் தெரிவித்தார். (9-250)




## இரணைமடுக்குள சிறுபோகத்தில் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய பயிர்ச்செய்கைக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

## பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக செய்கையில் மேற்கொள்ளப்படும் மேலதிக விதைப்புக்கள் மற்றும் அத்துமீறிய பயிர்ச்செய்கைகளுக்கு எதிராக உரிய தரப்புக்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் இவ்வாண்டு 15 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச்செய்கை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டபோதும் ஒதுக்கப்பட்ட நிலப்பரப்புக்களில் கடந்த காலங்களை விட இம்முறை மேலதிகமான பயிர்ச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

அத்துடன் இரணைமடுக்குளத்தினுடைய கழிவு வாய்க்கால்கள் முழுமையாக மறிக்கப்பட்டு அத்துமீறிய விதைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.


குறிப்பாக குமாரபுரம் பகுதியில் 150 ஏக்கர் நிலப்பரப்பிலும் முரசுமோட்டைப்பகுதியில் 120 ஏக்கர் நிலப்பரப்பிலும் வட்டக்கரை பகுதியில் 150 ஏக்கர் நிலப்பரப்பிலும் உடையார்வளவு பிரதேசத்தில் ஏறத்தாழ 130 ஏக்கர் வரையிலும் பெரியகுளம் பகுதியில் 100 ஏக்கர் வரையிலும் அத்துமீறிய விதைப்புக்களாக சுமார் 700 ஏக்கர் வரையில் இதுவரை அடையாளம் காணப்பட்டிருப்பதாக இரணைமடு விவசாய சம்மேளத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான மேலதிக விதைப்புக்களால் உரிய முறையில் பயிர்ச்செய்கை மேற்கொண்ட விவசாயிகளுக்கு நீர் விநியோகத்தில் நெருக்கடி நிலை காணப்பட்டுள்ளது.

'இவ்வாறான மேலதிகமான விதைப்புக்கள் அத்துமீறிய விதைப்புக்களால் உரிய முறையில் பயிர்ச்செய்கை மேற்கொண்ட தமது 'விவசாய' நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ள விவசாயிகள் இது தொடர்பில் உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென விவசாயிகள் 'கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## தற்காலிக வீடுகளையேனும் அமைத்துத் தாருங்கள்

## இரணைதீவு மக்கள் மீண்டும் கோரிக்கை



கிளிநொச்சி இரணைதீவில் மீள்குடியேறிய மக்களின் அடிப்படை வசதிகள் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள இரணைதீவு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் 26 வருடங்களின் பின்னர் கடந்த ஆண்டு மே மாதம் மீள்குடியேறினர்.

கடற்றொழிலை வாழ்வாதாரமாகக்கொண்டு மீள்குடியேறியுள்ள மக்கள் தமக்கு ஆரம்பத்தில் கொட்டில்களை அமைப்பதற்கு கிடுகுகள் மாத்திரமே வழங்கப்பட்டன. அவற்றை வைத்து தற்காலிக கொட்டகைகளை அமைத்ததாகவும் தற்போது இந்தக்கொட்டில்கள் சேதமடைந்தன என்றும் தெரிவித்துள்ளனர்.

தமது சொந்த நிலத்தில் இருந்து இடம்பெயர்ந்து 26 வருடங்களின் பின்னர் மீள்குடியேறிய தமக்கு இதுவரை தற்காலிக வீடுகளையோ அல்லது மலசலகூட வசதிகளையோ ஏற்படுத்தித்தரவில்லை என்று பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆகவே தமக்கு தற்காலிக வீடுகளையேனும் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

## வறட்சி காரணமாக

# கிளி,முல்லை மாவட்டங்களில் 15540 குடும்பங்கள் பாதிப்பு

வறட்சி காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் 2738 குடும்பங்களைச் சேர்ந்த 9082 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 12766 குடும்பங்களைச் சேர்ந்த 40093 பேரும் பாதிக்கப்பட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் வறட்சி காரணமாக பல்வேறு பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் வறட்சி காரணமாக கோணாவில், அக்கராயன், காஞ்சிபுரம், தட்டுவன்கொட்டி, பூநகரி, கண்டாவளை ஆகிய பகுதிகளில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதேவேளை இந்தப்பகுதிகளில் வாழ்வாதாரச் செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

அனர்த்த முகாமைத்துவப் பிரிவினுடைய தகவல்களின் படி கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் 130 குடும்பங்களைச் சேர்ந்த 403 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் 2068 குடும்பங்களைச் சேர்ந்த 8679 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு கரைதுறைப்பற்று ஆகிய பிரதேச செயலர் பிரிவுகள் வறட்சியினால் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவின் கீழ் 1967 குடும்பங்களைச்சேர்ந்த 6296 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கரைதுறைபற்றுப்பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் 10790 குடும்பங்களைச்சேர்ந்த 33797 பேர் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு நிலவும் வறட்சி காரணமாக முல்லைத்தீவில் 12 ஆயிரத்து 766 குடும்பங்களைச்சேர்ந்த 40 ஆயிரத்து 93 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 738 குடும்பங்களைச்சேர்ந்த 9 ஆயி ரத்து 82 பேரும பாதிக்கப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9-315)

# விளையாட்டு மைதானம் அமைக்க தடைபோடும் இராணுவத்தினர்

## இளைஞர்கள் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்ப்பட்ட திருமுறிகண்டி கிராம அலுவலர் பிரிவில் இளைஞர்களுக்கான விளையாட்டு மைதானம் ஒன்று இல்லாத குறை மிக நீண்டகாலமாக நிலவி வருகின்றது.

அந்த வகையிலே இளைஞர்கள் தங்களுக்கான ஒரு விளையாட்டு மைதானத்தை உருவாக்கித் தருமாறு பததடவை பலரிடம் கூறி வந்த நிலையில் அண்மையில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகனால் குறித்த இளைஞர்களது கோரிக்கைக்கு அமைவாக ஐந்து இலட்சம் ரூபா நிதி குறித்த ஒரு மைதானத்தை அமைப்பதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இதற்கமைய திருமுறிகண்டி பகுதியில் மைதானம் ஒன்றை துப்புரவு செய்யும் பணியில் இளைஞர்கள் பிரதேச செயலகத்தின் உடைய அனுமதி கடிதத்தோடு ஈடுபட்டிருந்தனர். குறித்த வேலைகள் இடம்பெற்று கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் பல பகுதிகள் துப்புரவாக்கப்பட்ட நிலையில் மேலும் ஒரு பகுதி துப்புரவாக்க வேண்டிய நிலை இருக்கின்ற நிலையில் அந்தப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அங்கே வந்து அந்த இடம் தங்களுக்குரிய இடம் எனவும் அதனை துப்புரவு செய்ய வேண்டாம் எனத் தடுத்து நிறுத்தியதோடு அந்த இடத்தினை வேலி அடைத்து வைத்து இளைஞர்களை அந்த இடத்திற்கு செல்ல விடாது தடுத்து வைத்திருக்கிறார்கள்.

குறித்த விடயம் தொடர்பில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு இளைஞர்கள் தங்களுக்கு தரப்பட்ட காணியை இராணுவம் தடுத்து நிறுத்தி உள்ளதாக தெரியப்படுத்தியுள்ளனர் . இதுவரை அந்தக் காணியை மீட்டு அவர்களுடைய விளையாட்டு மைதானம் அமைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படவில்லை என இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது மக்களுடைய பல காணிகள் இராணுவத்தினரால் சுவீகரிக்கப்பட்டு இருக்கும் நிலையில் மீண்டும் மீண்டும் இராணுவத்தினரால் பொது மக்களது தேவைகளுக்கான காணிகள் சுவீகரிக்கப்படும் இவ்வாறான செயற்பாடுகள் தொடர்வதாக பலதரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர். (9-281)

# வவுனிக்குளத்தில் முதலைகளை விடவேண்டாம்

## மீனவர்கள், பிரதேச மக்கள் எதிர்ப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பிடிக்கப்படுகின்ற முதலைகளை வவுனிக்குளத்தில் விடுவதற்கு மீனவர்களும் பிரதேச மக்களும் எதிர்ப்புத் தெரிவித்துள்னர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு பகுதியில் இராணுவமுகாமிற்குள் புகுந்த முதலை வனஜீவராசிகள் திணைக்களத்தினால் பிடிக்கப்பட்டு அவை வவுனிக்குளத்தில் விடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதேபோன்று முன்னரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் பிடிக்கப்பட்ட முதலைகள் வவுனிக்குளத்தில் விடப்பட்டிருந்தன.

அதாவது, முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் வாழும் விவசாயிகளுக்கான நீர் விநியோகத்தை வழங்கும் ஒரு குளமாகவும் அதேவேளை நூற்றுக்கும் மேற்பட்ட நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களின் வாழ்வாதாரத் தொழிலாகவும் அமைந்துள்ளதுடன், பயிர்ச்செய்கை காலங்களில் குளத்தின் கரைப்பகுதி கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவைகளாகவும் பயன்படுகின்றன்.

இந்நிலையில் குளத்தில் காணப்படுகின்ற முதலைப்பெருக்கத்தினால் மீனவர்களின் வலைகள் சேதமாக்கப்படுவதுடன், தமது தொழில்களும் பாதிக்கப்படுவதாக மீனவர்கள் தெரிவித்துள்ள அதேநேரம் குளத்தை அண்மித்த பகுதிகளில் மேய்ச்சலுக்காக விடப்படுகின்ற மற்றும் குளத்திற்கு நீர் தேடிச்செல்லும் கால்நடைகளை முதலைகள் இரையாக உட்கொள்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ள மீனவர்களும் பொதுமக்களும் வேறு பிரதேசங்களில் ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய முதலைகளை இக்குளத்தில் விடுவது தொடர்பில் பலரும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். (9-315)



"புத்தகம் தன்னால் புத்தாக்கம் கொள்வோம்" எனும் கருப்பொருளில் போரினால் பாதிப்புற்ற பாடசாலைகளில் நூலகச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் திட்டம், "அம்மம்மா அறக்கட்டளை" ஏற்பாட்டில் முல்லைத்தீவு தேராவில் தமிழ் வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. தேராவில் தமிழ் வித்தியாலய அதிபர் பெ.பாலகிருஸ்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சுவிட்சர்லாந்து தில்லையம்பலம் நந்தினி குடும்பத்தினரின் நிதியுதவியில் குறித்த பாடசாலைக்கு நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.சுப்பிரமணியேஸ்வரன் கலந்துகொண்டார்.

## மன்.மாவட்டத்தில் நெற் செய்கைக்கான

# காணிகள் வழங்கப்படுவதில் அநீதி சிறுபோக விவசாயிகள் பாதிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான காணிகள் வழங்கப்படுவதில் அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மன்னார் - கட்டுக்கரை குளத்து நீரினைப் பயன்படுத்தி இம்முறை சுமார் 1, 710 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அரச நெற்செய்கைக் காணிகள் மன்னார் மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தினரால் சிறுபோக செய்கைக்காக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

2009 ஆம் ஆண்டிற்கு முன்னர் கட்டுக்கரை குளத்தின் நீர்மட்டத்திற்கேற்ப, மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் சிறுபோக நெற்செய்கைக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

எனினும், அதற்கு பிற்பட்ட காலப்பகுதியில் கமநல சேவைகள் திணைக்களத்தினரால் புதிய நடைமுறை மூலம் வயல் காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

18 ஏக்கருக்கு ஒரு ஏக்கர் வீதம் என்ற அடிப்படையில், 72 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை பண்ணும் விவசாயி ஒருவருக்கு நான்கு ஏக்கர் சிறுபோக வயல் காணிகள் வழங்கப்படவுள்ளன.

எனினும், 18 ஏக்கருக்கு குறைந்த பெரும்போக நெற்செய்கை செய்யும் விவசாயிகளுக்கும் வயல் காணிகளற்ற நிலையில் குத்தகை அடிப்படையில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கும் சிறுபோக காணிகள் வழங்கப்படுவதில்லை.

இவ்வாறான காணி பகிர்ந்தளிப்பு நடைமுறையே கடந்த 2009 ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்படுவதால், ஏழை விவசாயிகள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சிறுபோக நெற்செய்கை காணி பகிர்ந்தளிப்பில் புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தி செல்வந்த விவசாயிகள் தொடர்ந்தும் நன்மைகளை அனுபவிப்பதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர். இதேவேளை 18:1 என்ற வீதம் சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கான காணி வழங்கப்படுவது தொடர்பில், விவசாய அமைப்புக்களுடன் கலந்துரையாடப்பட்டு தீர்மானம் எட்டப்பட்டதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மோகன்றாஸ் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# மன்.கீரிசுட்டானில் ஆலயம் மற்றும் பாடசாலையை சேதமாக்கிய விசமிகள்

(மன்னார்)

மன்னார் மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீரிசுட்டான் பகுதியில் ஆலயம் மற்றும் பாடசாலையில் தாக்குதல் சம்பவங் கள் இடம்பெற்றுள்ளன.

ஆலயத்திலுள்ள சுருபங்கள் ஆலயத்திலிருந்து அகற்றப்பட்டதுடன் அப்பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றிலுள்ள பொருட்களும் சேதத்துக்குள்ளாக் கப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் மடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரிய



வருகையில்,

மன்னார் மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கீரி சுட்டான் பகுதியில் கிறிஸ்துராசா ஆலயத் துக்கான கட்டுமானப் பணி நேற்று முன்தினம் பிற்பகல் 6 மணி வரைக்கும் நடை பெற்றதாகவும் பின் பிற்பகல் ஏழு மணியளவில் ஆலய மேற்பார் வையாளர் ஆலயத்துக்குச் சென்று பார்த்தபொழுது ஆலயத்துக்குள் இருந்த கிறிஸ் துராஜா மற்றும் தேவ அன்னையின் இரு சுருபங்களும் காணவில்லையென பங்குத்தந்தை அருட்பணி தேவராஜா (அ.ம.தி) வின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

பின் அவ்வூர் மக்கள் இவ் விடயத்தை அறிந்து தேடுதல் நடத்திய போது தேவ அன்னையின் திருச்சுருபம் ஆலயத்திலிருந்து சுமார் 75 மீற்றர் தூரத்தில் ஒரு பற்றைக்குள் வீசப்பட்டு காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின் றது. இத் திருச்சுருபம் தூக்கி வீசப்பட்ட காரணத்தினால் சுருபத்தின் தலைப்பாகம் உடைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் கிறிஸ்து அரசர் திருச்சுருபமானது ஆலய வளா கத்துக்குள் இருந்த கிணற்றுக்குள் சேதமாக்கப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் இவ் ஆலயத்துக்கு அருகிலுள்ள கீரிசுட்டான் அரசினர் தமிழ் கலவன் ஆரம்ப பாடசாலையின் நுழைவாயில் கதவு சேதமாக்கப்பட்டதுடன் பாடசாலையில் இருந்த கதிரைகள், மேசைகள், குடிநீர் குழாய்கள் மாணவர்களின் கற்றல் உபகரணங்கள் பல சேதமாக்கப்பட்ட நிலையிலும் பற்றைக்குள் வீசி எறியப்பட்ட நிலையிலும் காணப்பட்டுள்ளது.

பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த ஒலிபெருக்கியும் கோவில் காணிக்குள் வீசப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (9-285)




# குஜராத்தில் கட்டடத்தில் தீ விபத்து! உயிரிழப்பு 22 ஆக அதிகரிப்பு




குஜராத் மாநிலம்- சூரத் நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது.

சூரத்- சர்தானா பகுதியில் அமைந்துள்ள 4 மாடிகள் கொண்ட கட்டடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது குறித்த கட்டடத்தில் பயிற்சி வகுப்புகளுக்கு வந்திருந்த 14 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களே தீ விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வரை உயிரிழப்புகள் 18 ஆக பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் தற்போது 22 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை இந்தச் சம்பம் குறித்து விசாரணை நடத்திய பொலிஸார், குறித்த கட்டடத்தில் பயிற்சி வகுப்பு நடத்திய பார்காவ் புதானி என்பவரை கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# வெனிசுவெலா சிறை...
# 30 கைதிகள் பரிதா...

(கராகஸ்)

**வெனிசுவெலா நாட்டுச் சிறைச்சாலையில் ஏற்பட்ட ... வத்தில், 30 கைதிகள் உயிரிழந்துள்ளதுடன், 20 ... பொலிஸார் காயமடைந்துள்ளனர்.**

வெனிசுவெலாவின் வடமேற்குப் பகுதியில் உள்ள அகேரிகுவா நகரத்தில் உள்ள சிறைச்சாலையில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த வன்முறைச் சம்பவத்திற்கு காரணமான வில்பிரடோ ரமோஸ் என்பவர் பொலிஸாரினால் சுட்டுக் கொல் லப்ப... காய... சான... னர்.

# காங்கிரஸின் தலைவராக ராகுல் காந்தியே நீடிப்பார்
## கூட்டத்தில் தீர்மானம்

காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தியே நீடிப்பார் என காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி இந்த முறையும் படுதோல்வியடைந்தது. கடந்த தேர்தலில் 44 தொகுதிகளில் வென்ற காங்கிரஸ், இந்த முறை 52 தொகுதிகளை மட்டுமே பெற்றுள்ளது. பல மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியால் ஒரு தொகுதிகளை கூட பெற முடியவில்லை. 5 மாதங்களுக்கு முன்பு மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான் மாநிலங்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்த காங்கிரஸ், அந்த மாநிலங்களிலும் வெற்றியை தக்கவைக்க முடியவில்லை.




இந்நிலையில் டில்லியில் உள்ள கட்சி தலைமையகத்தில் காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டம் நடைபெற்றது.

இதற்கிடையே காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டத்தில், பாராளுமன்ற தேர்தல் தோல்வி, எதிர்காலத் திட்டங்கள் மற்றும் கட்சி வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.


குறிப்பாக, காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தியே நீடிப்பார் என்றும், கட்சியின் அனைத்து முடிவுகளையும் எடுக்கும் அதிகாரத்தை ராகுலுக்கு வழங்குவது என்றும் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (7)

# நைஜீரியாவில் தீவி...
# 25 இராணுவத்தி...

நைஜீரியாவில் போகோ ஹராம் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 25 இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர். மேலும், பலர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள இராணுவதளம் அருகில் நேற்று இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 4 துப்பாக்கி தரித்த வாகனங்கள், ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்களுடன் வந்தே இந்தத் தாக்குதலை அவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 25 இரா



# ஆந்திராவில் ஆட்சியமைக்க ஜெகன்மோகன் ரெட்டிக்கு ஆளுநர் நரசிம்மன் பணிப்பு



(ஆந்திரா)

ஆந்திராவில் ஆட்சியமைக்குமாறு வை.எஸ்.ஆர். காங்கிரஸ் தலைவர் ஜெகன்மோகன் ரெட்டிக்கு ஆளுநர் நரசிம்மன் பணிப்பு விடுத்துள்ளார்.

ஜெகன்மோகன் ரெட்டி ஆளுநரை சந்தித்து ஆந்திராவில் ஆட்சி அமைக்க உரிமை கோரியதைத் தொடர்ந்து எதிர்வரும் 30 ஆம் திகதி ஆட்சியமைக்க வரும்படி ஆளுநர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிலையில், சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெற்று தேர்வு செய்யப்பட்ட புதிய சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஆந்திர தலைநகர் அமராவதியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. கூட்டத்தின் முடிவில் ஆந்திர மாநில சட்டசபையின் ஆளும் கட்சித் தலைவராக ஜெகன்மோகன் ரெட்டி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

இதையடுத்து ஆளுநரை சந்தித்து ஆந்திராவில் ஆட்சி அமைக்க உரிமை கோரினார். அத்துடன் சட்டமன்ற ஆளுங்கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டது தொடர்பான தீர்மான நகலையும் ஆளுநரிடம் வழங்கினார்.

இதையடுத்து ஆந்திராவில் சந்திரபாபு நாயுடு தலைமையிலான சட்டப்பேரவையை கலைத்து ஆளுநர் உத்தரவிட்டதுடன் ஜெகன்மோகன் ரெட்டிக்கு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# மத்தியில் ஆட்சியமைக்குமாறு மோடிக்கு ஜனாதிபதி அழைப்பு



(டில்லி)

மத்தியில் ஆட்சியமைக்குமாறு நரேந்திர மோடிக்கு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் நேற்று முன்தினம் சனிக்கிழமை அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரிய கடிதத்தை மோடி வழங்கினார். இதையடுத்து ஜனாதிபதி இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க. 303 தொகுதிகளில் வெற்றிபெற்று தனிப் பெரும்பான்மையுடன் மீண்டும் ஆட்சியைப் பிடித்துள்ளது. இதையடுத்து பா.ஜனதா உறுப்பினர்கள் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் உறுப்பினர்கள் உள்ளடங்கிய கூட்டம் நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக் கூட்டத்தில், நாடாளுமன்ற பா.ஜ.க. தலைவராக மோடி ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

இந்த ஆலோசனைக் கூட்டம் முடிவடைந்ததும், பிரதமர் மோடி, ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை சந்தித்து ஆட்சியமைக்க உரிமைகோரி கடிதம் வழங்கினார். அத்துடன் பா.ஜ.க. தலைவராக உறுப்பினர்களின் ஆதரவு கடிதத்தையும் வழங்கினார். அதனை ஏற்று மோடியை ஆட்சியமைக்க வரும்படி ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

இதையடுத்து எதிர்வரும் 30 ஆம் திகதி மோடி பிரதமராக பதவியேற்பார் எனவும், குறித்த பதவியேற்பு விழாவில் வெளிநாட்டு தலைவர்கள் பங்கேற்பார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (7)



# வெளிநாடு

## றையில் வன்முறை
## ாயமாக உயிரிழப்பு

**ற்பட்ட வன்முறைச் சம்ப**
**, 20 இற்கும் மேற்பட்ட**

லப்பட்டுள்ளதுடன், குறித்த சம்பவத்தில் காயமடைந்த பொலிஸார் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கைதிகளை பார்வையிட வருகைதந்த சிலரை பணயக் கைதிகளாக கைதிகள் பிடித்து வைத்துள்ளதாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த கைதிகளை மீட்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்ட போதே இந்த வன்முறைச் சம்பவம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (7)

## வடகொரியாவின் ஏவுகணை சோதனைகளால் எனக்கு எந்தவித இடையூறும் இல்லை

### -ட்ரம்ப் கூறுகிறார்-



(டோக்கியோ)

வடகொரியாவின் குறைந்த தூர ஏவுகணை பரிசோதனைகளால் எனக்கு எந்தவித இடையூறும் இல்லை என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் 4 நாட்கள் சுற்றுப்பயணமாக ஜப்பான் நாட்டிற்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், வடகொரியாவின் குறைந்த தூர ஏவுகணை பரிசோதனைகளால் எனக்கு எந்தவித இடையூறும் இல்லை என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, ட்ரம்ப் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், சிறிய ரக ஆயுதங்களை வடகொரியா பரிசோதனை செய்துள்ளது. இதனால் என்னுடைய நிர்வாகத்தில் உள்ள சிலர் மற்றும் வேறு சிலருக்கும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

ஆனால் எனக்கு எந்த இடையூறும் ஏற்படவில்லை. கிம் எனக்கு அளித்த வாக்குறுதியை காத்திடுவார் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என பதிவிட்டுள்ளார். (7)

## விரவாத தாக்குதல்
## தினர் உயிரிழப்பு



ணுவ வீரர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

மேலும் பலர் படுகாயமடைந்துள்ள நிலையில், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலையடுத்து, குறித்த பகுதியில் இராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதோடு, தீவிரவாதிகளை தேடும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

## எங்கள் முகவர்கள் போட்ட வாக்குகள் எங்கே? தேர்தல் ஆணையகம் பதிலைக் கூறவேண்டும்

### டி.டி.வி.தினகரன்

(சென்னை)

எங்கள் முகவர்கள் போட்ட வாக்குகள் எங்கே? தேர்தல் ஆணையம் உரிய பதிலை கூற வேண்டும் என டி.டி.வி. தினகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னை அடையாறில் நேற்றையதினம் செய்தியாளர்களைச் சந்தித்த டி.டி.வி.தினகரன் கூறும் பொழுது, மக்களவைத் தேர்தல் மற்றும் சட்டசபை இடைத்தேர்தல்களில் மக்களின் தீர்ப்பினை ஏற்றுக் கொள்கிறோம்.

எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. எங்களது கணக்கெடுப்பின்படி ஏறக்குறைய 300 பூத்களில் அ.ம.மு.கவின் வாக்குகள் பூச்சியம் எனக் காட்டியுள்ளது. எங்கள் முகவர்கள் போட்ட வாக்குகள் எங்கே? ஒரு வாக்குச் சாவடியில் அ.ம.மு.க. முகவரின் வாக்கு கூடவா பதிவாகாமல் போயிருக்கும்? என்று அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு தேர்தல் ஆணையகம் உரிய பதிலை கூற வேண்டும். அ.ம.மு.கவின் செல்வாக்கு போகப் போகத் தெரியும் என்று மேலும் தெரிவித்தார். (7)

## படகு கவிழ்ந்து விபத்து
## 10 பேர் பலி; 9 பேர் மாயம்



சீனாவில் ஆற்றில் படகு கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் 10 பேர் பலியானது சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. சீனா நாட்டின் கியுசூ மாகாணத்தில் உள்ள பான்ராவ் கிராமத்தில் டீயபான் என்கிற ஆறு ஓடுகிறது. இந்த ஆற்றில் நேற்று முன்தினம் 29 பயணிகளுடன் ஒரு படகு சென்று கொண்டிருந்தது.

அப்போது திடீரென யாரும் எதிர்பாராத வகையில் படகு கவிழ்ந்தது. இதில் படகில் இருந்த அனைவரும் ஆற்றில் மூழ்கினர். இந்த விபத்தில் 10 பேர் பரிதாபமாக பலியாகினர். மேலும் 9 பேர் மாயமாகினர். (7)

## முதலமைச்சர் பதவியை தொடர விருப்பமில்லை

### மம்தா பானர்ஜி தெரிவிப்பு



மேற்கு வங்கத்தின் முதல்வராக இனியும் தொடர தனக்கு விருப்பமில்லையென மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்காளத்தில், மொத்தமுள்ள 42 தொகுதிகளில் 18 தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது.

எனினும், கடந்த தேர்தலின்போது, 34 இடங்களை பிடித்திருந்த திரிணாமுல் காங்கிரஸ் கட்சியானது, இம்முறை நடைபெற்ற தேர்தலில் 22 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது.


பா.ஜ.கவின் இந்த வெற்றி மம்தா பானர்ஜி தரப்பினருக்கு அதிர்ச்சியை அளிக்க, இதுகுறித்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கட்சியின் விசேட கூட்டமொன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின்போது, மேற்கு வங்கத்தின் முதல்வராக இனியும் தொடர தனக்கு விருப்பமில்லையென மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார். எனினும், இதனைக் கட்சியினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தையடுத்து, ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட மம்தா, பா.ஜ.கவின் இந்த வெற்றியை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் எவ்வாறாயினும் தனக்கு அச்சமில்லை என்றும் மேலும், மத்திய படைகள் தங்களுக்கு எதிராகச் செயலாற்றியதாகவும் இதனாலேயே இந்த நெருக்கடி நிலைமை உருவாக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, இது குறித்து தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மேலும் தெரிவித்தார். (7)

## ராகுலின் ராஜினாமா கடிதம் காங்கிரஸால் நிராகரிப்பு



நேற்று முன்தினம் கூடிய காங்கிரஸ் காரிய கமிட்டி ஆலோசனை கூட்டத்தில் ராகுல் காந்தி ராஜினாமா கடிதம் கொடுக்கவே, காங்கிரஸ் அதனை ஏற்க மறுத்துள்ளது.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் 44 தொகுதிகளில் மட்டுமே வென்ற காங்கிரஸ் தற்போதைய தேர்தலில் 52 தொகுதிகளை மட்டுமே பெற்றுள்ளது.

இதையடுத்து மாநில தலைவர்கள் ராஜினாமா செய்தனர். இதனை தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவர் ராகுல் காந்தியும் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்ய இருப்பதாக கூறியது. முன்னதாக, பாராளுமன்ற தேர்தலில் கட்சியின் படுதோல்விக்கு தானே பொறுப்பு ஏற்பதாக ராகுல் காந்தி கூறியிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற காங்கிரஸ் காரிய கமிட்டி ஆலோசனை கூட்டத்தில் ராகுல் காந்தி, தோல்விக்கு பொறுப்பேற்று பதவி விலகுவதாக ராஜினாமா கடிதம் கொடுத்துள்ளார். காங்கிரஸ் கமிட்டி இதனை ஏற்க மறுத்துள்ளது. (7)

# பெரும்பான்மையின மக்களுக்கு கோபத்தை ஏற்படுத்த வேண்டாம்

## அசாத் சாலிக்கு பிரசன்ன அறிவுறுத்து

(கொழும்பு)

**பெரும்பான்மையின மக்களைக் கோப மூட்டக் கூடியவாறு அறிவிப்புக்களை விடுக்க வேண்டாம் என மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலியிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம் என மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.**



மினுவாங்கொட வன்முறைச் சம்பவம் குறித்து அசாத் சாலி விடுத்த அறிவித்தலின் மூலம், சிங்கள மக்கள் மீண்டும் கோபம் கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், "இந்த நாட்டின் இருக்க வேண்டியது ஒரு சட்டமே. யாருக்காகவும் தனியான சட்டங்களை உருவாக்கிகொள்ள முடியாது.

இந்நிலையில், மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி போன்றவர்கள் இந்த நாட்டில் தனியான சட்டம் உருவாக்கிக் கொள்ளப் போய்த்தான் இன்று இந்த நிலைமை ஏற்பட்டது.

இந்த நாட்டிலுள்ள விகாரையாக இருக்கலாம், முஸ்லிம் பள்ளியாக இருக்கலாம், கிறிஸ்தவ ஆலயமாக இருக்கலாம், எதனையும் பாதுகாப்புப் பிரிவுக்கு எந்த நேரத்திலும் சென்று சோதனையிட முடியும்.

இதற்கு தனியான சட்டங்களை கொண்டு வர முடியாது. ஆளுநர் அசாத் சாலி இனவாதத்தை தூண்டும் விதத்தில் கருத்துத் தெரிவித்து வருகிறார்.

இதேவேளை, பள்ளிவாசல்களில் மேற்கொள்ளப்படும் சோதனைகள் நிறுத்தப்பட வேண்டுமென மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி தெரிவித்தார்.

ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இவ்வாறான நிலையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# சிலாபம் பகுதியில் விபத்து-மூவர் உயிரிழப்பு

(ஆனமடுவ)

சிலாபம் - ஆனமடுவ பிரதான வீதியின் நாகவில பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளொன்றும் கப் வாகனமொன்றும் மோதியதில் இந்த விபத்து சம்பவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் ஆண்டிகம மற்றும் கட்டைக்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 17, 18 மற்றும் 19 வயதுடைய இளைஞர்களே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக சிலாபம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)


# முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் வெளியேற்றியது ஏன்? கருணா விளக்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமைக்கான காரணத்தை முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே அவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதாக கருணா தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களையோ அவர்களின் தலைவர்களையோ தண்டிப்பதை விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை.



கடைசி வரையில் அந்தக் கொள்கையில் பிரபாகரன் உறுதியாக இருந்தார்.

பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களை இலக்கு வைத்து ஒருநாளும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியது இல்லை.

எனினும் அண்மைக்காலமாக மக்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது. அதுவும் படித்தவர்கள், கோடீஸ்வரர்களால் இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்பட போவதாக ஏப்ரல் 11இல் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் கருணா மேலும் தெரிவித்தார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## உயில்

ஒரு பெரியவர் வந்தார். சேர்! தகவல் சொல்கின்றவர் யார்? நீங்க தானா? என்றார். ஆமாம் என்றேன். எனக்கு ஒரு பெரிய பிரச்சினை. அதற்கு நீங்கள் தான் ஏதாவது வழி செல்ல வேண்டும் என்றார்.

சரி! இன்றைக்கு வசமாக மாட்டிக் கொண்டோம் என்று முடிவு செய்து கொண்டே, என்ன பிரச்சினை சொல்லுங்கள்! என்றார். சரி கேளுங்கள் என்றேன்.

சட்டத்தில் உயில், செட்டில்மெண்ட் என்ற இரண்டு வார்த்தை அடிபடுகின்றதே அதை பற்றி விபரம் தேவை. உயில் என்றால் என்ன? என்று கேட்டார்.

சரி! சேர் ஏதோ பெரிய லட்சாதிபதி போல் இருக்கின்றது. தன்னுடைய வாரிசுகளுக்கு சொத்துக்களை பிரித்துக் கொடுக்கின்ற ஐடியாவிலே இருக்கின்றார் என்பதனையும் யூகம் செய்து கொண்டேன். இருந்தாலும் இதற்கு யோசனை கேட்க ஒரு நல்ல வக்கீலைத் தேடிப் போயிருக்கலாம். அவருடைய நேரம் என்னிடம் வந்து சேர்ந்திருக்கின்றார். இருக்கட்டும் பரவாயில்லை. நமக்கு தெரிந்ததை கூறுவோம் என்று நினைத்து ஆரம்பித்தேன்.

ஒருவர் தன்னுடைய சொத்துக்களை மற்றவர்களுக்கு அதாவது வாரிசுகளுக்கு எழுதி வைக்க வேண்டும் என்று நினைத்தால் அதை இரண்டுவிதமாக செய்யலாம். ஒன்று உயில், மற்றையது செட்டில்மெண்ட்.

செட்டில்மெண்ட் என்பது என்ன என்றால் ஒருவர் உயிரோடு இருக்கின்ற போது தன்னுடைய சொத்துக்களை பிரித்துக் கொடுத்து விடுவது. அவ்வாறு பிரித்து கொடுத்ததன் பின் அதில் உரிமை கொண்டாட முடியாது. அது எனக்கு சொந்தம் என்று சொல்லிக் கொண்டிருக்க முடியாது. செட்டில்மெண்ட் செய்து விட்டால் அதற்கு பின் அவருக்கு எந்தப் பாத்தியதையும் இருக்காது.

சரி இதை எப்படி செய்வது?

அது ஒன்றும் பெரிய காரியமில்லை. இப்படி இப்படி செய்வது என்று முடிவு செய்தால் அதை ஒரு ஸ்டாம் பேப்பரில் எழுத வேண்டும். பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். அவ்வளவுதான் இந்த செட்டில்மெண்ட்.

இப்படி செய்துவிட்டால் அக்கடா என தலையிலே துண்டைப் போட்டுவிட்டு எங்கேயாவது ஒரு இடம் பார்த்து அமர்ந்திருக்கலாம் நிம்மதியாக!

அதன்பின் சொத்தை யாருக்கு எழுதி வைத்தீர்களோ அவரா நினைத்து ஏதாவது சோறு போட்டா அதையும் சாப்பிடலாம் இல்லையென்றால் சும்மா இருக்கலாம்.

சரி அது இருக்கட்டும் உயில் என்றால் என்ன?

ஒருவர் இறந்த பின் அவரது சொத்து யார் யாருக்குப் போகும் என எழுதி வைப்பதுதான் உயில்.

உயிரோடு இருக்கின்ற போது பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்வது செட்டில்மெண்ட். இறந்த பின் பிரித்துக் கொடுக்க ஏற்பாடு செய்வது உயில்.

செட்டில்மெண்ட் என்றால் பத்திரத்தில் எழுதி பதிவு செய்ய வேண்டியிருக்கும்.

உயிலுக்கு அப்படி அவசியமில்லை!

இதைப்பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை!

பத்திரத்திலும் எழுத வேண்டியதில்லை!

ஒரு சாதாரண வெள்ளை பேப்பரில் எழுதினால் போதும். இரண்டு பேரை சாட்சி கையெழுத்துப் போடச் சொல்ல வேண்டும். இந்த உயில் எழுதுகின்ற விடயத்தில் சட்டம் ஏன் இவ்வளவு சலுகை காட்டுகின்றது? ஒரு மனிதாபிமானம் தான். வேற என்ன?

இறக்கப் போகின்ற ஒரு மனிதன் தன்னுடைய கடைசி ஆசையாக இந்த உயிலை எழுதுகின்றான். அந்த நேரத்திலே அவனிடம் போய்... இதை ஸ்டாம்ப் பேப்பரில் எழுது– ரெஜிஸ்டர் ஆபீசுக்கு எடுத்துக் கொண்டுபோ! என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் அது நல்லா இருக்குமா?

எமன் எப்ப வந்து அழைத்துக் கொண்டு போகலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே... எழுந்துவா ரெஜிஸ்டர் ஆபீஸ் வரைக்கும் போய் வந்து விடுவோம்! என்று கூப்பிட்டால் அது முடிகின்ற காரியமா? இதையெல்லாம் யோசித்து தான் சட்டம் அந்த சலுகையை காட்டுகின்றது!

உயில்– செட்டில்மெண்ட்–இது போல் வாரிசு இல்லாத ஒருவருக்கு தானப்பத்திரமாகவும் தன்னுடைய சொத்தை எழுதி கொடுத்து விடலாம் என்று சொல்லிக் கொண்டிருந்த கட்டத்திலே எதிரில் இருந்த பெரியவர் கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தார். நான் அவரைப் பார்த்து...

சேர் நீங்க கேட்ட விபரத்தை சொல்லிவிட்டேன். உங்கள் பிரச்சினை என்ன என்பதனை நேரடியாக சொன்னால் அதற்கு பரிகாரம் தேடலாம். உயில் எழுதுவதில் ஏதாவது சிக்கலா? என்று கேட்டேன். அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. அதெல்லாம் எழுதி விட்டேன். பத்து லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை எப்படி பிரிப்பது என்று என் பிள்ளைகளுக்கு எழுதி வைத்து விட்டேன் என்றார்.

அப்படியென்றால் என்ன கவலை உங்களுக்கு? என்றேன்.


அந்த பத்து லட்ச ரூபாய் மதிப்புள்ள சொத்தை எப்படி சம்பாதிக்கின்றது என்று யோசனை செய்து கொண்டிருக்கின்றேன்! அதற்கு தான் உங்களிடம் ஐடியா கேட்க வந்தேன்! என்றார்.

## அபாயகரமானதாக அபாயா உருவகப்படுத்தல்

# ஆடை அணிதலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி

# இன நல்லிணக்கத்துக்குப் பெரும்கேடாகும்

## கிழக்கு முன்னாள் முதலமைச்சர் நஷீர் சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புச் சம்பவத்துக்குப் பின்னர் நாட்டின் பாதுகாப்புக் கருதி முகத்தை மறைக்கும் ஆடைகளை அணியக்கூடாது என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அபாயகரமான ஆடையாக 'அபாயா' உருவகப்படுத்தப்படும் நடைமுறை தற்போது தோற்றம் பெற்றுள்ளது. ஆன்மீகக் கோட்பாடுகளுக்கு அமைவாக ஒரு சமூகத்தின், கலாசாரத்தைப் பிரதிபலிக்கப் பயன்படுத்தப்பட்ட இந்த ஆடை, அணிதல் தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்படும் நடைமுறைகள் நல்லிணக்கத்துக்கும், இனங்களுக்கும் இடையிலான புரிந்துணர்தலுக்கும் எதிர்காலத்தில் பாதகங்களை ஏற்படுத்திவிடுமோ என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது என கிழக்கு முன்னாள் முதலமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"உயிர்த்த ஞாயிறு சம்பவத்துக்குப் பின்னர் நாட்டின் பாதுகாப்புக் கருதி முகத்தை மறைக்கும் ஆடைகளை அணியக்கூடாது என்ற சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டது. பின்னர் அதில் திருத்தமும் செய்யப்பட்டது.

எனினும், இத்தயை ஆடை அணிதல் என்பது முஸ்லிம் சமூகத்தினருக்கு மட்டும் உரித்துடையதாக இருக்கும் நிலையில் குறிப்பாக முஸ்லிம் பெண்கள் இதனால் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவுக்குப் பின்னர் முகத்தை முழுமையாக மூடும் ஆடைகளை (புர்கா, நிகாப்) அணியாமல் சாதாரணமாக அபாயா அணிந்து தமது கடமைகளுக்குச் சென்ற ஆசிரியைகள், மாணவிகள், வைத்தியசாலைக்குச் சென்ற பெண் நோயாளிகள், பேருந்துகளில் பயணம் மேற்கொண்ட பெண்கள் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தனர்.

இந்த விவகாரம் தொடர்ந்தும் பல்வேறு வடிவங்களில் ஓர் அடக்குமுறையாக மாறி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

கடந்த சில நாட்களில் இந்தச் சட்டம் குறித்து புரிதல் இல்லாமை காரணமாகப் பாடசாலைகளில் பல்வேறு குழப்பநிலைகள் ஏற்படுகின்றன எனத் தெரிவித்து, கடந்த வியாழனன்று கல்வி அமைச்சர் அறிவித்தல் ஒன்றையும் விடுத்துள்ளார்.

முழுமையாக முகத்தை மூடுவது தொடர்பாக அவசரகாலச் சட்டவிதிகளின் கீழ் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்படும் கட்டளைக்கு அமைவாகவும், முகத்தை மூடுதல் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ள சுற்றுநிருபத்துக்கு அமைவாகவும் அமைச்சரின் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் நோக்கும் போது தொடர்ந்தும் இவ்விடயத்தில் பல்வேறு அழுத்தங்கள் ஏற்படலாம் என்ற நிலைமையே தெளிவாகின்றது.

அவசரகால நிலைமையைக் கருத்தில் கொண்டு முஸ்லிம் மக்கள் இந்த சட்ட அமுலாக்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் நிலையில் சிலர் இதனைத் தவறாகப் புரிந்துகொண்டு தமது சொந்த விருப்பங்களுக்கு அமைய இந்த ஆடை அணிதல் தொடர்பில் கருத்துக்களைப் பகிர்ந்து வருகின்றனர்.

சிலர் அபாயாவை கறுப்பு நிறத்தில் உடுத்தாது வேறு வர்ணங்களில் உடுத்த வேண்டும் என்கின்றனர். இன்னும் சிலர் இது அரேபிய கலாசார ஆடை இதை முற்றாகத் தடைசெய்ய வேண்டும் என்கின்றனர்.

மொத்தத்தில் இந்த ஆடை அணிதல் தொடர்பில் திடீரென எழுந்துள்ள நெருக்குவாரமானது பல்வேறு ஐயப்பாடுகளைத் தோற்றுவிக்கும் நிலைகளை எடுத்துக்காட்டுகின்றன.

தனிமனித சுதந்திரம் மறுக்கப்படுகின்றமைக்கு அப்பால் கலாசாரப் பாரம்பரியங்களை வேரறுக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என்றே கருதவேண்டியுள்ளது.

எனவே, இந்த விடயத்தில் முஸ்லிம் மத மற்றும் அரசியல் தலைமைகள் விழிப்புடன் செயற்பட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன்" எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

---

**நிசாத்துக்கு எதிராகப் பிரேரணை**


## என் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### இராஜாங்க அமைச்சர் நிரோசன் உறுதி

உயிர்த்த ஞாயிறு அன்று நடந்த தாக்குதல் தொடர்பில், நாடாளுமன்றத் தெரிவுக் குழு எவ்வித தீர்மானத்தை எடுத்தாலும், அமைச்சர் நிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்த தனது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லையென, இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா தெரிவித்தார்.

புத்தளம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தீவிரவாதம், பிரிவினைவாதக் குழுவினரை அழிப்பதற்கு தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு காலம் தாழ்த்தப்பட்டுள்ளதாகவும், நிரோசன் தெரிவித்தார்.



மேலும் அமைச்சர் நிசாத் அரசாங்கத்துக்குள் பொறுப்புக்களுடன் இருக்கும் நபர் என்பதால், இந்தச் சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகள் இடம்பெறாது என்று நம்புவதாகவும் இராஜாங்க அமைச்சர் நிரோசன் பெரேரா மேலும் தெரிவித்தார். (இ-7)

---

**பயங்கரவாதத்தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைக்கு வருமாறு அதிகாரிகளுக்கு அழைப்பு**

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்ய அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு நாளை மறுதினம் 29 ஆம் திகதி சம்பவங்கள் தொடர்பான உயர்மட்ட அதிகாரிகளை விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன், இராணுவ தளபதி மகேஷ் சேனநாயக்க, பாதுகாப்புத் தளபதி அட்மிரல் ரவீந்திர விஜயகுணரட்ன ஆகியோரையே இவ்வாறு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இந்த பயங்கரவாத தாக்குதல் இடம்பெறுவதற்கு சில நாட்களுக்கு முன்னர் இந்த விடயம் தொடர்பான எச்சரிக்கையை பெர்னாண்டோ மற்றும் ஜெயசுந்தரவிடம் முன்வைத்ததாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தகவல்களை அவர்கள் பகிர்ந்து கொள்ளவில்லை.

ஆளும் கட்சியில் இருந்து 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சியில் இருந்து 13 உறுப்பினர்களும் 5 தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் 2 மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு இந்த விடயம் தொடர்பான விசாரணைகளின் அறிக்கையினை எதிர்வரும் 3 மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (7)

---

## வட்ஸ்அப் சமூக வலைத்தளத்தை நடத்திய தர்காநகர் இளைஞர்கள் மூவர் கைது

"தர்கா டவுன் பிரேகிங் நியுஸ்" எனும் பெயரில் 100 உறுப்பினர்களுடன் நடத்தப்பட்டு வந்த "வட்ஸ்அப்" சமூக ஊடகத்தின் உரிமையாளர் உட்பட மூவர் அடிப்படைவாத கருத்துக்களை வெளியிட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் 20 இற்கும் 23 இற்கும் இடைப்பட்டவர்கள் எனவும் இந்தச் சமூக ஊடகத்துடன் தொடர்புடைய 25 பேர் நேற்று அந்த ஊடகத்திலிருந்து தங்களை விலக்கிக் கொண்டுள்ளதாகவும் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இந்த வட்ஸ்அப் சமூக ஊடகத்தை கடந்த 3 வருட காலமாக நடத்தி வரும் இளைஞர்கள் 23 வயதுடைய ஒருவர் எனவும், இவர் வெளிநாட்டில் சில காலம் வேலைபார்த்துவிட்டு வந்தவர் எனவும் இந்தச் சந்தேகநபர்கள் 3 பேரையும் தடுத்து வைத்து விசாரணை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7)

# அமைச்சர் றிசாத்தை பாதுகாக்கவே அரசாங்கத்துக்கு எதிராக பிரேரணை

## ஜே.வி.பி.மீது நாமல் பாய்ச்சல்



(கண்டி)

அமைச்சர் றிசாத் பதியுதீனை பாதுகாக்கும் நோக்கிலேயே அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட்டுள்ளதாக மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டினார். மேலும், ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ராஜபக்ஷவினருக்கு இடையில் எந்தவித போட்டியும் நிலவவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து, கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார்.

"அரசாங்கத்துக்கு எதிராக எத்தனை நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டாலும் அதற்கு ஆதரவாக வாக்களிக்க நாம் ஒருபோதும் யோசிக்கப்போவதில்லை.

மேலும், அரசாங்கத்துக்கு தற்போது அமைச்சர் றிசாத் பதியுதீனைப் பாதுகாக்க வேண்டிய தேவையுமில்லை என்றே தெரிகிறது. ஆனால், தற்போது இது தொடர்பில் ஆராய்வதற்காக தெரிவுக்குழுவொன்றை நியமித்துள்ளது.

ஜே.வி.பி. நாடாளுமன்றை கலைப்பது தொடர்பிலான பிரேரணையொன்றை கொண்டு வந்தால் நாம் நிச்சயமாக ஆதரவளிப்போம்.

எனினும், அரசாங்கத்திலுள்ள பிரச்சினைகளை மூடிமறைக்கவே தற்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் ஓர் அங்கமாகவே, அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையும் அமைந்துள்ளது.

அரசாங்கம் தவறு செய்யவில்லை என்றால், அமைச்சர் றிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை முதலில் விவாதத்திற்கு எடுக்க வேண்டும்.

அதைவிடுத்து, எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சுமத்துவதையே அரசாங்கம் இலக்காகக்கொண்டு செயற்பட்டு வருகிறது.

றிசாத் பதியுதீன் நல்லவர் என்றால், அரசாங்கம் அவருக்கே வாக்களிக்கட்டும். அதைவிடுத்து, இதை மூடிமறைக்கும் விதமாக செயற்படக்கூடாது. இவ்வாறான செயற்பாட்டால் நாட்டின் பாதுகாப்புதான் பலவீனமடையும்.

இந்த அரசாங்கமானது எதிர்க்கட்சிகள் மற்றும் மக்களை அடக்குவதில்தான் தற்போது மும்முரம் காண்பிக்கிறது. பொலிஸையும் அரசாங்கம் இதற்காகத்தான் கடந்த 4 வருடங்களாக பயன்படுத்தியது.

அத்தோடு, ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் பல்வேறு கருத்துக்கள் வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதுதொடர்பில் ராஜபக்ஷவினருக்குள் எந்தவித போட்டியும் நிலவவில்லை என்பதை நான் இவ்வேளையில் கூறிக்கொள்கிறேன்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன், உரிய நேரத்தில் எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ எமது வேட்பாளரையும் அறிவிப்பார். எனவே, ஐக்கிய தேசியக் கட்சி யாரை வேட்பாளராக நியமித்தாலும் நாம் அஞ்சப்போவதில்லை" என மேலும் அவர் தெரிவித்தார். (இ-7)

## ஜனாதிபதிக்கும் முஸ்லிம் அரசியல் தலைவர்களுக்குமிடையில் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அடங்கலாக அரசியல் பிரமுகர்களுக்குமிடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிசாளரும், இராஜாங்க அமைச்சருமான எம்.எஸ்.எஸ்.அமீர்அலி தெரிவிக்கையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் முஸ்லிம் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அடங்கலாக அரசியல் பிரமுகர்களுக்குமிடையிலான சந்திப்பு திருப்தியளிக்கின்றது.

இவ்வாறான முஸ்லிம் அரசியல் தலைவர்களுடனான சந்திப்பு இரு வாரங்களுக்கு ஒரு முறை நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தேடுதல் நடவடிக்கைகளின் போது அல்குர்ஆன் பிரதிகள், அரபு மொழியிலான நூல்கள், பத்திரிகைகள், வாள்கள், கத்திகள் என்பவற்றை தம்வசம் வைத்திருந்தனர் என்ற காரணத்தால் அப்பாவிகள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக அதிகம் பேசப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸ்மா அதிபரும், சட்டமா அதிபரும் இணைந்து சம்பந்தப்படாதவர்களை விடுதலை செய்வது தொடர்பாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும் முஸ்லிம் பெண்களின் ஆடை விவகாரம் தொடர்பாகவும் பேசப்பட்டுள்ளது. சில அலுவலகங்களிலும் அமைச்சுக்களிலும் பாடசாலைகளிலும் நிலவுகின்ற முரண்பாடுகள் தொடர்பாகவும் தெளிவாக உரையாடப்பட்டுள்ளது.

ஏற்கனவே தீர்மானித்ததன்படி முகத்தைத் திறந்த நிலையில் அபாயா அணிவதற்குரிய நடைமுறையை எல்லா நிறுவனங்களிலும் கடைப்பிடிக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்ததுடன், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சர், பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் தொலைபேசியில் வேண்டுகோள் விடுத்தார்.

பாரதூரமான குற்றச் செயல்களை புரிந்தவர்களுடன், தற்போது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளவர்களை விளக்கமறியலில் ஒன்றாக தங்க வைப்பதனால் ஏற்படும் விபரீதங்கள் பற்றியும் இதன்போது ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டம் போன்றவற்றின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் மீதான வழக்குகளை கையாள்வதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தில் தனியானதொரு பிரிவை நிறுவுவதாக இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுவார்த்தையின் போது சமுகமளித்திருந்த பொலிஸ் திணைக்கள குறைகேள் அதிகாரி (ஒம்புட்ஸ்மன்) பிரதி பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.எம்.ஜே. விக்கிரமசிங்கவுக்கு இது தொடர்பில் கவனிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், புனித ரம்ழான் நோன்பின் இறுதிப் பத்து நாட்களிலும் முஸ்லிம்கள் சன்மார்க்க கடமைகளில் அதிகமாக ஈடுபடுவதனால், அவசியமற்ற தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் காரணமாக மக்கள் அசௌகரியத்தை எதிர்நோக்குவதால் அவற்றை தளர்த்துமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதனை செவிமடுத்த ஜனாதிபதி, பதில் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவை தொடர்பு கொண்டு அதற்கான பணிப்புரையை விடுத்துள்ளார்.

சில ஊடகங்கள் பொறுப்பற்ற ரீதியில் முஸ்லிம்களுக்கு எதிரான விஷமப் பிரசாரத்திலும் செய்திகளை மிகைப்படுத்தி பெரும்பான்மை மக்கள் மத்தியில் வீணான அச்சத்தை உண்டுபண்ணும் விதத்தில் நடந்து கொள்வதாகவும் இதற்கெதிராக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. அத்துடன் இனவாதத்தை தூண்டும் விதத்தில் பதாகைகள் மற்றும் சுவரொட்டிகளை காட்சிப்படுத்துவதை தடை செய்யுமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பிப்பதாக கூறியுள்ளார்.

பெரும்பான்மை இனத்தவர்களின் 4000 பெண்களுக்கு குடும்பக்கட்டுப்பாட்டு அறுவைச் சிகிச்சை மேற்கொண்டதாக சிங்கள தினசரி பத்திரிகையொன்று கடந்த வியாழக்கிழமை தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் குருநாகல் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் முஸ்லிம் வைத்தியர் ஒருவரின் பெயர் குறிப்பிட்டு நேற்று முன்தினம் சனிக்கிழமை அதே பத்திரிகை தலைப்புச் செய்தி பிரசுரித்திருந்ததும் சுட்டிக்காட்டப்பட்டது.

ஜனாதிபதியுடனான இந்த முக்கிய சந்திப்பில் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன், எம்.எச்.ஏ. ஹலீம், இராஜாங்க அமைச்சர்களான எம்.எஸ்.எஸ். அமீர்அலி, அலிசாஹிர் மௌலானா, பிரதி அமைச்சர் அப்துல்லாஹ் மஹ்ரூப், முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், எம்.ஐ.எம்.மன்சூர், காதர் மஸ்தான், எஸ்.எம்.எம். இஸ்மாயில், பைசர் முஸ்தபா ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

## இலங்கைக்கு சீன அரசாங்கம் விதித்திருந்த தடையில் தளர்வு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தை அடுத்து இலங்கைக்கு சீன நாட்டவர்கள் சுற்றுலாவுக்கென விஜயம் செய்வதில் சீன அரசாங்கம் விதித்திருந்த தடையில் தளர்வு ஏற்படுத்தப்பட்டது.

சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கும் இலங்கைக்கான சீன தூதுவருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்கான சுற்றுப் பயணத்தை தவிர்க்குமாறு சீனா ஆரம்பத்தில் அறிவித்திருந்தது. தற்பொழுது இலங்கைக்கான சுற்றுப் பயணத்தின் போது அவதானத்துடன் செயற்படுமாறு சீனா அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு இலங்கை சுற்றுலாத் தொழிற்றுறைக்கு சிறந்ததொரு மேம்பாட்டு நடவடிக்கையாகும் என இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இலங்கைக்கான சுற்றுலாப் பயணத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை வெளி நாடுகள் நீக்க வேண்டும் என்று இலங்கையிலுள்ள தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களிடம் கேட்டுக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## அதிர்ஷ்ட இலாப சீட்டின் மூலம் மோட்டார் சைக்கிள் கிடைத்தது

தேசிய லொத்தர் சபையின் அதிர்ஷ்ட இலாப சீட்டின் மூலம் பருத்தித்துறை மாதனைப் பகுதியைச் சேர்ந்தவருக்கு (ஸ்கூட்டர்) மோட்டார் சைக்கிள் ஒன்று கிடைத்துள்ளது. கடந்த 16 ஆம் திகதி வியாழக்கிழமை அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட சீட்டிழுப்பின் மூலம் விசேட இலக்கங்கள் பொருந்தியதில் குறித்த நபருக்கு மோட்டார் சைக்கிள் கிடைத்தது. (இ-10-27:2)

# இலங்கையில் தமிழர்


## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்


257

அத்தோடு சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பெரும்பான்மை இனத்தவருக்கு வழங்கப்பட்ட சுதந்திரம், தமிழர் இனம், கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், அரசியல் என்ற அத்தனை துறைகளிலும் அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு அவர்களின் உயிர்களும் உடைமைகளும் தொடர்ச்சியாக இன்றுவரையிலும் சிங்கள அரசினாலும் அதன் ஆயுதப் படைகளினாலும் அழிக்கப்படுவதற்கு அடிப்படைக் காரணமாக மட்டுமன்றி உடனடிக் காரணமாகவும் இருந்துள்ளது.

அத்தோடு பிரித்தானியரின் ஆரம்ப ஆட்சிக் காலத்திலிருந்து ஏற்பட்ட பல்வேறு சமூக, அரசியல் காரணங்களால் தமிழர் தமது பாரம்பரிய பிரதேசமாகிய வடமேல் மாகாணத்தை நிரந்தரமாக இழந்தனர் என்பது பற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. சோல்பரி அரசியல் திட்டத்தின் பெறுபேறாக பெரும்பான்மையினரிடம் இலங்கை ஒப்படைக்கப்பட்டதன் விளைவாக தமிழரின் பாரம்பரியப் பிரதேசங்களாகிய கிழக்கு இலங்கையும் வன்னிப் பிரதேசத்தின் தெற்குப் பகுதிகளும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் சிங்களமயமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.



மகாத்மா காந்தி



ஜவஹர்லால் நேரு

## பிரித்தானியர் அதிகாரமும் தமிழரின் ஆட்சியுரிமை நிராகரிப்பும் (கி.பி. 1833-கி.பி. 1948)

இலங்கைத் தீவில் வரலாற்றுக் காலம் தொட்டு தனியான வரலாற்றுப் பாரம்பரிய பிரதேசங்களையும் தனியான ஆட்சியமைக்கும் அரசுகளையும் தனித்துவமான சமய, மொழி, கலை, கலாசார விழுமியங்களையும் கொண்டு வாழ்ந்த இரண்டு தேசங்களின் மக்களாகிய பெரும்பான்மை சிங்களவருக்கும் சிறுபான்மைத் தமிழருக்கும் பன்முக அமைப்பு முறைமையைக் கொண்ட பிரித்தானியரின் வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்ற ஆட்சி நடைமுறையில் பெரும்பான்மை மக்கள் பலத்தைக் கொண்டு தீர்மானிக்கப்படும் அரசியல் யாப்பு முறைமையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியமை எவ்வகையிலும் பொருத்தமற்ற செயலாகும்.

மேலும் சோல்பரி ஆணைக் குழுவினர் இலங்கையின் பல வேறு இடங்களுக்கும் சென்று பல்வேறுபட்ட மக்களையும் அரசியல் தலைவர்களையும் சமூக அமைப்புக்களையும் சந்தித்தமை பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. அக்குழுவினர் யாழ்ப்பாணத்திற்கும் சென்று அங்கு பருத்தித்துறையிலுள்ள வாடிவீடொன்றில் பல அரசியல் தலைவர்களையும் சமூக அமைப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.

அப்பொழுது தமிழ்த் தரப்பினர் தமிழரின் அரசியல் நிலையை உரிய முறையில் சோல்பரி பிரபுவுக்கும் குழுவினருக்கும் விளங்க வைத்தனர். அப்போது சோல்பரி ஆணைக்குழுவினர் தமிழர் முன்வைத்த பிரச்சினைகளை நன்றாகப் புரிந்து கொண்டபின் தமிழரின் அரசியல் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் பொருட்டு முக்கியமான சரத்து தமது யாப்பில் இடம்பெறும் என வாக்குறுதியளித்துள்ளனர்.

மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழர் ஒருவர் நேரடியாக இவ் ஆய்வாளருக்கு வழங்கிய பேட்டியுள்ளது. அத்தலைவர் இன்றும் உயிரோடு இருப்பதால் அவர் பெயரை இங்கு குறிப்பிட முடியாதுள்ளது. பேட்டி இந்தியாவில் 1997 இல் வழங்கப்பட்டது.

இவ்வாறு வாக்குறுதி அளித்த சோல்பரி பிரபு கொழும்பு சென்றதும் தமிழருக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றத் தவறிவிட்டதாக மேற்குறிப்பிட்ட தமிழ்த் தலைவர் கூறியிருந்தார். டி.எஸ்.சேனநாயக்க, சேர். ஐவர் ஜென்னிங்ஸ் உதவியுடன் பெரும்பான்மை மக்களுக்குச் சாதகமான பல்வேறுபட்ட தவறான தரவுகளையும் புள்ளி விபரங்களையும் உள்ளடக்கித் தயாரித்த அறிக்கையை சோல்பரி ஆணைக்குழுவினர் முன்னிலையில் சமர்ப்பித்து அந்நகல் திட்டத்தை சோல்பரி ஆணைக்குழுவினர் ஏற்கும் நிலைக்கு அவர்களை நிர்ப்பந்தித்திருந்தார் என்றும் மேற்குறிப்பிட்ட தமிழர் கூறியிருந்தார்.

லண்டன் தேசிய ஆவணக் காப்பகத்தில் கிடைக்கப்பெற்ற ஒரு பத்திரிகைச் செய்தியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் இணைச் செயலாளர் டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன் எழுதிய கட்டுரையொன்றில் தவறான புள்ளிவிபரங்களை உள்ளடக்கிய அரசாங்க சபை அமைச்சர்களின் நகல் திட்டத்தை சோல்பரி ஆணைக்குழுவினர் ஏற்று அதனடிப்படையில் சோல்பரி அரசியல் திட்டத்தை தயாரித்துள்ளனர் என்ற கருத்துப்பட எழுதியுள்ளார்.

இவற்றைவிட 1947 இல் நடந்த முதலாவது தேர்தல் முடிவுகள் சிறுபான்மையினருக்கு மிகவும் பாதகமாக அமைந்ததுடன் அது சோல்பரி அரசியல் யாப்புக்கு விழுந்த முதல் தார்மீக அடியாகும். இறுதியாகப் பார்க்கையில் தமிழ்த் தலைவர்கள் சிங்களத் தலைவர்களால் ஏமாற்றப்பட்டனர் என்றே தோன்றுகின்றது.

சுதந்திரத்தின் பின்னரான அரசியல் நிகழ்வுகள் தமிழருக்குச் சிங்களவர் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாது போன சந்தர்ப்பங்களாலும் சிங்கள அரசியல்வாதிகளின் முனைப்பான ஏமாற்றுத்தனத்தாலும் நிறைந்து காணப்படுகின்றன.

சோல்பரி பிரபு 1963 ஆம் ஆண்டில் பி.எச். பாமரின் இலங்கை பிளவுபட்டதோர் தேசம் (B.H.Farmer's Ceylon: A Divided Nation) என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமாகும்.

சோல்பரி ஆணைக்குழுவினருக் காலங்காலமாக இரு இனங்களுக்குமிடையில் நிலவிய பகைமையையிட்டு ஒரு மேலோட்டமான அறிவே இருந்தது. நிச்சயம் நூற்றாண்டுகள் பழைமையான வரலாற்றுப் பிரச்சினைகள், இன்றைய இலங்கையர் மேல் சுமத்தியுள்ள வெறுக்கத்தக்க பாதிப்புக்களை விளக்கும் பாமரின் இந்த நூல் அப்போதே கிடைத்திருப்பின் ஆணைக்குழுவினர் தமது திட்டம் ஒரு தீர்வைக் கொண்டு வரும் என அதிகம் நம்பிக்கை கொண்டிருந்திருக்கமாட்டார்கள்.

மேற்குறிப்பிட்ட சோல்பரி பிரபுவின் கூற்று ஏற்கனவே குறிப்பிடப்பட்ட செவிவழிச் செய்தியை ஓரளவேனும் நிரூபிப்பதாகவும் உள்ளது. தமிழ் அரசியல் தலைவர்கள் தம்மால் முடிந்தவரை சோல்பரி பிரபுவுக்கும் பிரித்தானிய அரசுக்கும் தமிழரின் அரசியல் நிலைமைகளை எடுத்துக் கூறியிருந்த போதிலும் பிரித்தானிய அரசு இலங்கை மீது தமக்கிருந்த அதிகாரத்தைப் பிரயோகித்து சிங்களப் பெரும்பான்மை இனத்திற்கும் பிரித்தானியாவுக்கும் சாதகமான சோல்பரி அரசியல் யாப்பை அமுல்படுத்தியது. தமிழ் அரசியல் தலைவர்கள் தாம் ஏமாற்றப்பட்ட ஒரு நிலையில் தவிர்க்க இயலாதவாறு சிங்கள அரசியல் தலைவர்களிடம் தஞ்சம்புக நேரிட்டது.

எனவே 1947களிலிருந்து இன்றுவரை தமிழரின் அழிவுக்கும் அரசியல் சீர்குலைவுக்கும் சோல்பரி ஆணைக்குழுவினரும் பிரித்தானிய அதிகாரவர்க்கமுமே முழுப் பொறுப்பாளிகள் என்பதனை நேர்மையுள்ள அரசியல்வாதிகளும் ஏனையோரும் நிச்சயம் ஏற்றுக் கொள்வர் என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது. (தொடரும்)

# கூலிக்கு கொலை செய்யும் முன்னாள் இராணுவச் சிப்பாய் உட்பட நான்கு பேர் கைது!

(பிலியந்தல)

பிலியந்தல தம்பே பிரதேசத்தில் சந்தேகத்தின் பேரில் நடமாடிய நான்கு பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலொன்றையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களிடமிருந்து ஆயுதங்கள் பல மீட்கப்பட்டுள்ளன. இவர்களிடையே முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவரும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கூலிக்கு ஆட்களைக் கொலை செய்யும் திட்டமிட்ட குழுவின் அங்கத்தவர்களே இவர்கள் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இந்த சந்தேகநபர்கள் இரத்மலான குடு அஞ்ஜு என்பவரின் சகாக்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தறை, வெலிகம, பேலியகொட, களனி ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிய வந்துள்ளது.

இவர்கள் பல்வேறு கொலைக் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்பது தெரியவந்துள்ளதுடன், சந்தேகநபர்கள் இன்று திங்கட்கிழமை கெஸ்பேவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# தாக்குதல் சந்தேக நபர்களின் தொலைபேசிகள் ஆராயப்படுகிறது

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் 86 பயங்கரவாத சந்தேக நபர்களின் கைத்தொலைபேசிகளும் தற்பொழுது ஆராயப்பட்டு வருவதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களுக்கும் தடைசெய்யப்பட்ட தௌஹீத் ஜமாத் அமைப்புக்கும் மற்றும் அரசியல்வாதிகள், கோடீஸ்வரர்கள் ஆகியோருக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது. நீதிமன்ற உத்தரவுக்கு அமைய, இது தொடர்பான விசாரணைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. பல்வேறு தொலைத் தொடர்பு நிலையங்களில் இருந்து இதுகுறித்த விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

இதேவேளை, பயங்கரவாதி சஹ்ரானால் 8 சிம்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனையடுத்து, அவரது சிம் அட்டைகளை ஆராயப்பட்டு அவருடன் தொடர்பிலிருந்த, மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேவையாற்றும் நிஜாம் என்ற கணனி இயக்குநர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் பெருங்கோடீஸ்வரராவார். காத்தான்குடியைச் சேர்ந்த இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றும் வருகிறார்.

மேலும் ஒரு கோடீஸ்வரர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் வெளிநாட்டு வங்கி ஒன்றில் கணக்கு வைத்துள்ளார். இவருக்கு எவ்வாறு இந்தளவு தொகை பணம் வந்தது என்பதை அவரால் தெளிவுபடுத்த முடியாதுள்ளது என்ற அவர், மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேவையாற்றிய நிலையில் கைதான நிஜாம், சிரியாவிலுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்துடன் நேரடி தகவல் தொடர்புகளை பேணிவந்தவர்.

இதனிடையே, ஹொரவ பொத்தானையில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் ஐவரும் சஹ்ரானுடன் நேரடி தொடர்புகளைப் பேணிவந்ததாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவிக்கின்றனர். இவர்களின் வங்கிக் கணக்கில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான பணம் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பயங்கரவாதி சஹ்ரானுடனும், தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடனும் நேரடித் தொடர்பை பேணிவந்த நௌபர், சக்கிரியா, ஜெயனுதீன், இர்ஷான், ஜஸ்மின் ஆகிய ஐவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக தெரிவித்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர், கைதானவர்களில் ஹொரவபொத்தானை செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் ஒருவர், இரு அரச ஆசிரியர்கள், கிவுலுகட அரபிக் கல்லூரியைச் சேர்ந்த இரு ஆசிரியர்கள் என ஐவர் அடங்குகின்றனர்.

இவர்கள் அநுராதபுரத்திலும் திருகோணமலையிலும் தீவிரவாதம் தொடர்பில் கருத்தரங்குகளை நடத்தியுள்ளனர். மேலும் இவர்களின் வங்கிக்கணக்கில் பெருந்தொகைப்பணம் உள்ளது. மேலும், இந்த சந்தேக நபர்கள் ஹொரவபொத்தானை காட்டுக்குள் ஆயுதப் பயிற்சியும் பெற்றுள்ளனர் என்றும் அந்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-7)

### மரண தண்டனை, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட

# முக்கிய குற்றவாளிகள் 13 பேர் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றம்

(கொழும்பு)

பாதாள உலகம் மற்றும் போதைப் பொருள் வியாபாரம் போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புடைய குற்றங்கள் நிருபிக்கப்பட்டு மரண தண்டனை பெற்றுள்ளவர்களும், ஆயுள் தண்டனை பெற்றுள்ளவர்களும் பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, குற்றவாளிகள் 13 பேர் நேற்று முன்தினம் வெலிக்கடை மற்றும் மஹர சிறைச்சாலைகளிலிருந்து பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பூஸா சிறைச்சாலையில் பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளை அதிக பாதுகாப்புடன் கூடியதாக தடுத்து வைக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை தலைமையக பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தச் சிறைச்சாலைக்கு இன்று முதல் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1731

### மலரவன்

அடுத்த நிமிடத்தைக்கூட நாம் ஆள முடியாதென்பதே நிஜம். இதில் தேவையற்ற திமிர், வெறுப்பு, ஆணவம் போன்ற குப்பைகளைச் சுமந்து சாகவேண்டாம்... அன்பு செய்வோம்



### நிதுசனா

பிரியமானவர்கள் ஒருபோதும் நம்மைக் காயப்படுத்தமாட்டார்கள் என நம்பவேண்டாம்... சில சமயங்களில் எதிரியைவிட மிக மோசமாகக் காயப்படுத்தி விடுவார்கள்



### தார்மீகன்

பாதை எப்படிப் போகின்றது எனப் பார்க்காதீர்கள்... போகின்ற பாதை சரியானதா? எனப் பாருங்கள்... போகும் இடத்தை அடைந்துவிடலாம்



### செந்தாளன்

தாலி கட்டிய கணவனுக்கு மனைவியை அதிகாரம் செய்ய உரிமை உண்டா? உரிமை உண்டு! ஆனா தைரியம் உண்டா என்பதே கேள்வி.



### லதாங்கன்

கல்யாணத்துக்கு

முன் பின்



### மிதுர்சிகா


சில படங்களுக்கு விளக்கம் தேவைப்படாது!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க நானும் தயாராகவே உள்ளேன்

## வர்த்தகர் தம்மிக்க பெரேரா அறிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்குவதா இல்லையா என்பதை தற்போது கூறமுடியாத போதும் நாட்டுக்காக களமிறங்குவதற்கு தயாராக உள்ளேன் என்று முதல்தர வர்த்தகரான தம்மிக்க பெரேரா தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பினை அடுத்து ஜனாதிபதி அல்லது பிரதமர் வேட்பாளராக தம்மிக்க பெரேரா களமிறங்கவுள்ளதாக பல்வேறு தகவல்கள் வெளியாகிவருகின்ற நிலையில் நேற்று முன்தினம் ஊடகமொன்றுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நான் கடந்த ஆட்சிக்காலத்தில் நாட்டுக்காக எட்டு வருடங்கள் சேவையாற்றியிருந்தேன். தற்போதும் நாட்டுக்காக சேவையாற்றுவதற்கு தயாராகவே உள்ளேன். இன, மத, மொழி, கட்சி பேதமின்றி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு என்னால் முடியும் என்ற நம்பிக்கையில் உள்ளேன்.

எமது நாட்டினை வளமான எதிர்காலம் நோக்கி வலுவானதாக மாற்றியமைப்பதே எனது இலக்காக இருக்கின்றது. அதற்கான திட்டங்களும் என்னிடத்தில் உள்ளன. விசேடமாக, கல்வி, சுகாதாரம், தொழில்வாய்ப்பு, வர்த்தகம், நிதி முகாமைத்துவம், முதலீடுகள், சுற்றுலா உள்ளிட்டவற்றை விரைவாக முன்னேற்றம் காணச்செய்வதற்குரிய சகல திட்டங்களையும் ஒருங்கே கொண்டிருக்கின்றேன்.

தற்போது நாட்டில் முப்பது அமைச்சுக்கள் காணப்படுகின்றன. இவற்றினை மறுசீரமைப்பு செய்ய வேண்டியுள்ளது. அதற்குரிய கொள்கையமைப்புடன் கூடிய செயற்பாட்டு கட்டமைப்புக்களும் என்னிடமுள்ளன.

அமைச்சுக்கள் மறுசீரமைப்பு குறித்த செயற்பாட்டு விடயங்கள் குறித்து யாராவது என்னிடத்தில் பகிரங்க வெளியில் வினாக்களை தொடுப்பதற்கு விரும்பினால் அவற்றுக்கு பதிலளிப்பதற்கு நான் எந்தநொடியிலும் தயாராகவே உள்ளேன்.

இந்த நாடு பன்மைத்துவத்தினைக் கொண்டதாகும். வடக்கு, கிழக்கு, மலையகம், உள்ளிட்ட அனைத்துப் பிரதேசங்களில் வாழும் மக்களுக்கும் வெவ்வேறான பிரச்சினைகள் காணப்படுகின்றன. அமைச்சின் செயலாளராக பணியாற்றிய காலத்தில் வடமாகாண புகையிரத சேவைக் கட்டமைப்பினை காங்கேசன்துறைவரையில் கொண்டு செல்லும் திட்டத்தில் வடமாகாணத்திற்குச் சென்று அந்த மக்களுடன் நெருங்கிப்பழகிய அனுபவங்கள் நிறையவே உள்ளன. அவர்களுக்கு விசேட தேவைப்பாடுகள் இருக்கின்றன என்பதை நான் நன்கறிந்து கொண்டுள்ளேன். இவற்றையெல்லாம் முறையான செயற்பாடுகள் ஊடாக கையாளுகின்ற போது தீர்வுகளை பெறுவதொன்றும் கடினமான விடயமல்ல. ஆகவே அனைத்துப் பிரஜைகளினதும் தேவைப்பாடுகள் பற்றி செயற்பாட்டு ரீதியான நடவடிக்கைகளே அவசியமாகின்றன என்பதையும் நான் நன்கு அறிந்துள்ளேன். ஆகவே அந்த மக்களுக்காக, நாட்டுக்காக செயற்படுவதொன்றும் இயலாத காரியமாக நான் கருதவில்லை என மேலும் தெரிவித்தார். (7)

# பொதுவேட்பாளர் தம்மிக; எவ்வித உண்மையுமில்லை

## எரான் மறுப்பு



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வர்த்தகரான தம்மிக பெரேராவை பொதுவேட்பாளராகக் களமிறக்க ஐக்கிய தேசியக்கட்சி தீர்மானித்திருப்பதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. பொறுப்பு வாய்ந்த கட்சி என்ற அடிப்படையில் இராப்போசன மேசைகளில் வைத்து ஐக்கிய தேசியக்கட்சி இத்தகைய அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளாது என நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

நாங்கள் அனைத்து இடங்களிலும் ஜனநாயகம் குறித்துப் பேசுகின்றோம். நாட்டில் ஜனநாயகம் பேணப்பட வேண்டும் என்று பாராளுமன்றத்தில் கூச்சலிடுகின்றார்கள். ஆனால் கட்சிகளுக்குள் அந்த ஜனநாயகம் இல்லை. பொதுவாக கட்சியில் சாதாரண ஒருவருக்கோ அல்லது நன்கு கற்ற ஒருவருக்கோ முன்னேற முடியாது. தந்தையின் பின்னர் அவரது மகன் அல்லது மகளோ, உறவினரோ தலைமைத்துவத்திற்கு வருவார்கள். அவ்வாறு வந்தவர்கள் பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர்.

கற்றறிந்த அறிவார்ந்த இளைஞர்கள் இருக்கின்றார்கள். அனுபவம் வாய்ந்தவர்கள் இருக்கின்றார்கள். அவ்வாறானவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடிய வகையில் இந்த அரசியல் முறைமை மாற்றமடைய வேண்டும். நாம் எம்முடைய மனசாட்சியைக் கேட்டுப்பார்க்க வேண்டும். நாட்டின் ஜனாதிபதியும், பிரதமரும் தற்போது ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதில் எவ்வித மாற்றுக்கருத்துக்களும் இல்லை. இவ்வனைத்தையும் புரிந்து கொள்ளக் கூடிய தலைமைத்துவமொன்று இருக்க வேண்டும். நான் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் குறித்துப் பேசவில்லை. மாறாக நாட்டின் அரசியல் தலைமைத்துவம் குறித்தே பேசுகின்றேன் என மேலும் தெரிவித்தார். (7)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி சிலாபத்தில் ஒருவர் கொலை

சிலாபம் - திகன்வெவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

திகன்வெவ பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த ஈ.எம். சுஜித் குமார (வயது 28) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபர் தனது மனைவியுடன் அடிக்கடி பிரச்சினையில் ஈடுபடுவாரென்றும் இதனால் அவரது மனைவி தந்தையின் வீட்டுக்குச் சென்ற நிலையில் நேற்று அதிகாலை அதிக மதுபோதையில் இந்நபர் தனது மனைவியைத் தேடிச் சென்றுள்ளதோடு அங்கு இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தின் பின்னரே அந்நபர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து பலத்த காயங்களுக்குள்ளான நபர் சிலாபம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் இனங்காணப்பட்ட போதிலும் அந்நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

# செய்தித்துளிகள்

## நீதிமன்றம் செல்வதற்கு ஆயத்தமாகும் பந்துல



(கொழும்பு)

தேசிய கல்வி கொள்கையிலிருந்து வெளியேறி மத்ரஸா பாடசாலைகளை பதிவு செய்வதற்காக அரசாங்கம் அனுமதி வழங்க ஆயத்தமானால், அதற்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக ஒன்றிணைந்த எதிரணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகச் சந்திப்பொன்றில் வைத்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## காற்றுடன் மழை 10 வீடுகள் சேதம்

(பதியதலாவ)

பதியதலாவ பகுதியில் வீசிய கடும் காற்று காரணமாக பல வீடுகள் சேதமடைந்தன. கல்வெலந்த மற்றும் கஹட்டின்ன கிராமங்களுக்கு இடையே நேற்று முன்தினம் மாலை வீசிய கடும் காற்று காரணமாக சுமார் 10 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதிகளில் வீசிய கடும் காற்றுடன் பலத்த மழையும் பெய்ததாக தெரிவிக்கப்படுகின்றது. பதியதலாவ பொலிஸார் மற்றும் பிரதேச செயலகத்தின் உதவியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## புதையல் தோண்டிய 7 பேர் கைது

(கல்கரியாகம)

கல்கிரியாகம - உல்பதகம பகுதியில் தனியார் காணி ஒன்றில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த 7 பேர் கைது செய்யப்பட்டனர்.

கல்கிரியாகம பொலிஸார் நேற்று அதிகாலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே குறித்த 7 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கல்கிரியாகம, நாச்சதுவ, தேவகூவ மற்றும் பலாகல பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


இச் சம்பவம் தொடர்பில் கல்கிரியாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கொடிகாமம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 80 | 80 | 80 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 110 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 120 | 130 | 160 | 170 | 120 |
| தக்காளி | 100 | 120 | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 150 | 160 | 140 | 100 |
| கோவா | 120 | 100 | 120 | 90 | 120 |
| கரட் | 80 | 160 | 140 | 100 | 240 |
| பூசணி | 50 | 60 | 60 | 65 | 80 |
| புடோல் | 80 | 100 | 80 | 80 | 120 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 65 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 150 | 140 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 160 | 180 | 180 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 | 90 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 60 | 60 | 60 |
| பயற்றங்காய் | 120 | 140 | 80 | 70 | 100 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 100 | 120 |
| பீற்றூட் | 40 | 120 | 120 | 90 | 140 |
| கறிமிளகாய் | 180 | 100 | 160 | 80 | 160 |
| முருங்கைக்காய் | 200 | 170 | 80 | 70 | 120 |
| போஞ்சி | 250 | 220 | 240 | 200 | 200 |
| கத்தரிதும்புள்ள | 100 | 80 | — | 60 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 30 | 20 | 40 |
| தேசிக்காய் | 500 | 500 | 400 | 320 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 45 | 30 | 30 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 180 | 160 | 110 | 160 |
| வெங்காயப்பூ | 250 | 200 | 240 | 200 | 280 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | — | 100 | 60 | — | 120 |




# இரண்டு சீடர்கள்



ஒரு காட்டில் கருணை வேந்தன் என்ற முனிவர் ஆசிரமத்தை அமைத்து தம் சீடர்களுக்குக் கல்வி புகட்டி வந்தார். அவரது சீடர்களில் எல்லாச் சீடர்களையும் விட முன்னதாக விளங்கினர் மகிமைதாசன், சந்துரு என்பவர்கள்.

ஒரு நாள் கருணைவேந்தன் அந்த இரு சீடர்களையும் அழைத்து, "நீங்கள் இருவரும் என் சீடர்களில் சிறந்தவர்களாக விளங்குகிறீர்கள். நீங்கள் என்னிடம் கற்க வேண்டியது எல்லாம் கற்றாகி விட்டது. இனி உங்கள் இருப்பிடங்களுக்கு செல்லலாம்" என்றார்.

"குரு சிரேஷ்டரே! எங்களுக்கு இப்போது அபூர்வ சக்திகள் கிடைத்துள்ளன. எங்கள் சக்தி கண்டு மற்ற மனிதர்கள் எங்களைச் சீண்டி துன்புறுத்தினால் நாங்கள் கோபம் அடைந்து அவர்களைச் சபித்தாலும் சபித்து விடுவோம். எங்களுக்குச் சாபம் கொடுக்கத்தான் தெரியும். கொடுத்த சாபத்தை விலக்கும் முறை தெரியாது. எனவே, அதையும் நீங்கள் எங்களுக்குக் கற்பித்தால் எல்லோருக்கும் நன்மை உண்டாகுமே!" என்றனர்.

அப்படியானால் தன் ஆசிரமத்தில் மேலும் ஒரு மாதம் தங்கும்படி கூறினார். இரண்டு வாரங்களுக்குப் பின், "சாபத்தை விலக்கும் முறையை அறிய கடும் உபாசனை மேற்கொள்ள வேண்டும். அது எல்லோராலும் முடியாது. உனக்கு அதனைக் கூறுகிறேன்," என்றார்.

சந்துரு மிகவும் மகிழ்ந்து போனான். அவன் தன் குரு கூறியபடி உபாசனையை செய்யலானான். அதே சமயம் கருணைவேந்தன் மகிமைதாசனை அழைத்து, "நீ இனியும் இங்கே இருப்பது வீணே. உன்னால் சாபத்தை விலக்கும் முறையைக் கற்க முடியாது என்று எனக்குத் தெரிந்து போயிற்று. அதனால் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்து கொள்" என்று கூறி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டார்.

சந்துரு தன் உபாசனையை முடித்துக் கொண்டு குருவிடம் விடை பெற்று தன் ஊருக்குப் போய்ச் சேர்ந்தான். இதற்குப் பின் ஐந்தாறு ஆண்டுகள் சென்றன.

ஒருநாள் அந்நாட்டு மன்னன் மாரவர்மன், கருணை வேந்தனை தன் தர்பாருக்கு வரும்படி ஆட்களை அனுப்பினான். மன்னன் அனுப்பிய ரதத்தில் அமர்ந்து அரண்மனையை அடைந்தார் குரு.

"நான் என் தர்பாரில் தகுதியும் திறமையும் பெற்ற ராஜ குரு ஒருவரை நியமனம்செய்ய விரும்புகிறேன். அப்பதவிக்கு ஏற்றவர்கள் தங்களது சீடர்களான மகிமைதாசனையும் சந்துருவையும் எல்லோரும் பரிந்துரைக்கின்றனர்.

"சந்துரு நாடெங்கிலும் பயணம் செய்து மிகவும் சக்தி வாய்ந்தவன் எனப் பெயர் பெற்றிருக்கிறான். அவனைக் கண்டு கொடியவர்கள் நடுங்கி தம்மைத் திருத்திக் கொண்டு நல்லவர்களாக ஆகிவிடுகின்றனர்.

"அவனுக்குப் பல சீடர்கள் கூட இருக்கின்றனர். அவர்கள் தம்மை "தாச சேனை" எனக் கூறிக் கொண்டு கொடியவர்களைத் தேடிப் பிடித்து தம் குருவின் முன் கொண்டு போய் நிறுத்துகின்றனர். அக்கொடியவர்கள் எங்கே சந்துரு தங்களை சபித்து விடுவானோ எனப் பயந்து திருந்தி விடுகின்றனர்." என்றார்.

"அப்படியா? சரி! மகிமைதாசனைப் பற்றி என்ன தெரிந்து கொண்டீர்கள்?" என்று கேட்டார்.

"அவனுக்கு சந்துருவைப் போல அவ்வளவு புகழ் இல்லை. அவனுக்குச் சீடர்களும் மிகக் குறைவே. அவன் அவ்வப்போது மக்களை நல்வழிப்படுத்த சொற்பொழிவுகள் ஆற்றி அறிவுரை கூறுகிறான்."

"அவனது பேச்சைக் கேட்க ஆவலுடன் மக்கள் கூடுகின்றனர். அவனது அறிவுரைக் கேட்டு பலர் திருந்தியும் உள்ளனர். அவனுக்கு மக்களிடையே உயரிய மதிப்பு உள்ளது. ஆனால், அவனிடம் அரிய சக்திகள் உள்ளனவா என்று யாருக்கும் தெரியாது." என்றான்.

"எனக்கு இருவரில் மகிமைதாசனையே பிடிக்கும். அவனே இந்த ராஜகுருப் பதவிக்கு ஏற்றவன்." என்றார். மன்னனும் குருவின் யோசனையை ஏற்று மகிமைதாசனையே ராஜகுருவாக அமர்த்தி கொண்டான்.

சந்துருவுக்கு தான் சாபத்தை விலக்கும் முறையைக் கற்பித்தார். மகிமைதாசனால் கற்க முடியாது என்று கூறி ஊருக்கு அனுப்பி விட்டார். ஆனால், ராஜகுருவை நியமிக்கும் விடயத்தில் மகிமைதாசனையே அப்பதவியில் அமர்த்தும் படி கூறினார்.

இதன் காரணம் என்ன என்று சொல்லுங்கள் பார்ப்போம்.

"உலகில் சிலர் புகழ்பெற விரும்புகின்றனர். வேறு சிலர் அடக்கமாக இருக்கின்றனர். சந்துரு முதல் ரகத்தைச் சேர்ந்தவன். மகிமைதாசன் அடக்கமாக இருந்து தன் சக்தியை வெளிச்சம் போட்டுக் காட்டாமல் இருந்தான். சந்துருவைக் கண்டு மக்கள் பயப்பட்டனர். மகிமைதாசனை விரும்பி அவன் சொல்வதைக் கேட்கக் கூடினர்.

"ஒருவன் கோபம் கொண்டாலே சாபம் கொடுப்பான். பிறகு அதை விலக்குவான். இதனால் கோபம் கொள்பவன் சந்துரு. சாபம் விலக்கத் தெரியாததால் மகிமைதாசன் கோபமே கொள்ளாமல் அமைதியுடன் வாழ்ந்தான். இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்த்தே அவர் மகிமைதாசனை அப்பதவியில் அமர்த்தும்படிக் கூறினார். அவரது போக்கிலும் முரண்பாடு இல்லை.

சந்துருவுக்கு சாபத்தை விலக்கும் முறையைச் சொல்லிக் கொடுத்தது. அவனால் பிறருக்குக் கெடுதல் ஏற்பட்டாலும் அதை விலக்கி நன்மை புரிய வேண்டும் என்பதற்காகத்தான். மகிமைதாசனால் அவ்வித ஆபத்து ஏற்படாது என உணர்ந்தே அவர் அவனுக்கு அந்த முறையைக் கற்பிக்கவில்லை," எனக் கூறினான்.

## குயில்



கூகூ கூகூ கூகூ என்று
கூவிக் கீதம் பாடுவேன்
கூடி வாழும் சோடிக் குயிலைக்
கூவிக் கூவித் தேடுவேன்

காகம் என்று நீங்கள் என்னைக்
க்ருதிக் கொள்ள வேண்டாம்
காதில் இனிக்கக் கூவும் குரலால்
கண்டு கொள்வீர் என்னை

பார்க்க நானும் கறுப்பு நிறந்தான்
பாடும் குரலைக் கேளும்
பாலும் தேனும் கரும்பும் போலப்
பாடும் குரலைக் கேளும்.

காகக் கூட்டில் முட்டை இடுவேன்
காகம் குஞ்சு பொரிக்கும்
காலஞ் செல்ல எனது குஞ்சு
கனிந்த குரலில் கூவும்

கூவுங் குரலைக் கேட்ட காகம்
குஞ்சைக் கொத்திக் கலைக்கும்
கூவிக் கூவி எனது குஞ்சு
கூட்டை விட்டு பறக்கும்

குஞ்சை நானும் கூட்டிக் கொண்டு
கூவிக் கூவித் திரிவேன்
கூகூ கூகூ கூகூ என்று
கூவிக் கூவித் திரிவேன்

காகக் கூட்டில் முட்டை இட்ட
கள்ளக் குயிலோ நானும்
கல்லும் கனியக் கூவும் குரலைக்
காது கொடுத்துக் கேளும்

## வித்தியாசம் கண்டுபிடியுங்கள்



உங்க கிட்னி பெயில் ஆகிடுச்சு.
நான் என் கிட்னிய படிக்க வைக்கவே இல்லையே டாக்டர் அது எப்படி பெயில் ஆகும்.



மௌனம் அறிவுக்கு அழகு,
பொறுமை திறமைக்கு ஏற்றது.
- கவி காளிதாசர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பஞ்சமா பாதகத்தைச் செய்கின்ற அக்கிரமவாதிகளா நீங்கள்?

2019 ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலையடுத்து, படையினர் நடத்தும் தேடுதல்கள் மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் என்பவற்றில் இருந்து அறியப்படும் தகவல்கள் இப்படியொரு கொடுமைத்தனம் மிக்கவர்களாக அவர்கள் இருந்துள்ளார்களா? என்ற கேள்வி ஏக்கத்தோடு எழுகிறது.

இஸ்லாமிய மதம் சார்ந்த மருத்துவர் ஒருவர் எண்ணாயிரம் சிங்களப் பெண்களுக்கு சட்டவிரோத கருத்தடை செய்துள்ளார் என்ற செய்தியைக் கேட்கும்போதெல்லாம் தலைசுற்றும்.

ஐந்து நேரத்தொழுகை, புனிதமான குர்ரான் படிப்பு, நபிகள் நாயகத்தின் போதனைகளைப் பின்பற்றுகின்ற இறுக்கமான மார்க்கம் என்பனவெல்லாம் இருந்தும் அந்த மருத்துவர் மனித உயிர்ப்புக்கு சமாதி கட்டினார் எனும்போது இதைவிட்ட பெரும் கொடூரம் வேறு எங்குமிருக்க முடியாது.

ஒரு மருத்துவரை கடவுளுக்கு அடுத்தபடியாக நம்பி வருகின்றவர்களுக்குக் குழந்தைகள் கிடைக்காமல் செய்த துரோகத்தனத்தை எவரும் சாதாரணமாகக் கருதிவிட முடியாது.

இதேபோன்று மூதூரில் ஓர் இஸ்லாமியர் போலிப் பெயர் கொண்டு சைவாலயத்தில் பணியாற்றியதுடன் பஞ்சாமிர்தம் என்ற தெய்வீகப் பிரசாதத்துக்குள் கருத்தடை மாத்திரைகளைக் கலந்து கொடுத்திருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணைகள் இடம்பெறுகின்றன எனும்போது இதயம் கருகிக் கொள்கிறது.

என்ன செய்வது கிழக்கு மாகாணம் பறிபோகிறது என்று கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அபயக்குரல் எழுப்பினர்.

முஸ்லிம் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் தமிழ்ப் பிள்ளைகளை கட்டாயத்தின் பேரில் மதம் மாற்றுகின்றனர். தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கின்றனர் என்றெல்லாம் கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் அழுது முறையிட்டனர்.

எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அது பற்றி இம்மியும் கவனம் செலுத்தவில்லை.

பணம் மட்டுமே அவர்களின் ஒரே இலக்காக இருந்தது. இப்போதுகூட முஸ்லிம் அமைச்சர்களின் பதவிகளைக் காப்பாற்றுவதற்குக் கூட்டமைப்பினர் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

ஆக, இதுவே எங்கள் இனத்தின் தலைவிதியாயிற்று. இந்தத் தலைவிதி நிறைவேற வேண்டும் என்பதாலோ என்னவோ எங்கள் தமிழ் மக்களும் உண்மையைக் கண்டறிய முடியாதவர்களாக இருக்கின்றனர்.

தேர்தல்கள் வருகின்றபோதெல்லாம் கூட்டமைப்பினர் முன்வைக்கின்ற கருத்துக்களை அப்படியே நம்புகின்ற அப்பாவித்தனம் எங்கள் மக்களிடம் மிகுந்துள்ளது.

தேர்தல் காலங்களில் வீடு தேடி வருகின்ற அரசியல்வாதிகளைப் பார்த்து நீங்கள் பணம் சம்பாதித்ததைவிட, தமிழ் மக்களுக்கு என்ன செய்தீர்கள்? என்று கேட்பாஸ் கூட அவர்கள் அச்சம் கொள்வர்.

மாறாக எந்தக் கேள்வியும் இல்லை. மீண்டும் எங்களுக்கே வாக்கு எனும்போது அவர்கள் ஏன் கலங்கப் போகிறார்கள். வாழ்மானம் தமிழினத்துக்காக ஆகி விடுகின்றது.

# றிசாத்துக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையை நிராகரித்த பிரதமர்!

## ஆளும்கட்சி கூட்டத்தில் பெரும் அமளிதுமளி

(கொழும்பு)

அமைச்சர் றிசாத்பதியுதீனுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையொன்றை நிறைவேற்றுமாறு ஆளுங்கட்சி கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்தார்.

சுற்றுலாத்துறை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கவாலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடியது.

இதன்போது அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக கூட்டு எதிரணியால் முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இதில், முதலில் கருத்து வெளியிட்ட அமைச்சர் கபீர் ஹாசிம்,

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகையுடன் கலந்துரையாடிய பின்னரே தீர்மானம் எடுக்கப்படும் என சில எம்.பிக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இது தவறான நடவடிக்கையாகும். அப்படியென்றால் நானும் மௌலவி ஒருவரிடம் கலந்துரையாடிய பின்னரா முடிவெடுக்க வேண்டும்? கட்சி எடுக்கும் முடிவுக்கு கட்டுப்படாவிட்டால் எவராக இருந்தாலும் விரட்ட வேண்டும் என்று கடுந்தொனியில் எச்சரித்தார்.

இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் கத்தோலிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர்,

அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு எதிராக பல தரப்பினரும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர். எனவே, விசாரணைகள் நிறைவடையும்வரை அவர் அமைச்சுப் பதவியைத் துறக்க வேண்டும்.

விசாரணைகள் மூலம் அவர் குற்றமிழைக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்படுமானால், மீண்டும் அமைச்சுப் பதவியை வழங்கலாம். அவ்வாறு இல்லாவிட்டால் நாங்கள் அரசிலிருந்து வெளியேறுகின்றோம் என்று திட்டவட்டமாக அறிவித்தனர்.

இதன்போது எழுந்த அமைச்சர் றிசாத் பதியுதீன்,

நான் குற்றமிழைத்தவன் அல்லன். கூட்டு எதிரணியின் சூழ்ச்சிக்கு எம்மில் சிலரும் துணைபோகின்றனர். வெளியேறுவதாக இருந்தால் எனது கட்சியின் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் வெளியேறுகின்றேன். அதன்பிறகு நடப்பவற்றை பார்ப்போம் எனப் பதிலுக்கு எச்சரித்தார்.

இவ்வாறு கடும் சொற்போர் மூண்டதால் ஆளுங்கட்சி கூட்டத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டது.

அனைவரையும் அமைதி காக்குமாறு கோரிக்கை விடுத்தபடியே எழுந்த அமைச்சர் ஜோன் அமரதுங்க,

நமக்குள் மோதல் ஏற்பட வேண்டும். ஆளும் கூட்டணி உடைய வேண்டும் என்பதே கூட்டு எதிரணியின் நோக்கமாகும். அவர்களின் ஆசையை நிறைவேற்றும் வகையிலேயே இங்கு சிலர் செயற்படுகின்றனர். எவரும் குழப்பமடைய வேண்டியதில்லை. அமைச்சர் றிசாத் பதியுதீனுக்கு நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணையில் கைச்சாத்திடுவோம். அப்போது இந்த சர்ச்சைக்கு முடிவு கட்டலாம் என்று யோசனை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,

அவ்வாறு பிரேரணை நிறைவேற்ற இங்கு இடமளிக்க முடியாது. விசாரணையொன்றின் மூலமே றிசாத் குற்றமிழைத்துள்ளாரா? இல்லையா ? என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்துள்ளேன்.

எனவே, மாற்று யோசனைகள் இங்கு தேவையில்லை என்றுகூறி குறித்த யோசனையை நிராகரித்தார். (இ-7)

## பாடசாலை அலுவலகத்திலிருந்து

# சஹ்ரானின் விரிவுரைகள் அடங்கிய 135 இறுவெட்டுக்கள், கணனி மீட்பு

மாதம்பேயிலுள்ள பாடசாலை யொன்றின் அலுவலகத்திலிருந்து தௌஹீத் ஜமாத் அமைப்பினரின் இலங்கைத் தலைவனும், தொடர் குண்டுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியுமான சஹ்ரானின் விரிவுரைகள் அடங்கிய மடிக்கணனி யொன்றும், 135 இறுவெட்டுகளும் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் குறித்த பாடசாலையின் பொறுப்பாளரும் கைது செய்யப்பட்டுள்ளதாக மாதம்பே பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து, சிலாபம் - மாதம்பே பிரதேசத்தில் மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போதே, குறித்த பாடசாலையிலிருந்து இவை மீட்கப்பட்டதாகத் தெரிவித்தனர்.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணிவரை வவுனியா பிரதேசத்தில சின்ன சிப்பிக்குளம், Nius Steel Pvt Ltd ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சட்டவிரோத மீன்பிடி இருவர் கைது

முல்லைத்தீவு - கருகந்த பிரதேசத்தை அண்மித்த கடற்பகுதியில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு கடற்படையினர் முல்லைத்தீவு - கருகந்த பிரதேசத்தை அண்மித்த கடற்பகுதியில் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கைகளின் போதே குறித்த சந்தேகநபர்களை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ளவர்கள் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. இவர்களிடமிருந்து, மீன்பிடிப் படகு, வெளியிணைப்பு மோட்டார், 450 அடி நீளமான சட்டவிரோத மீன்பிடி வலை என்பன மீட்கப்பட்டுள்ளன. (மு-3)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஓங்காரம்



சப்தத்தின் மூலநிலையை "ஓம்" என்ற சொல்லால் உணர்த்துகிறார்கள். "ம்" என்னும் எழுத்தின் மூலம் தான் ஓங்காரத்தின் ஓர் இயல்பைப் பிறருக்கு உணர்த்த முடியும் என்று நினைத்தவர்கள் "ம்" என்ற சப்தம் எழாமல் இருக்க அதை ஞாபக அளவில் உணர்ந்து கொள்ளும்படி விளக்கம் செய்தார்கள்.

ஓசையின் விரிந்துயர்ந்த உச்ச நிலையை உணர்த்த உயிரெழுத்தாகிய "ஓ"வின் மூலம் சப்தத்தை எழுப்பி உயர்த்திக் காண்பித்தார்கள். ஓசையின் ஒடுக்க நிலையை "ம்" என்ற ஒலியை அளவில் படிப்படியாகக் குறைத்துக் குறைத்து இசைத்துப் பின் மௌன நிலையில் நினைப்பாகக் காட்டினார்கள். இவ்வாறு சப்தத்தின் விரிவு நிலை, ஒடுக்க நிலை இரண்டையும் முற்காலத்தவர்கள் விளக்கி வைத்தார்கள்.

புலனுணர்ச்சிகளிலே, அறிவைச் செலுத்தி, நாத தத்துவத்தை அறிவிலே விரிவும் தெளிவும் பெறாத மக்களுக்கு ஒருவாறு விளக்க அறிஞர்கள் முயற்சித்தார்கள். ஓசையின் உச்ச நிலையை உணர்த்தும் "ஓ" என்ற ஒலியையும் எழுத்தையும் ஓசையின் ஒடுக்க நிலையை உணர்த்தும் "ம்" என்ற ஒலியையும் எழுத்தையும் ஓ-ம் (ஓஓஓஓம்) என்று ஒலித்துக் காட்டினார்கள். அவைகளை ஏடுகளில் "ஓம்" என்ற எழுத்துக்களாக எழுதிக் காண்பித்தனர்.

அந்த இரண்டு ஓசையும் சேர்ந்து "ஓம்" என்ற தனி ஓசையாயிற்று. அந்த இரண்டு எழுத்தும் சேர்ந்து ஒரு புதிய "ஓம்" என்ற ஒரு கூட்டு எழுத்தாயிற்று. ஆகையால் "ஓம்" என்பது ஒரு சங்கேதம் - குறிப்பு (Symbol) ஆகும். ஆகவே "ஓம்" என்ற ஓசைக்கோ, சொல்லிற்கோ எந்தத் தனிச்சிறப்போ, மதிப்போ கிடையாது. புத்தகத்திலுள்ள கருத்தை அறிந்த பின் புத்தகம் மற்றவர்களுக்குத் தேவையாகும் என்று அதைப் பத்திரப்படுத்தி வருகிறோம். அதுபோல் தான் "ஓம்" என்ற சொல்லும் நிலைத்து வருகிறது தொடர்ந்து வருகிறது.

அந்த ஓங்கார நிலையை உணர்த்துவதற்கும் "ம்" கூடத் தேவையில்லை. இதுபோன்ற ஜ.ஸ புள்ளியே போதுமானது. தனிப்புள்ளியில் உச்சரிப்பு, ஓசையானது எப்படி ஒடுங்கி இருக்க வேண்டும் என்று கூர்ந்து உணர்ந்து உணர்ந்து ஓங்காரத்தின் இயல்பை நன்றாய் அறிந்து கொள்ளலாம்.

# தேசிய ரீதியிலான பெண்களுக்கான சைக்கிளோட்டம் வடக்கு மாகாணத்திற்கு வெள்ளி, வெண்கலம்



தேசிய ரீதியில் இடம்பெற்ற பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் முல்லைத்தீவைச் சேர்ந்த யுவதி ஒருவர் வெள்ளிப்பதக்கத்தை பெற்று முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்திருக் கிறார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற 45 ஆவது தேசிய ரீதியிலான பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டியில் வடக்கு மாகாணத்துக்கு வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் கிடைத்துள்ளன.

கடந்த 23ஆம் திகதி அநுராதபுரத்தில் இடம்பெற்ற இந்த போட்டியில் பெண்களுக்கான 48 கிலோ மீற்றர் ஓட்டப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி நந்தீஸ்வரன் ராதிகா வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தார்.

கடந்த வருடம் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பத்தாம் இடத்தைப் பெற்ற குறித்த யுவதி இம் முறை வெள்ளிப்பதக்கத்தை பெற்றமை முல்லைத்தீவு மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளதோடு பலரும் இவருக்கு பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த இந்திரஜித்து தமிழரசி தேசிய போட்டியில் முதன் முறையாக பங்குபற்றி வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# அடித்து நொருக்கினார் ஸ்மித் அவுஸ்திரேலிய அணி வெற்றி









சவுதம்டனில் நேற்று முன்தினம் நடந்த பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தியது.

உலகக்கோப்பைக்கு முன்னதாக நேற்று முன்தினம் நடந்த பயிற்சி ஆட்டத்தில் அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தெரிவு செய்தது.

அதன்படி களமிறங்கிய அவுஸ்திரேலிய அணியில் பின்ச் 14 ஓட்டங்களில் அவுட் ஆக, டேவிட் வோர்னர் 43 ஓட்டங்கள் விளாசினார். அதன் பின்னர் ஷான் மார்ஷ் 30 ஓட்டங்கள் எடுத்து பிளங்கெட் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் ஸ்டீவ் ஸ்மித் நங்கூரம் போல் நிலைத்து நின்று ஆடினார். விக்கெட் கீப்பர் கேரி அதிரடியாக 14 பந்துகளில் 30 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். இதற்கிடையில் சதம் விளாசிய ஸ்டீவ் ஸ்மித், 102 பந்துகளில் 116 ஓட்டங்கள் விளாசி கடைசி ஓவரில் அவுட் ஆனார்.

அவுஸ்திரேலிய அணி 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 297 ஓட்டங்கள் எடுத்தது. இங்கிலாந்து தரப்பில் லியாம் பிளங்கெட் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். இதனைத் தொடர்ந்து இங்கிலாந்து களமிறங்கியது.

ஜேசன் ராய் 32 ஓட்டங்களிலும், பேர்ஸ்டோ (12), ஸ்டோக்ஸ் (20) ஆகியோர் சொற்ப ஓட்டங்களிலும் வெளியேறினர். எனினும் வின்ஸ்-பட்லர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணியின் ஸ்கோர் 171 ஆக உயர்ந்தபோது பட்லர் 52 ஓட்டங்களில் அவுட் ஆனார்.

அதனைத் தொடர்ந்து வின்ஸ் (64) அவுட் ஆன நிலையில், மற்ற வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி 49.3 ஓவரில் 285 ஓட்டங்களுக்கு ஓல்-அவுட் ஆனது. வோக்ஸ் 40 ஓட்டங்கள் விளாசினார்.

அவுஸ்திரேலியா தரப்பில் பெஹ்ரெண்டிராப், ரிச்சர்ட்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி மீண்டும் பழைய போர்முக்கு வந்துள்ளது. (க)

# ராயுடு அப்படிப்பட்டவரல்ல 3டி கண்ணாடி விவகாரம்

## விஜய்சங்கர் பளார் பதில்



இந்திய கிரிக்கெட் வீரர் அம்பத்தி ராயுடுவின் விமர்சனத்திற்கு, ஓல்-ரவுண்டர் வீரர் விஜய் சங்கர் பதிலடி கொடுத்துள்ளார்.

உலகக்கோப்பைக்கான இந்திய அணியில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அம்பத்தி ராயுடு இடம்பெறவில்லை. அவருக்கு பதிலாக தமிழக வீரர் விஜய் சங்கர் அணியில் இடம்பிடித்தார். அதனைத் தொடர்ந்து, விஜய் சங்கரை விமர்சிக்கும் வகையில் 3டி கண்ணாடி வீரர் என்று தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்தார். அவரது விமர்சனத்திற்கு பல தரப்பில் இருந்தும் கண்டனங்கள் எழுந்தன.

இந்நிலையில், அம்பத்தி ராயுடுவின் விமர்சனத்திற்கு விஜய்சங்கர் தற்போது பதிலடி கொடுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், 'ஒரு வீரர் பெரிதும் எதிர்பார்த்திருந்த அணியில் தெரிவு பெறவில்லை என்றால், அவரது மனது எந்தளவுக்கு பாதிக்கப்பட்டு இருக்கும் என்று எனக்கு தெரியும்.

நானும் அதனை உணர்ந்திருக்கிறேன். ராயுடு என்னை மனதில் வைத்து கொண்டு அப்படி கூறி இருக்கமாட்டார். என் மீது அப்படி ஒரு விமர்சனம் வைத்தாலும் அதை பற்றி எனக்கு கவலை இல்லை.

நான் இந்திய அணிக்காக விளையாடுகிறேன். அதற்காக முழுவீச்சில் பயிற்சியில் ஈடுபட்டு, முழுத்திறனுடன் விளையாட வேண்டும். அதில் நான் முழு கவனம் செலுத்தி வருகிறேன். அதில் இருந்து எனது கவனம் சிதறாது' என தெரிவித்துள்ளார். (க)

# சிறுவர்களுக்கு முன்மாதிரியாச் செயற்படுவோம் உலகக் கிண்ண போட்டி குறித்து விராட்

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கோப்பையில் பங்கேற்கும் அணித்தலைவர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் பேசிய விராட் கோலி, சிறு வயதில் தான் உலகக் கோப்பையை தொலைக்காட்சியில் கண்டு ரசித்த அனுபவங்களை பகிர்ந்துள்ளார்.

மேலும், அவர் கூறியதாவது, தினசரி அடிப்படையில் இளம் குழந்தைகளுக்கு, ஒரு முன்மாதிரியாக மற்றும் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும், வெற்றிகளை விட அது முக்கியமானது.

நாங்கள் பல சர்வதேச போட்டிகளில் விளையாடி இருக்கிறோம், அதனால், பல அழுத்தங்களை சந்தித்துள்ளோம். ஆனால், உலகக்கோப்பை முற்றிலும் மாறுபட்டது. 1.3 பில்லியன் மக்கள் உங்கள் பின்னால் இருக்கின்றார்கள் என்பதே ஒரு மாறுபட்ட உணர்வு. இது ஒரு பெருமையான உணர்வு. அதற்கு நிகர் எதுவும் இல்லை.

நாங்கள் எங்கள் திறன்களை பூர்த்தி செய்து, ரசிகர் என்ன எதிர்பார்க்கிறார்களோ அதை காட்ட வேண்டும். முக்கியமாக நாட்டிற்காக செய்ய வேண்டும். எதிர்பார்ப்பு, உற்சாகம் ரசிகர்களுக்கு எப்படி இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்கிறோம். மேலும் அந்த விடயங்கள் அழுத்தம் நிறைந்த தருணங்களில் எங்களுக்கு உதவுகின்றன. முதல் முறையாக விளையாடும் வீரர்கள், ரசிகர்களிடமிருந்து வரும் அன்பு மற்றும் ஆற்றலை உணர்வார்கள். இது ஒரு அழகான விடயம் என கோலி குறிப்பிட்டுள்ளார். (க)

# வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட விளையாட்டு போட்டிகள் விக்ரோறியா கல்லூரி மற்றும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மைதானங்களில் இன்று 7.30 மணிக்கு நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தி.நா. ஆகுலன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் மற்றும் பாதுகாப்பை கருத்தில் கொண்டே இப்போட்டிகள் ஒரே நாளில் நடைபெறுகின்றன.

18 வயது ஆண்கள், 20 வயது ஆண், பெண் பிரிவினருக்குமான சகல போட்டிகளும் இன்றே நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஒரே வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் ஒரே தினத்தில் நடைபெறவிருப்பதால் ஒரு வீரர் 3 போட்டிகளில் தொடர்ச்சியாக ஒரே நாளில் பங்குபற்றும் போது பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டும் தனது திறமையை வெளிக்கொண்டு வருவதில் சில சவால்கள் இருப்பதாகவும் ஆசிரியர் மற்றும் விளையாட்டு வீரர்கள் தரப்பில் தெரிவிக் கப்படுகின்றது. (க-105)

## யாழ்ப்பாண நீதி...

முன்னிலையாகி சாட்சியமளிப்பார்.

இந்தத் தகவலை அவரது சட்ட ஆலோசகர் அணி தெரிவித்துள்ளது.

எனினும் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, மெதமுலானவில் டி.ஏ.ராஜபக்ஷ நினைவிடத்தை அமைப்பதற்கு 33.9 மில்லியன் ரூபாய் அரச நிதியை தவறாகப் பயன்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டு, கொழும்பு சிறப்பு மேல் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்படும் வழக்கு நாளாந்த விசாரணைக்காக ஜூன் 19ஆம் திகதி நியமிக்கப்பட்டுள்ளது.

மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் நடைபெறும் அந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் என்ற அடிப்படையில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கட்டாயம் முன்னிலையாக வேண்டும்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் இடம்பெறும் ஆள்கொணர்வு மனு மீதான விசாரணையில் சாட்சியமளிக்க கோத்தபாய ராஜபக்ஷ முற்படுவார் என்று அவரது சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் ஜூன் 21ஆம் திகதி முன்னிலையாகி சாட்சியமளிக்குமாறு கோத்தபாய ராஜபக்ஷவுக்கு அழைப்பாணை கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள், வழக்குக் கோவையை முழுமையாகப் படித்து வருவதாகவும் கூறியுள்ளனர்.

2011ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ்ப்பாண நகரில் நடைபெறவிருந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் ஈடுபட்டிருந்த மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களான லலித்குமார் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் ஆவரங்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்டனர்.

இதுதொடர்பாக அவர்களின் உறவினர்களால் 2012ஆம் ஆண்டு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆள் கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசாரணையின்போது, இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாக சம்பந்தப்பட்ட சாட்சிகளை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றுக்கு கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் 2012ஆம் ஆண்டு செப்ரெம்பர் 19ஆம் திகதி விசாரணைகள் ஆரம்பமாகின. ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, குகன் முருகானந்தனின் மனைவி, லலித்குமார் வீரராஜின் தந்தையார் ஆகியோர் ஆரம்பத்தில் சாட்சியமளித்திருந்தனர். தொடர்ந்து முன்னாள் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல உள்ளிட்ட சிலர் சாட்சியமளித்திருந்தனர்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் கடந்த 3ஆம் திகதி விளக்கத்துக்கு வந்தது.

இதன்போது சாட்சியம் வழங்குவதற்காக அழைக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மன்றில் முன்னிலையாகவில்லை. அவர் சார்பில் சட்டத்தரணி அமரசிங்க முற்பட்டார்.

சாட்சி இன்றைய தினம் மன்றில் முன்னிலையாக முடியவில்லை. அவர் மன்றால் தீர்மானிக்கப்பட்ட அடுத்த தவணையில் முற்பட்டு சாட்சியமளிப்பார் என்று சட்டத்தரணி மன்றுரைத்தார்.

அதனால் வழக்கு விசாரணையை வரும் ஜூன் 21ஆம் திகதிவரை ஒத்தி வைத்து நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (மு-3)

## ரிஷாத், ஹிஸ்புல்...

பிரிவினருக்கு பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தத் தகவலை பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

"அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஏ.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா இருவருக்கும் எதிராக பொலிஸ் தலைமையகத்துக்கு இரண்டு முறைப்பாடுகள் கிடைத்தன. அவை தொடர்பில் விசாரணை நடத்துமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன" என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று நாட்டில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்தியவர்களுடன் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகிய இருவருக்கும் தொடர்புகள் இருந்தன என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனினும் அவர்களுடைய பதவி நிலையைக் கருத்திற்கொண்டு பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தாத நிலையில் அவர்களுக்கு எதிராக இரண்டு முறைப்பாடுகள் பொலிஸ் தலைமையகத்துக்கு வழங்கப்பட்டுள்ளன.

அவை தொடர்பில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகிய இருவரிடமும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணை நடத்த உள்ளது. (மு-3)

## சர்ச்சைக்குரிய...

ஷாபியிடம் சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுப் பிரிவு சிறப்பு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

குருநாகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த வைத்தியர் நேற்று பிற்பகல் குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிறப்புக் குழுவினரால் பொறுப்பேற்கப்பட்டு; சி.ஐ.டியின் தலைமையகமான நான்காம் மாடிக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்நிலையிலேயே அவரிடம் தடுப்புக் காவலில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக கூறி குறித்த வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ள போதும், அவருக்கு எதிராக குடும்ப கட்டுப்பாடு விவகார குற்றச்சாட்டும் எழுந்துள்ள நிலையில் அது தொடர்பிலும் விசாரிக்க சி.ஐ.டி. தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் குறித்த வைத்தியருக்கு எதிராக குடும்ப கட்டுப்பாடு தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் அவற்றை குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்குமாறு பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ருவன் குணசேகர பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை தற்போதுவரை 10க்கு மேற்பட்டோர், கைதாகியுள்ள ஷாபி வைத்தியருக்கு எதிராக முறைப்பாடு அளித்துள்ளனர்.

32,29 வயதுகளையுடைய குருநாகல் மற்றும் வாரியபொல பகுதிகளைச் சேர்ந்த இரு பெண்களும் இந்த முறைப்பாடுகளை முன்வைத்துள்ளனர்.

தாம் திருமணமாகி சிறிது காலத்திலேயே கருத்தரித்ததாகவும், தமக்கும் சிசேரியன் சத்திர சிகிச்சை மூலமே குழந்தை பிறந்ததாகவும் அந்த சத்திர சிகிச்சையை ஷாபி வைத்தியரே முன்னெடுத்ததாகவும் கூறியுள்ளனர்.

இந்நிலையில் அதன் பின்னர் தமக்கு குழந்தை பேறு கிடைக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ள அவர்கள், தமக்கும் குறித்த வைத்தியரால் குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளதா என சந்தேகம் எழுவதாக கூறியுள்ளனர்.

இந் நிலையில் அந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டுள்ள வைத்தியசாலை, இன்றைய தினம் குறித்த பெண்கள் இருவரின் விருப்பத்தின் பேரில் அவர்களுக்கு குடும்ப கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பது குறித்த சோதனைகளுக்கு அவர்களை உட்படுத்த தீர்மானித்துள்ளது. (மு-3)

## ரிசாத், ஹிஸ்புல்...

றப்பட்டது. அதன்பின்னர், பத்திரிகையாளர் சந்திப்பு நடத்தப்பட்டு கட்சியின் தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

ஐ.எஸ். அமைப்பின் பின்னணியில் நடத்தப்பட்ட தாக்குதலுடன் தொடர்புடைய பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அரசியல்வாதிகளின் பின்னணியுடையவர்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாக உள்ள நிலையில் சந்தேகநபர்களை விடுவிக்க முயற்சித்ததாக இராணுவத் தளபதியும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், ரிஷாத் பதியுதீன், ஹிஸ்புல்லா ஆகியோர் தமது பதவிகளை துறந்து நீதி விசாரணையை எதிர்கொள்ள வேண்டும்.

இந்நிலையில், ரிஷாத் பதியுதீன் மறுக்கும் பட்சத்தில் ரெலோவின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரித்து வாக்களிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில், ரெலோ தலைமைக் குழு உறுப்பினர்கள் 24 பேரில், பதினொரு பேர் கலந்து கொண்டனர். அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், என்.ஸ்ரீகாந்தா, வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் உட்பட கட்சி பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (மு-3,250)

## 1687 மத்ரஸா...

றது.

இவ்வாறு வருகை தந்துள்ள சமய போதகர்கள் இடையே பயங்கரவாத ஐ.எஸ். ஐ.எஸ். செயற்பாட்டாளர்கள் இருக்கின்றார்களா? என்பது குறித்து விசாரணைகள் இடம்பெறாதுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

தாங்கியிருப்பதற்கான விசாவுடன் வரும் இந்த இஸ்லாமிய போதகர்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் அவர்களது பின்னணிகள் குறித்து பாதுகாப்பு அறிக்கை கூட பெறாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இலங்கைக்கு வருகை தந்தவுடன் மத்ரஸா பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ள அம்பாறை, திருகோணமலை, புத்தளம், கண்டி, கேகாலை மற்றும் குருநாகல் ஆகிய பிரதேசங்களுக்கு சென்று விடுகின்றனர்.

இங்கு அவர்கள் என்ன செய்கின்றார்கள் என எந்தவித விசாரணைகளும் இடம்பெறாதுள்ளதாகவும் புலனாய்வுத் தகவல்கள் தெரிவித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் நான்கு பேர் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த விரிவுரையாளர்களை இந்நாட்டுக்கு அழைத்துவர தலையிட்டுள்ளதாகவும் தகவல் வட்டாரங்களை ஆதாரம் காட்டி தெரிவிக்கப்படுகிறது. (மு-3)

## நாரஹேன்பிட்டி...

கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் நடந்த வியாழக்கிழமை முதல் நேற்று மாலை வரை 4 நாட்கள் மேற்கொண்ட பாரிய சுற்றிவளைப்பு தேடுதல்களின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருடன் 3000 இற்கும் அதிகமான இராணுவத்தினர் இந்த தேடுதல்களில் ஈடுபடுத்தப்பட்டனர். கொழும்பு கூட்டு நடவடிக்கை பணியகத்தின் வழிகாட்டலில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (மு-3)

## ரயில் மோதி...

மடு சந்தியில் நேற்றிரவு இடம்பெற்ற ரயில் விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இரணைமடுவைச் சேர்ந்த இராசேந்திரம் எனும் 62 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்று கொண்டிருந்த இரவு நேர தபால் ரயிலிலேயே இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உடலின் மேற்பகுதி வேறாகவும், இடுப்புக்கு கீழ் பகுதி வேறாகவும் காணப்பட்டது. இந்நிலையில் ரயில் பயணம் தாமதமடைந்ததுடன் சடலத்தை மீட்ட ரயில்வே அதிகாரிகள் சடலத்தை அடுத்த ரயில் நிலையத்தில் ஒப்படைத்து சென்றனர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-3,281)

## இலட்சத்தீவுக்கு...

வின் கேரளாவின் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தபட்டுள்ள தாக மாநில காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து கடந்த 23ஆம் திகதி கிடைத்த புலனாய்வு அறிக்கையை அடுத்து, இந்தியாவில் இந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநில கரையோர காவல் நிலையங்கள் மற்றும் கரையோர மாவட்டங்களில் காவல்துறை தலைவர்களுக்கு இதுபற்றிய முன்னெச்சரிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற எச்சரிக்கைகள் வழக்கமானதே என்ற போதும், இம்முறை தீவிரவாதிகளின் எண்ணிக்கை தொடர்பான தகவலும் இடம்பெற்றுள்ளதால், சந்தேகத்துக்குரிய கப்பல்கள், படகுகளை கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்று சிரேஷ்ட காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு தப்பிச் சென்றதாக கூறப்படும் ஐ.எஸ் தீவிரவாதிகள் தொடர்பில் கடற்படையினருக்கு எந்த தகவலும் உத்தியோகபூர்வமாக கிடைக்கவில்லை என கடற்படையின் ஊடக பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுரு சூரியபண்டார தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் வெளியாகியுள்ள தகவல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள கடற்படையினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தகவல் உண்மையாயின் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மற்றொரு செய்தி 7ஆம் பக்கத்தில்

(மு-3)

## இன்றும் நாளை...

இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றி லேயே ஞானசார தேரர் இவ்வாறு தெரி வித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

குறித்த தகவல்களை மிகவும் பொறுப்புடன் வெளியிடவுள்ளோம், என்றாலும் எந்த சந்தர்ப்பத்திலும், பிரச்சினைகளை ஏற்படுத்திக் கொள்ளாமல், பொறுமையுடன், தூரநோக்குடன் செயற்படுமாறு விசேடமாக இளைஞர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். பிரச்சினைகள் ஏற்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் எங்களுக்கே நஷ்டம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (மு-3)













# இந்தியா இந்துதேசம்; தீர்ப்பை இரத்துச் செய்தது உயர் நீதிமன்றம்

(சென்னை)

இந்தியா, 'இந்து தேசம்' என்று தனி நீதிபதி அளித்த சர்ச்சைக்குரிய தீர்ப்பை மேகாலய உயர் நீதிமன்றம் ரத்து செய்தது.

மேகாலயத்தில் ஒருவருக்கு மாநில அரசு இருப்பிடச் சான்று வழங்க மறுத்த விவகாரத்தை அந்த மாநில உயர் நீதிமன்றம் கடந்த டிசம்பரில் விசாரித்தது. அந்த வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.ஆர்.சென் சர்ச்சைக்குரிய வகையில் தீர்ப்பளித்தார்.

அவர் தனது தீர்ப்பில் கூறியிருந்ததாவது,

இந்தியா-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, பாகிஸ்தான் முஸ்லிம் நாடாக அறிவிக்கப்பட்டது. மதத்தின் அடிப் படையில் நாட்டை பிரித்ததால், அப்போதே இந்தியாவை இந்து நாடாக அறிவித்திருக்க வேண்டும்.

மேலும், இந்தியாவின் சட்டங்கள், அரசமைப்புச் சட்டம் ஆகியவற்றை எதிர்ப்போர் யாராக இருந்தாலும், அவர்களை இந்திய குடிமக்களாகக் கருதக் கூடாது என்று நீதிபதி எஸ்.ஆர்.சென் தனது தீர்ப்பில் கூறியிருந்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம், மேகாலய உயர் நீதிமன்றத்தில்தலைமை நீதிபதி முகமது யாகூப் மீர் தலைமையிலான அமர்வு முன் நேற்று முன்தினம் சனிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள் கூறியதாவது,

நீதிபதி எஸ்.ஆர்.சென் அளித்த தீர்ப்பு, சட்ட ரீதியில் குறைபாடுகள் கொண்டது. அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணானது. அரசமைப்புச் சட்டத்தின் முகவுரைக்கு நேரடியாகவோ, மறைமுகமாவோ பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு தீர்ப்பையும் ஏற்க முடியாது.

அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகளையும், நாட்டின் மதச் சார்பின்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் தனி நீதிபதியின் தீர்ப்பு விலக்கி வைக்கப்படுகிறது என்று நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்தனர்.(மு-3)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்
ராஜ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.
தொடர்பு: ராஜ் - 077 679 6623 (8940)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
CNR World Wide Express
021 5674145
077 2931062
077 6655413

மலேசிய வேலைவாய்ப்பு
பணிப்பெண்கள்
மலேசிய தமிழ் வீடுகளில் பாதுகாப்பான வேலை ஏற்பாடு!
முற்றிலும் இலவச பயணம் சம்பளம் ரூ.58,000/-
விபரங்களுக்கு 077 00 38 215, 021 221 9 221
எமரல்ட் ஐல் 221-1/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு
UK - 550 /-Kg
கனடா - 900 /-Kg
ஜேர்மனி - 700 /-Kg
நெதர்லாந்து - 700 /-Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
மானிப்பாய் யாழ்ப்பாணம் கிளிநொச்சி சாவகச்சேரி நெல்லியடி பருத்தித்துறை வல்வெட்டித்துறை
V2 TRAVELS

வாகனங்கள் வாடகைக்கு உண்டு
கார்கள், வான்கள் சாரதி உடன்/சாரதி அல்லாமல் பெற்றுக் கொள்ளலாம். மற்றும் விமான நிலையத்திற்கான பயணிகள் ஏற்றுதல், இறக்குதல், திருமணத் தேவைகளுக்கான ஆடம்பரக் கார்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
070 133 3111 (8944)

SAM Kingstom College
I.E.L.T.S
TOEFL
30.05.2019
Diploma in English
Spoken English
Advanced English IT பிரான்ஸ் மொழி
Sinhala- சிங்களம் ஜேர்மன் மொழி
மூன்று மாதம் -4000.00
Spoken English
3 Months கட்டணம் 6000
(சான்றிதழ் வழங்கப்படும்)
குறைந்த கட்டணத்தில் பாடநெறிகள்
வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும் (8937)
95, செம்மணி றோட், நல்லூர், யாழ்ப்பாணம். T.P: 077 593 9760 070 463 9099

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 02 . 12 . 1936



மறைவு 27 . 04 . 2019

## அமரர் நவமணி வேலுப்பிள்ளை

கடந்த 27.04.2019 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (27.05.2019) அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வருகைதந்து ஆறுதல் தெரிவித்தோர், சகல வழிகளிலும் உதவிபுரிந்தோர், இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும் தொலைபேசி, முகநூல், Whatsapp வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோர், வைத்தியர்கள், ஆசிரியர்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தயவுசெய்து இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை.

தகவல்: குடும்பத்தினர்
021 226 4230
077 961 1993

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கான
யுனிலங்காஸ் வெளியீடுகள்
தற்போது விற்பனையில்!
வெற்றிக்கு வழிகாட்டி
(24 மாதிரி வினாத்தாள்கள்) விலை 275/-
பூமாலை
(15 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்) விலை 700/-
சுற்றாடல் மாதிரி வினாத்தாள்
(12 மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன்) விலை 150/-
(தொகுதி -1, தொகுதி -2, தொகுதி -3)
விவேக நுண்ணறிவு வழிகாட்டி
(நுண்ணறிவு வினாக்களும் விடைகளும்) விலை 525/-
புலமைத்தேர்வு
65 அலகு ரீதியான பயிற்சிகளும் அதற்கான விடைகளும்
கணிதம் - 23 அலகுகள், தமிழ் - 24 அலகுகள், சுற்றாடல் - 15 அலகுகள்
ஆங்கிலம், சிங்களம், பொதுஅறிவு, நுண்ணறிவு
அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள்
முதன்மை நிலை 1 (தரம்-1, தரம்-2)
முதன்மை நிலை 2 (தரம்-3, தரம்-4)
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
தொடர்புகளுக்கு யுனிலங்காஸ் 077 6258778 (C-6479)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.
20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.05.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.